போதுசாந்தும்புகையுங்கொடுத்தவர்க், கேதமெய்துதலில்லையே. (ங)

ஆழ்கடலெனக்கங்கைகரந்தவன், வீழ்சடையினன்வேற்காடு
தாழ்வுடைமனத்தாற்பணிந்தேத்திடப், பாழ்படும்மவர்பாவமே. (ச)

காட்டினுள்ளுமயர்த்திடக்காலனே, வீட்டினுணுறைவேற்காடு
பாட்டினற்பணிந்தேத்திடவல்லவ, ரோட்டினர்வினையொல்லையே. (ஞ)

தோலினுடையுடைமேவவல்லான்கடர், வேலினுணுறைவேற்காடு
நாலினற்பணிந்தேத்திடவல்லவர், மாலினர்வினைமாயுமே. (ட)

மல்லன்மும்மதின்மாய்தரவெய்ததோர், வில்லினுணுறைவேற்காடு
சொல்லவல்லசிருற்றார்மனத்தவர், செல்லவல்லவர்திக்கமே. (ஏ)

மூரல்வெண்மதிசூடுமுடியுடை, வீரன்மேவியவேற்காடு
வாரமாய்வழிபாடுசெய்தவர், சேர்வர்செய்கழறிண்ணமே. (அ)

பரக்கினார்படவெண்டலையிற்பலி, விரக்கினாலுறைவேற்காட்டு
ரரக்கனுண்மையடர்ப்பட்டானிறை, நெருக்கினானினைமினே. (கூ)

மாறிலாமலராளெடுமாலவன், வேறலாலுறைவேற்கா
டுறிலாமொழியேமொழியாவெழில், கூறினார்க்கில்லைகுற்றமே. (கo)

விண்டமாம்பொழில்சூழ்தருவேற்காடு, கண்டுநம்பன்கழல்பேணிச்
சண்பைஞானசம்பந்தனசெந்தமிழ், கொண்டுபாடக்குணமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வேற்காட்டீசுவரர், தேவியார் - வேற்கண்ணியம்மை.

திருக்காவிரம் - பண் - பழந்தக்காகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியுமம்வினையுள்ளனவாசற, வரிகொள்மாமணிபோற்கண்டங்
கரியவன்றிகழுங்காவிரத்தெம், பெரியவன்கழல்பேணவே. (க)

தங்குமோவினைதாழ்சடைமேலவன், திங்களோடுடன்சூடிய
கங்கையான்றிகழுங்காவிரத்தெஞ், சங்கரன்கழல்சாரவே. (உ)

ஏதம்வந்தடையாவினிநல்லன, பூதம்பல்படையாக்கிய
காதலான்றிகழுங்காவிரத்தெம், நாதன்பாதநணுகவே. (ங)

பறையுமம்வினையுள்ளனபாழ்பட, மறையுமாமணிபோல்கண்டங்
கறையவன்றிகழுங்காவிரத்தெம், மிறையவன்கழலேத்தவே. (ச)

பண்ணினார்மறைபாடலனுடலன், விண்ணினார்மதிளெய்தமுக்
கண்ணினானுறையுங்காவிரத்தை, கண்ணுவார்வினைநாசமே. (ஞ)

நிழலினார்மதிசூடினனீள்சடை, யழலினாரனலேந்திய
கழலினானுறையுங்காவிரத்தைத், தொழவல்லார்க்கில்லைதுக்கமே. (ரு)

வண்டர்மும்மதிண்மாய்தாவெய்தவ, ணண்டனாழல்போலொளி
கண்டனாருறையுங்காவிரத்துத், தொண்டர்மேற்றுயர்தூரமே. (எ)

புனலிலங்கையர்கோன்முடிபத்திறச், சினவலாண்மைசெகுத்தவன்
கனலவனுறைகின்றகாவிர, மெனவல்லார்க்கிடரில்லையே. (அ)

வெள்ளத்தாமரையாளெடுமாலுமாய்த், தெள்ளத்தித்திராளாகிய
கள்ளத்தானுறையுங்காவிரத்தை, யுள்ளத்தான்வினையோயுமே. (கூ)

செடியமெண்ணுடைசீவரத்தாரவர், கொடியவெவ்வுரைகொள்ளன்மின்
கடியவன்னுறைகின்றகாவிரத், தடியவர்க்கில்லையல்லலே. (கo)

வீடிலான்விளங்குங்காவிரத்தெஞ், சேடன்மேற்கசிவாற்றமிழ்
நாடிஞானசம்பந்தனசொல்லிவை, பாடுவார்க்கில்லைபாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கரவீரேசுவரர், தேவியார் - பிரத்தியக்ஷமின்னுள்.

திருத்தூங்கானைமாடம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஓடுங்கும்பிணிபிறவிகேடென்றிவையுடைத்தாயவாழ்க்கையொழியத்தவ
மடங்குமிடங்கருதிநின்றீரெல்லாமடிகளடிநிழற்கீழாளாம்வண்ணங்
கிடங்குமதிளுஞ்சுலாவியெங்குங்கெழுமனைகடோறுமறையின்னெலி
தொடங்குங்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே.

பிணிநீரசாதல்பிறத்தலிவைபிரியப்பிரியாதபேரின்பத்தோ
டணிநீரமேலுலகமெய்தலுறிலறிமின்குறைவில்லையானேறுடை
மணிநீலகண்டமுடையபிரான்மலைமகளுந்தானுமகிழ்ந்துவாழுந்
துணிநீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே.()

சாகாலும்வாழ்காலுந்தோற்றமிவைசலிப்பாயவாழ்க்கையொழியத்தவ
மாமாறறியாதலமந்துநீரயர்ந்துங்குறைவில்லையானேறுடைப்
பூமாணலங்கலிலங்குகொன்றைபுனல்பொதிந்தபுன்சடையினுறையுந்
தூமாண்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. ங

ஊன்றுமிம்பிணிபிறவிகேடென்றிவையுடைத்தாயவாழ்க்கையொழியத்தவ
மான்றுமனங்கருதிநின்றீரெல்லாமனந்திரிதுமண்ணின்மயங்காதுநீர்
மூன்றுமதிளெய்தமூவாச்சிலைமுதல்வர்க்கிடம்போலுமுகிழ்ரெய்கொடி
தோன்றுங்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே.

மயறீர்மையில்லாததோற்றமிவைமரணத்தொடொத்தழியுமாறுதலால்
வியறீரமேலுலகமெய்தலுறின்மிக்கொன்றுமில்வேண்டாவிமலனிட
முயர்தீரவோங்கியநாமங்களாலோவாதுகாலுமடிபரவல்செய்
துயர்தீர்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே.(டு)

பன்னீர்மைகுன்றிச்செவிகேட்பில்படர்நோக்கிற்கண்பவளங்கிற
ரன்னீர்மைகுன்றித்திரைதோலொடுநரைதோன்றுங்காலமக்காதன்மூன்
பொன்னீர்மைதன்றப்புறந்தோன்றுநற்புனல்பொதிந்தபுன்சடையினுறையுந்
தொன்னீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே.

இறையூண்டகளோடிடுக்கனெய்தியிழிப்பாயவாழ்க்கையொழியத்தவ
நிறையுணர்கருதிநின்றீரெல்லாநீள்கழலேநாளுநினைமின்சென்னிப்
பிறைசூழலங்கலிலங்குகொன்றைபிணையும்பெருமான்பிரியாதநீர்த்
துறைசூழ்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே.

பல்லீழ்த்துராத்தளர்த்துமெய்யில்வாடிப்பழிப்பாயவாழ்க்கையொழியத்தவ
மில்சூழிடங்கருதிநின்றீரெல்லாமிறையேபிரியாதெழுந்துபோதுங்

கல்சூழாக்கன்கதறச்செய்தான்காதலியுத்தானுங்கருதிவாழுந்
தொல்சீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்காணைமாடந்தொழுமின்களே.

கோயும்பிணியுமருத்துயாமுதுகருடையவாழ்க்கையொழியத்தவம்
வாயுமனங்கருதின்றீசொல்லாமலர்மிசையான்முகனுமண்ணும்விண்ணுந்
தாயவடியளந்தான்காணமாட்டாத்தலைவர்க்கிடமாபோலுந்தண்சோலைவிண்
டோயுங்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்காணைமாடந்தொழுமின்களே.(கூ)

பகரேர்பசலியநோய்வருதலாற்பழிப்பாயவாழ்க்கையொழியத்தவ
முகரேர்மயிர்கடிந்தசெய்கையாருமூடுதுவராடையருகாடிச்சொன்ன [மூர்
திகடீர்ந்தபொய்மொழிகடேறவேண்டாதிருந்திழையுத்தானும்பொருந்திவா
துகடீர்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்காணைமாடந்தொழுமின்களே. (கo)

மண்ணூர்முழவதிருமாடவீதிவயற்காழிஞானசம்பந்தனல்ல [ன்
பெண்ணுகடத்துப்பெருங்கோயில்சேர்பிறையுரிஞ்சுதூங்காணைமாடமேயா
கண்ணூர்கழல்பரவுபாடல்பத்துங்கருத்துணரக்கற்றுருங்கேட்டாரும்போய்
விண்ணூருலகத்துமேவிவாழுமவியதுவேயாகுமவினைமாயுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சுடர்க்கொழுந்தீசர், தேவியார் - கடந்தைநாயகி.

திருத்தோணிபுரம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டரங்கப்புனற்கமலமதுமாந்திப்பெடையினெடு
மொண்டரங்கவிசைபாடுமளியரசேயொளிமதியத்
தண்டரங்கப்பூண்மார்பர்திருத்தோணிபுரத்துறையும்
பண்டரங்கர்க்கென்னிலைமைபரிந்தொருகால்பகராயே. (க)

எறிசுரவங்கழிக்கானலிளங்குருகேயென்பயலை
யறிவுறுதொழிவதுவுமருவினையின்பயனன்றே
செறிசிறார்பதமோதுந்திருத்தோணிபுரத்துறையும்
வெறிகிளர்மலர்க்கண்ணிவேதியர்க்குவிளம்பாயே. (உ)

பண்பழனக்கோட்டகத்துவாட்டமிலாஞ்செஞ்சூட்டுக்
கண்பகத்தின்வாரணமேகடுவினையேனுறுபயலை
செண்பகஞ்சேர்பொழில்புடைசூழ்திருத்தோணிபுரத்துறையும்
பண்பனுக்கென்பரிசுரைத்தாற்பழியாமோமொழியாயே. (ங)

காண்டகையசெங்காலொண்கழிநாராய்காதலாற்
பூண்டகையமுலைமெலிந்துபொன்பயந்தாளென்றுவளர்
சேண்டகையமணிமாடத்திருத்தோணிபுரத்துறையு
மாண்டகையாற்கின்றேசென்றடியறியவுணர்த்தாயே. (ச)

பாராரேயினையொருகாற்றுழுகின்றேன்பாங்கமைந்த
காராருஞ்செழுநிறத்தப்பவளக்காற்கதிர்ப்பாண்

தேரார்வெவ்வீதித்திருத்தோணிபுரத்துறையும்
நீரார்சுஞ்சடையாருக்கென்னிலேமைநிகழ்த்தீரே. (இ)

சேற்றெழுந்தமலர்க்கமலச்செஞ்சாலிகதிர்வீச
வீற்றிருந்தவன்னங்காள்விண்ணேடுமண்மறைகள்
தேற்றுவித்ததிருத்தோணிபுரத்தீசன்றுளங்காத
கூற்றுதைத்ததிருவடியேகூடுமோகூறீரே. (கூ)

மூன்றில்வாழ்மடற்பெண்ணேர்க்குரம்பைவாழ்முயங்குசிறை
யன்றில்காள்பிரிவுறுநோயறியாதீர்மிகவல்லீர்
தென்றலார்புகுந்தலவுதிருத்தோணிபுரத்துறையுங்
கொன்றைவார்சடையார்க்கென்கூர்பயலைகூறீரே. (எ)

பானறுமலர்ச்சூதப்பல்லவங்களைவகோதி
யேனேர்க்குமினிதாகமொழியுமெழிலிளங்குயிலே
தேனருமும்பொழில்புடைசூழ்திருத்தோணிபுரத்தமார்
கோனுரையென்னிடத்தேவாவொருகாற்கூவாயே. (அ)

நற்பதங்கள்மிகவறிவாய்நானுன்னைவேண்டுகின்றேன்
பொற்பமைந்தவாயலகிற்பூவைகல்லாய்போற்றுகின்றேன்
சொற்பதஞ்சேர்மறையாளர்திருத்தோணிபுரத்துறையும்
விற்பொலிதோள்விகிர்தனுங்கென்மெய்ப்பயலேவிளம்பாயே. (கூ)

சிறையாருமடக்கிளியேயிங்கேவாதேனெடுபால்
முறையாலேயுணத்தருவேன்மொய்பவளத்தொடுதாளந்
துறையாருங்கடற்றோணிபுரத்தீசன்றுளங்குமிளம
பிறையாளன்றிருநாமமெனக்கொருகாற்பேசாயே. (கூ)

போர்மிகுத்தவயற்றோணிபுரத்துறையும்புரிசடையெங்
கார்மிகுத்தகறைகண்டத்திறையவனேவண்கமலத்
தார்மிகுத்தவரைமார்பன்சம்பந்தனுரைசெய்த
சீர்மிகுத்ததமிழ்வல்லார்சிவலோகஞ்சேர்வாரே. (கஅ)

திருச்சிற்றம்பலம்.

திருச்செங்காட்டங்குடி - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கறைகொண்டமலர்தூவிவிரையளிப்பகாடோறு
முறைகொண்டுநின்றடியார்முட்டாமேபணிசெய்யச்
சிறைகொண்டவண்டறையுஞ்செங்காட்டங்குடியதனுட்
கறைகொண்டகண்டத்தான்கணபதீச்சரத்தானே. (க)

வாரேற்றபறையொலியுஞ்சங்கொலியும்வந்தியம்ப
வூரேற்றசெல்வத்தோடோங்கியசீர்விழவோவாச்
சீரேற்றமுடைத்தாயசெங்காட்டங்குடியதனுட்
காரேற்றகொன்றையான்கணபதீச்சரத்தானே. (உ)

வரத்தையான்சோபுரத்தான்மந்திரத்தான்றந்திரத்தான்
கிரத்தையான்கோவணத்தான்கிங்கிணியான்கையதோர்
சிரத்தையான்செங்காட்டங்குடியான்செஞ்சடைசேருங்
கரத்தையான்வெண்ணீற்றான்கணபதீச்சரத்தானே. (கூ)

தொங்கலுங்கமழ்சாந்துமகிற்புகையுந்தொண்டர்கொண்
டங்கையாற்றொழுதேத்தவருச்சுனற்கன்றருள்செய்தான்
செங்கயல்பாய்வயலுடுத்தசெங்காட்டங்குடியதனுட்
கங்கைசேர்வார்சடையான்கணபதீச்சரத்தானே. (சு)

பாலினைநுகெய்யாற்பழத்தினற்பயின்றாட்டி
நூலினன்மணமாலைகொணர்ந்தடியார்புரிந்தேத்தச்
சேலினர்வயல்புடைசூழ்செங்காட்டங்குடியதனுட்
காலினற்கூற்றுதைத்தான்கணபதீச்சரத்தானே. (டு)

றுண்ணியான்மிகப்பெரியானெவுளார்வாயுளான்
தண்ணியான்வெய்யானந்தலைமேலான்மனத்துளான்
றிண்ணியான்செங்காட்டங்குடியான்செஞ்சடைமதியக்
கண்ணியான்கண்ணுதலான்கணபதீச்சரத்தானே. (கூ)

மையினர்மலர்நெடுங்கண்மலைமகளோர்பாகமா
மெய்யினன்பையரவமரைக்கசைத்தான்மீன்பிறழச்
செய்யினர்தண்கழனிச்செங்காட்டங்குடியதனுட்
கையினர்கூரியான்கணபதீச்சரத்தானே. (எ)

தோடுடையான்குழையுடையானரக்கன்றன்றோளடர்த்த
பீடுடையான்போர்விடையான்பெண்பாகமிகப்பெரியான்
சேடுடையான்செங்காட்டங்குடியுடையான்சேர்ந்தாடுங
காடுடையானுடையான்கணபதீச்சரத்தானே. (அ)

ஆனூராவுழிதருவானன்றிருவர்தேர்ந்துணரா
வானூரான்வையகத்தான்வாழ்த்துவார்மனத்துளான்
தேனூரான்செங்காட்டங்குடியான்சிற்றம்பலத்தான்
கானூரான்கழுமலத்தான்கணபதீச்சரத்தானே. (கூ)

செடிறுகருஞ்சமணர்களுஞ்சீவரச்சாக்கியரும்
படிறுகராதயருழப்பாக்கருளாதபண்பினன்
பொடிறுகருஞ்சிறுத்தொண்டர்க்கருள்செய்யும்பொருட்டாகக்
கடிகோர்வீற்றிருந்தான்கணபதீச்சரதானே. (கூ)

கறையிலங்குமலர்க்குவளைகண்காட்டக்கடிபொழிலின்
னறையிலங்குவயற்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
சிறையிலங்குபுனற்படப்பைச்செங்காட்டங்குடிசேர்த்து
மறையிலங்குதமிழ்வல்லார்வானுலகத்திருப்பாரே. (கூ)

சோழாட்டிலுள்ளது. திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கணபதீசுவரர், தேவியார் - திருக்குழல்மாதம்மை.

ஆறாம் பதிகம் - முற்றும்.

திருக்கோளிலி - பண் - பழந்தக்காகம்.

திருச்சிற்றம்பலம்.

காளானபோகாமேகஞ்சணியுங்கண்டனுக்கே
யாளாயவன்புசெய்வோமடநெஞ்சேயரணமங்
கேளாய்கங்கிளகிளக்குங்கேடிலாத்திறமருளி
கோளாயநீக்குமவன்கோளிலியெம்பெருமானே. (க)

ஆடரவத்தழகாமையணிகிழற்கொம்பார்த்த
தோடரவத்தொருகாதன்றுணைமலர்கற்சேவடிக்கே
பாடரவத்திசைபயின்றுபணிசெதாழுவார்தம்மனத்திற்
கோடரவங்தீர்க்குமவன்கோளிலியெம்பெருமானே. (உ)

கன்றுகுணமலால்கல்லிருக்குமந்திரங்கொண்
டொன்றிவழிபாடுசெயலுற்றவன்றனேங்குயிர்மேற்
கன்றிவருகாலனுயிர்கண்டவனுக்கன்றளித்தான்
கொன்றைமலர்பொன்றிகழுங்கோளிலியெம்பெருமானே. (ங)

வந்தமணலாலிலிங்கமண்ணியின்கட்பாலாட்டுஞ்
சிந்தைசெய்வோன்றன்கருமந்தேர்ந்துசிதைப்பான்வருமத்
தந்தைதனைச்சாடுதலுந்தண்டீசனென்றருளிக்
கொந்தணவுமலர்கொடுத்தான்கோளிலியெம்பெருமானே. (ச)

வஞ்சமருத்தஞ்சொடுக்கிவைகலுநற்பூசனையால்
நஞ்சமுதுசெய்தருளுநம்பியெனவேகினையும்
பஞ்சவரிற்பார்த்தனுக்குப்பாசுபதமீந்துகந்தான்
கொஞ்சுகிளிமஞ்சணவுங்கோளிலியெம்பெருமானே. (ஞ)

தாவியவனுடனிருந்துங்காணுததற்பரனை
யாவிதனிலஞ்சொடுக்கியங்கணனென்றுதரிக்கு
காவியல்சீர்மிகுந்தியடிகளுக்குரல்குமவன்
கோவியலும்பூவெழுகோற்கோளிலியெம்பெருமானே. (ஙு)

கன்னவிலுமால்வையான்கார்திகழுமாமிடற்றன்
சொன்னவிலுமாமறையான்றோத்திரஞ்சேர்வாயினுளான்
மின்னவிலுஞ்செஞ்சடையான்வெண்பொடியாணங்கையினிற்
கொன்னவிலுஞ்சூலத்தான்கோளிலியெம்பெருமானே. (எ)

அந்தாத்திற்றேரூருமரக்கன்மலையன்றெடுப்பச்
சுந்தரத்தன்றிருவிரலாலூன்றவவனுடல்சோரிந்து
மந்திரத்தமறைபாடவாளவனுக்கீந்தானுங்
கொந்தரத்தம்திகழ்சென்னிக்கோளிலியெம்பெருமானே. (அ)

தாணுமுடைவேதியனுராணுவண்ணவொணுத்
தாணுவெனையாளுடையான்றன்னடியார்க்கன்புடைமை

பாணனிசைபத்திமையாற்பாடுதலும்பரிந்தளித்தான்
கோணவிளம்பிறைச்சென்னிக்கோளிலியெம்பெருமானே. (கூ)

தடுக்கமருஞ்சமணரொதெக்கசாத்திரத்தவர்சொல்
லிடுக்கண்வருமொழிகேளாதீசனேயேத்துமின்க
ணடுக்கமிலாவமருலகுண்ணலுமாமண்ணல்கழல்
கொடுக்கதிலாவரங்கொடுக்குங்கோளிலியெம்பெருமானே. (கo)

கம்பனைகல்லடியார்கள்காமுடைமாடென்றிருக்குங்
கொம்பனையாள்பாகனெழிற்கோளிலியெம்பெருமானை
வம்பமருந்தண்காழிச்சம்பந்தன்வண்டமிழ்கொண்
டின்பமரவல்லார்களெய்துவர்களீசனேயே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கோளிலியப்பர், தேவியார் - வண்டமர்பூங்குழலம்மை.

திருப்பிரமபுரம் - பல்பெயர்ப்பத்து - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

எரியார்மழுவொன்றேந்தியங்கையிடதலையேகலனு
வரியார்வளையாளையம்வவ்வாய்மாநலம்வவ்வுதியே
சரியாநாவின்வேதகீதன்றுமரைநான்முகத்தன்
பெரியான்பிரமன்பேணியாண்டபிரமபுரத்தானே. (க)

பெயலார்சடைக்கோர்திங்கள்சூடிபெய்பலிக்கென்றயலே
கியலார்தடங்கணஞ்சொல்லார்கண்டியில்வவ்வுதியே
இயலானடாவியின்பமெய்தியிதிரனுள்மண்மேல்
வியலார்முரைசமோங்குசெம்மைவேணுபுரத்தானே. (உ)

நகலார்தலையும்வெண்பிறையுளிர்சடைமாட்டயலே
பகலாப்பலிதேர்ந்தையம்வவ்வாய்பாய்கலைவவ்வுதியே
யகலாதுறையுமாநிலத்திலயலின்மையாலமரர்
புகலால்மலிந்தபூம்புகலிமேவியபுண்ணியனே. (ஙு)

சங்கோடிலங்கத்தோடுபெய்துகாதிலோர்தாழ்குழைய
னங்கோல்வளையாளையம்வவ்வாயானலம்வவ்வுதியே
செங்கோல்நடாவிப்பல்லுயிர்க்குஞ்செய்வினைமெய்தெரிய
வெங்கோத்தருமன்மேவியாண்டவெங்குருமேயவனே. (ச)

தணிநீர்மதியஞ்சூடிநீடுதாங்கியதாழ்சடையன்
பிணிநீர்மடவாரையம்வவ்வாய்பெய்கலைவவ்வுதியே
யணிநீருலகமாகியெங்குமாழ்கடலாலழுங்கத்
துணிநீர்பணியத்தான்மிதத்ததோணிபுரத்தானே. (ஞ)

கவர்பூம்புனலுந்தண்மதியுங்கமழ்சடைமாட்டயலே
யவர்பூம்பலியோடையம்வவ்வாயானலம்வவ்வுதியே

யவர்பூணரையர்க்காதியாயவடன்மன்னனுள்மண்மேற்
றவர்பூம்பதிகளெங்குமெங்குந்தங்குதராயவனே. (சு)

முலையாள்கெழுமமொர்தைகொட்டமுன்கடைமாட்டயலே
நிலையாப்பலிதேர்ந்தையம்வவ்வாய்நீலம்வவ்வுதியே
தலையாய்க்கிடந்திவ்வையமெல்லாந்தன்னதோராதனடாய்ச்
சிலையால்மலிந்தசீர்ச்சிலம்பன்சிபுரமேயவனே. (எ)

எருதேகொணர்கென்றேறியங்கையிடதலையேகலனாக்
கருதேர்மடவாரையம்வவ்வாய்கண்டுயில்வவ்வுதியே
யொருதேர்கடாவியாரமருளொருபதுதோடுலையப்
பொருதேர்வலவன்மேவியாண்டபுறவமர்புண்ணியனே. (அ)

துவர்சேர்கலிங்கப்போர்வையாருந்தூய்மையிலாச்சமணுங்
கவர்செய்துழலக்கண்டவண்ணங்காரிகைவார்குழலா
ரவர்பூம்பலியோடையம்வவ்வாயானலம்வவ்வுதியே.
தவர்செய்நெடுவேற்சண்டனுளச்சண்பையமர்ந்தவனே. (கூ)

நிழலார்மலிந்தகொன்றைசூடிநீறுமெய்பூசிநல்ல
குழலார்மடவாரையம்வவ்வாய்கோல்வளைவவ்வுதியே
யழலாயுலகங்கவ்வைதீரவைந்தலைநீண்முடிய
கழல்காகரையன்காவலாகக்காழியமர்ந்தவனே. (கo)

கட்டார்துளாயன்தாமரையானென்றிவர்காண்பரிய
சிட்டார்பலிதேர்ந்தையம்வவ்வாய்செய்கலைவவ்வுதியே
நட்டார்நடுவேநந்தனுளல்வினையாலுயர்ந்த
கொட்டாறுடுத்ததண்வயல்சூழ்கொச்சையமர்ந்தவனே. (கக)

கடையார்கொடிநன்மாடவீதிக்கழுமலவூர்க்கவுணி
கடையார்பனுவன்மாலையாகஞானசம்பந்தனல்ல
படையார்மழுவன்றன்மேல்மொழிந்தபல்பெயர்ப்பத்தும்வல்லார்க்
கடையாவினைகளுலகில்காலுமமரருலகாள்பவரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

தீருப்பூவணம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அறையார்புனலுமாமலருமாடரவார்சடைமேற்
குறையார்மதியஞ்சூடிமாதோர்கூறுடையாணிடமா
முறையால்முடிசேர்தென்னர்சேரர்சோழர்கடாம்வணங்குந்
திறையாரொளிசேர்செம்மையோங்குதென்திருப்பூவணமே. (க)

மருவார்மதில்மூன்றெரன்றவெய்துமாமலையான்மடந்தை
யொருபால்பாகமாகச்செய்தவும்பர்பிரானவனூர்
கருவார்சாலியாலைமல்கிக்கழல்மன்னர்காத்தளித்த
திருவால்மலிந்தசேடர்வாழ்தென்திருப்பூவணமே. (உ)

போரார்மதமாவுரிவைபோர்த்துப்பொடியணிமேனியனைய்க்
காரார்கடலினஞ்சமுண்டகண்ணுதல்விண்ணவனூர்
பாரார்வைகைப்புனல்வாய்ப்பரப்பிப்பன்மணிபொன்கொழித்துச்
சீரார்வாரிசேரின்றதென்திருப்பூவணமே. (உ)

கடியாரலங்கற்கொன்றைசூடிக்காதிலோர்வார்குழையன்
கொடியார்வெள்ளேயுகந்தகோவணவன்னிடமாம்
படியார்கூடிநீடியோங்குபல்புகழாற்பரவச்
செடியார்வைகைசூழின்றதென்திருப்பூவணமே. (ச)

கூரார்வாளிசிலையிற்கோத்துக்கொடிமதில்கூட்டழித்த
போரார்வில்லிமெல்லியலாளோர்பால்மகிழ்ந்தானிடமா
மாராவன்பிற்றென்னர்சேரர்சோழர்கள்போற்றிசைப்பத்
தேரார்வீதிமாடநீடுதென்திருப்பூவணமே. (ரு)

கன்றுதீதென்றுன்றிலாதநான்மறையோன்கழலே
சென்றுபேணியேத்தின்றதேவர்பிரானிடமாங்
குன்றிலொன்றியோங்கமல்குகுளிர்பொழில்சூழ்மலர்மேற்
றென்றலொன்றிமுன்றிலாருந்தென்திருப்பூவணமே. (சு)

பைவாயரவமரையிற்சாத்திப்பாரிடம்போற்றிசைப்ப
மெய்வாய்மேனிநீறுபூசியேறுகந்தானிடமாங்
கைவாழ்வளையார்மைந்தரோடுங்கலவியினல்லெருங்கிச்
செய்வார்தொழிலின்பாடலோவாத்தென்திருப்பூவணமே. (எ)

மீடவீதிமன்னிலங்கைமன்னனைமாண்பழித்துக்
கூடவென்றிவாள்கொடுத்தாள்கொள்கையினர்க்கிடமாம்
பாடலோடுமாடலோங்கிப்பன்மணிபொன்கொழித்து
ஓடநீரால்வைகைசூழுமூர்திருப்பூவணமே. (அ)

பொய்யாவேதாவினனும்பூமகள்காதலனுங்
கையாற்றொழுதுகழல்கள்போற்றக்கனலெரியானவனூர்
மையார்பொழிலின்வண்டுபாடவைகைமணிகொழித்துச்
செய்பார்கமலந்தேனரும்புந்தென்திருப்பூவணமே. (கூ)

அலையார்புனலேற்றவருந்தேரருமன்புசெய்யா
கிலையாவண்ணமாயம்வைத்தின்மலன்றன்னிடமா
மலைபோற்றுன்னிவென்றியோங்குமாளிகைசூழ்தயலே
சிலையார்புரிசைபரிசுபண்ணுந்தென்திருப்பூவணமே. (கo)

திண்ணார்புரிசைமாடமோங்குதென்திருப்பூவணத்துப்
பெண்ணார்மேனியெம்மிறையைப்பேரியலின்றமிழால்
கண்ணாருட்கக்காழிமல்குஞானசம்பந்தன்சொன்ன
பண்ணார்பாடல்பத்தும்வல்லார்பயில்வதுவானிடையே. (கக)

பாண்டிநாட்டிலுள்ளது. திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - பூவணநாதர், தேவியார் - மின்னுமிடை.

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அடையாதார்தம்புரங்கள்மூன்றுமாரழலில்லழுந்த
விடையார்மேனியராய்ச்சீறும்வித்தகன்மேயவிடங்
கடையார்மாடமீடியெங்குங்கங்குல்புறந்தடவப்
படையார்புரிசைப்பட்டினஞ்சேர்பல்லவனீச்சரமே. (க)

எண்ணரெயில்கள்மூன்றுஞ்சீறுமெந்தைபிரானிமையோர்
கண்ணுலகங்காக்கநின்றகண்ணுதனண்ணுமிடம்
மண்ணுர்சோலைக்கோலவண்டுவைகலுந்தேனருந்திப்
பண்ணுர்செய்யும்பட்டினத்துப்பல்லவனீச்சரமே. (உ)

மங்கையங்கோர்பாகமாகவானிலவார்சடைமேற்
கங்கையங்கேவாழவைத்தகள்வனிருந்தவிடம்
பொங்கயஞ்சேர்புணரியோதமீதுயர்பொய்கையின்மேற்
பங்கயஞ்சேர்பட்டினத்துப்பல்லவனீச்சரமே. (ஊ)

தாரார்கொன்றைபொன்றயங்கச்சாத்தியமார்பகலம்
சீரார்சீறுசாந்தம்வைத்தசின்மலன்மன்னுமிடம்
போரார்வேற்கண்மாதர்மைந்தர்புக்கிசைபாடலினூற்
பாரார்கின்றபட்டினத்துப்பல்லவனீச்சரமே. (சு)

மைசேர்கண்டரண்டவாணர்வானவருந்துதிப்ப
மெய்சேர்கொடியரடியாரேத்தமேவியிருந்தவிடங்
கைசேர்வளையார்விளைவினேடுகாதன்மையாற்கழலே
பைசேரரவாரல்குலார்சேர்பல்லவனீச்சரமே. (எ)

குழலினேசைவீணைமொந்தைகொட்டமுழவதிரக்
கழலினேசையார்க்கவாடுங்கடவுளிருந்தவிடஞ்
சுழியிலாருங்கடலிலோதந்தெண்டிரைமொண்டெறியப்
பழியிலார்கள்பயில்புகாரிற்பல்லவனீச்சரமே. (சு)

வெந்தலாயவேந்தன்வேள்விவேரறச்சாடிவிண்ணோர்
வந்தெலாமுன்பேணிநின்றமைந்தன்மகிழ்ந்தவிட
மந்தலாயமல்லிகையும்புன்னைவளர்குரவின்
பந்தலாரும்பட்டினத்துப்பல்லவனீச்சரமே. (அ)

தோரக்கன்மால்வரையைத்தெற்றியெடுக்கவவன்
ரூரரக்குந்திண்முடிகளூன்றியசங்கரனூர்
காரரக்குங்கடல்கிளர்ந்தகாலமெலாமுணரப்
பாரரக்கம்பயில்புகாரிற்பல்லவனீச்சரமே. (கூ)

அங்கமாறும்வேதனான்குமோதுமயனெழுதாற்
றங்கணூலுடேனின்றசங்கரன்றங்குமிடம்
வங்கமாருமுத்தமிப்பிவார்கடலூடலைப்புப்
பங்கமில்லார்பயில்புகாரிற்பல்லவனீச்சரமே. (கூ)

உண்டுடுக்கையின்றியேகின்றார்கவேதிரிவார்
கண்டுடுக்கைமெய்யிற்போர்த்தார்கண்டறியாதவிடங்
தண்டுடுக்கைதாளந்தக்கைசாரடம்பயில்வார்
பண்டிடுக்கண்டீரல்கும்பல்லவனீச்சரமே. (கo)

பத்தரேத்தும்பட்டினத்துப்பல்லவனீச்சரத்தை
மத்தன்றன்னையணிகொள்காழிஞானசம்பந்தன்சொற்
சித்தஞ்சேரச்செப்புமாந்தர்தீவினைகோயிலரா
யொத்தமைந்தவும்பர்வானிலுயர்விஞ்ஞைடோங்குவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பல்லவனேசர், தேவியார் - சவுந்தராம்பிகை.

திருச்சண்பைநகர் - பண் - நக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பங்கமேறுமதிசேர்சடையார்விடையார்பலவேத
மங்கமாறுமறைநான்கவையுமாஞர்மீஞரும்
வங்கமேவுங்கடல்வாழ்பதர்மனைக்கேநனைமூக்கின்
சங்கமேறிமுத்தமீனுஞ்சண்பைநகராரே. (க)

சூதகஞ்சேர்கொங்கையாளோர்பங்கர்சுடர்க்கமலப்
போதகஞ்சேர்புண்ணியனூர்பூதகணநாதர்
மேதகஞ்சேர்மேகமந்தண்சோலையில்விண்ணூர்ந்த
சாதகஞ்சேர்பாலையநீர்சேர்சண்பைநகராரே. (உ)

மகரத்தாடுகொடியோனுடலம்பொடிசெய்தவனுடைய
நிகரொப்பில்லாத்தேவிக்கருள்செய்நீலகண்டனூர்
பகரத்தாராவன்னம்பகன்றில்பாதம்பணிந்தேத்தத்
தகரப்புன்னைதாழைப்பொழில்சேர்சண்பைநகராரே. (ங)

மொய்வல்லசுரர்தேவர்கடைந்தமுழுஞ்சதுவண்ட
தெய்வர்செய்யவுருவர்கரியகண்டர்திகழ்சுத்திக்
கையர்கட்டங்கத்தர்கரியினுரியர்காதலாற்
சைவர்பாசுபதர்கள்வணங்குஞ்சண்பைநகராரே. (ச)

கலமார்கடலுள்விடமுண்டமரர்க்கமுதமருள்செய்த
குலமார்கயிலைக்குன்றதுடையகொல்லியெருதேறி
கலமார்வெள்ளைகாளிகேரம்விரியாடுபாதர்
சலமார்கரியின்மருப்புக்காட்டுஞ்சண்பைநகராரே. (ஞ)

மாகரஞ்சேரத்தியின்றோல்போர்த்தமெய்ம்மாலான்
சூகரஞ்சேரொயிறுபூண்டசோதியன்மேதக்க
வாகரஞ்சேரிப்பிழுத்தையந்தண்வயலுக்கே
சாகரஞ்சேர்திரைகளுந்துஞ்சண்பைநகராரே. (சு-எ)

இருளைப்புரையுமிறத்திலரக்கன்றன்னையிடர்வித்
தருளைச்செய்யுமம்மானோரார்தண்கந்தத்தின்
மருளைச்சுரும்புபாடியளக்கர்வையார்திரைக்கையாற்
றரளத்தோடெவளமீளுஞ்சண்பைநகராரே. (அ)

மண்டான்முழுதுமுண்டமாலுமலர்மிசைமேலயனு
மெண்டானறியாவண்ணநின்றவிறைவன்மறையோதி
தண்டார்குவளைக்கள்ளருந்தித்தாமரைத்தாதின்மேற்
பண்டான்கொண்டுவண்டுபாடுஞ்சண்பைநகராரே. (கூ)

போதியாரும்பிண்டியாரும்புகழலசொன்னூல்
நீதியாகக்கொண்டங்கருளுமிமலனிருநான்கின்
மாதிசித்தர்மாமறையின்மன்னியதொன்னூலர்
சாதிகீதர்வர்த்தமானர்சண்பைநகராரே. (கo)

வந்தியோடுபூசையல்லாப்போழ்தின்மறைபேசிச்
சந்திபோதிற்சமாதிசெய்யுஞ்சண்பைநகர்மேய
வந்திவண்ணன்றன்னையழகார்ஞானசம்பந்தன்சொற்
சிந்தைசெய்துபாடவல்லார்சிவகதிசேர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பழனம் - பண் - நகுகேசி.

திருச்சிற்றம்பலம்.

வேதமோதிவெண்ணூல்பூண்டவெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப்பொலியவருவார்புலியினுரிதோலார்
காதாவெனவுகக்காவெனவும்பாவெனநின்று
பாதந்தொழுவார்பாவந்தீர்ப்பார்பழனநகராரே. (க)

கண்மேற்கண்ணுஞ்சடைமேற்பிறையுமுடையார்காலனைப்
புண்ணுறுதிரமெதிராரூடப்பொன்றப்புறந்தாளா
லெண்ணுதுதைத்தவெந்தைபெருமானிமவான்மகளோடும்
பண்ணுர்களிவண்டறைபூஞ்சோலைப்பழனநகராரே. (உ)

பிறையும்புனலுஞ்சடைமேலுடையார்பறைபோல்விழிகட்பே
யுறையுமயானமிடமாவுடையாருலகர்தலைமக
னறையுமலர்கொண்டடியார்பரவியாடல்பாடல்செய்
பறையுஞ்சங்கும்பலியுமோவாப்பழனநகராரே. (ங)

உரமன்னுயர்கோட்டிலறுகூகையலறுமயானத்தி
லிரவிற்பூதம்பாடவாடியெழிலாரலர்மேலைப்
பிரமன்றலையினறவமேற்றபெம்மானெமையாளும்
பரமன்பகவன்பரமேச்சுவரன்பழனநகராரே. (ச)

குலவெஞ்சிலையாலமதின்மூன்றெரித்தகொல்லேறுடையண்ணல்
கலவமயிலுங்குயிலும்பயிலுங்கடல்போற்காவேரி

கலமஞ்சுண்டயரும்மர்கனிகள்குதிகொண்டெதிருத்திப்
பலவின்கனிகள்திரைமுன்சேர்க்கும்பழனகராரே, (இ)

வீளைக்குரலும்விளிசங்கொலியும்விழவின்ஒலியோவா
மூளைத்தலைகொண்டடியாரேத்தப்பொடியாமதிளெய்தா
ரீளைப்படுகிலிலையார்கெங்கிற்குலையார்வாழையின்
பாளைக்கமுகின்பழம்வீழ்சோலைப்பழனகராரே. (உ)

பொய்யாமொழியார்முறையாலேத்திப்புகழ்வார்திருமேனி
செய்யார்கரியமிடற்றர்வெண்ணூல்சேர்ந்தவகலத்தார்
கையாடலினர்புனலால்மல்குசடைமேற்பிறையோடும்
பையாடரவமுடனேவைத்தார்பழனகராரே. (எ)

மஞ்சோங்குயரமுடையான்மலையமாரியெடுத்தான்றே
ளஞ்சோடஞ்சுமாறுகான்குமடரவூன்றினர்
நஞ்சார்சுடலைப்பொடிநீறணிந்தகம்பான்வம்பாரும்
பைந்தாமரைகள்கழனிசூழ்ந்தபழனகராரே. (அ)

கடியார்கொன்றைச்சுரும்பின்மாலைகமழ்புன்சடையார்விண்
முடியாப்படிமூவடியாலுலகமுழுதுந்தாவிய
கெடியானீடாமனாமேலயனுங்கேடிக்காணுத
படியார்பொடியாடகலமுடையார்பழனகராரே. (கூ)

கண்டான்கழுவாமுன்னேயோடிக்கல்வைக்கஞ்சியை
யுண்டாங்கவர்களுரைக்குஞ்சிறுசொல்லோராரார்பாராட்ட
வண்டாமரையின்மலர்மேனறவமதுவாய்மிகவுண்டு
பண்டான்கெழுமவண்டியாழ்செய்யும்பழனகராரே. (கo)

வேய்முத்தோங்கிவிரைமுன்பரக்கும்வேணுபுரத்தன்னு
ணெய்த்தனையதிறலாலிக்கஞானசம்பந்தன்
பேசற்கினியபாடல்பயிலும்பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்தமாலைபத்தும்வல்லார்நல்லாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஆபச்சகாயர், தேவியார் - பெரியநாயகியம்மை.

ஆ பதிகம் - கூ.

ஸ்ரீகயிலாயம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பொடிகொளொருவர்புலியினதளர்புரிநூறிகழ்மார்பிற்
கடிகொள்கொன்றைகலந்தசீற்றக்கறைசேர்கண்டத்த
ரிடியருரலாலிரியுமடங்கலுருடங்குமுன்னேச்சாரற்
கடியவிடைமேற்கொடியொன்றுடையார்கயிலைமலையாரே. (க)

புரிகொள்சடையாரடியார்க்கெளியார்கிளிசேர்மொழிமங்கை
தெரியவுருவில்லைத்துகர்த்தேவர்பெருமானூர்
பரியகளிற்றையரவுவிழுங்கிமுழுங்கவிருள்கூர்ந்த
கரியமிடற்றர்செய்யமேனிக்கயிலைமலையாரே. (உ)

மாவினுரிவைமங்கைவெருவமூடிமுடிதன்மேல்
மேவுமதியுதியும்வைத்தவிளைவர்கழலுன்னுந்
தேவதேவர்திரிசூலத்தர்திரங்கன்முகவன்சேர்
காவும்பொழிலுங்கடுங்கற்சுனைசூழ்கயிலைமலையாரே. (ஊ)

முந்நீர்சூழ்ந்தஞ்சமுண்டமுதல்வர்மதனன்றன்
றொன்னீருருவமழியத்திருக்கண்சிவந்ததுதலினர்
மன்னீர்மடவும்படுகல்லறையினுழுவைசினங்கொண்டு
கன்னீர்வரைமேலிரைமுன்றேடுங்கயிலைமலையாரே. (எ)

ஒன்றும்பலவுமாயவேடத்தொருவர்கழல்சேர்வார்
நன்றுநினைந்தாடற்குரியார்கூடித்திரண்டெங்கும்
தென்றியிருளிற்றிகைத்தகரிதண்சாரல்தெறியோடிக்
கன்றும்பிடியுமடிவாரஞ்சேர்கயிலைமலையாரே. (ஏ)

தாதார்கொன்றைதயங்குமுடியர்முயங்குமடவாளைப்
போதார்பாகமாகவைத்தபுனிதர்பனிமல்கு
மூதாருலகில்முனிவருடனுயறான்கருள்செய்த
காதார்குழையர்வேதத்திளர்கயிலைமலையாரே. (கூ-ஏ)

தொடுத்தார்புரமூன்றெரியச்சிலைமேலெரியொண்பகழியா
லெடுத்தான்றிரடோள்முடிகள்பத்துமிடியவிரல்வைத்தார்
கொடுத்தார்படைகள்கொண்டாராளக்குறுகிவருந்தூற்றைக்
கடுத்தாங்கவனைக்கழலாலுதைத்தார்கயிலைமலையாரே. (அ)

ஊனுப்பலிகொண்டுலகிலேற்றூரிலகுமணிநாகம்
பூணுரமாகப்பூண்டார்புகழுமிருவர்தாம்
பேணுவோடிதேடவெங்கும்பிறங்குமெரியாகிக்
காணுவண்ணமுயர்ந்தார்போலுங்கயிலைமலையாரே. (கூ)

விருதுபகரும்வெஞ்சொற்சமணர்வஞ்சச்சாக்கியர்
பொருதுபகருமொழியைக்கொள்ளார்புகழ்வார்க்கணியரா
யெருதொன்றுகைத்திங்கிடுவார்தம்பாலிரந்துண்டிகழ்வார்கள்
கருதும்வண்ணமுடையார்போலுங்கயிலைமலையாரே. (கஎ)

போரார்கடலிற்புனல்சூழ்காழிப்புகழார்சம்பந்தன்
காராரிமேகங்குடிகொள்சாரற்கயிலைமலையார்மேற்
றேராதுரைத்தசெஞ்சொன்மாலைசெப்புமடியார்மேல்
வாராபிணிகள்வானோருலகில்மருவுமுணர்த்தாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கயிலாயநாதர், தேவியார் - பார்வதியம்மை.

திரு அண்ணாமலை - பண் - தக்கேசி.
திருச்சிற்றம்பலம்.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார்புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்களெரித்தவன்றுமூவர்க்கருள்செய்தார்
தூமாமழைபின்றதிரவெருவித்தொகுவின்னிரையோடி
மாமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (க)

மஞ்சைப்போழ்ந்தமதியஞ்சூடும்வானோர்பெருமானர்
கஞ்சைக்கண்டத்தடக்குமதுவுகண்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும்வேடர்மடவாரிதணமதுவேறி
யஞ்சொற்கிளிகளாயோவென்னுமண்ணாமலையாரே. (உ)

ஞானத்திரளாய்நின்றபெருமானல்லவடியார்மே
லூனத்திரளோக்குமதுவுமுண்மைப்பொருள்போலு
மேனத்திரளோடினமான்கரடியிழியுமிரவின்க
ணூனைத்திரள்வந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (ங)

இழைத்தவிடையாளுமையாள்பங்கரிமையோர்பெருமானர்
தழைத்தசடையார்விடையொன்றேறித்தரியார்புரமெய்தார்
பிழைத்தபிடியைக்காணுதோடிப்பெருங்கைமதவேழ
மழைத்துத்திரிக்குறங்குஞ்சாரலண்ணாமலையாரே. (ச)

உருவிற்றிகழுமுமையாள்பங்கரிமையோர்பெருமானர்
செருவிலொருகால்வளையவூன்றிச்செந்தீயெழுவித்தார்
பருவிக்குறவர்புனத்திற்குவித்தபருமாமணிமுத்த
மருவித்திரளோடியிழியுஞ்சாரலண்ணாமலையாரே. (ஞ)

எனைத்தோருழியடியாரேத்தவிமையோர்பெருமானர்
நினைத்துத்தொழுவார்பாவந்தீர்க்குநிமலருறைகோயில்
கனைத்தமேதிகாணுதாயன்கைமேற்குழவாத
வனைத்துஞ்சென்றுதிரளுஞ்சாரலண்ணாமலையாரே. (கூ)

வந்தித்திருக்குமடியார்தங்கள்வருமேல்வினையோடி
பந்தித்திருந்தபாவந்தீர்க்கும்பரமனுறைகோயில்
முந்தியெழுந்தமுழவினைசைமுதுகல்வரைகள்மே
லந்திப்பிறைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (எ)

மறந்தான்கருதிவலியைநினைந்துமாறுயெடுத்தான்றோ
ணிறந்தான்முரியவெரியவூன்றிநிறையவருள்செய்தார்
திறந்தான்காட்டியருளாயென்றுதேவரவர்வேண்ட
வறந்தான்காட்டியருளிச்செய்தாரண்ணாமலையாரே. (அ)

தேடிக்காணார்திருமால்பிரமன்றேவர்பெருமானே
மூடியோங்கிமுதுவேயுருத்தமுத்தம்பலதொண்டு
கூடிக்குறவர்மடவார்குவித்துக்கொள்ளவம்மினென்
றூடிப்பாடியனக்குஞ்சாரலண்ணாமலையாரே. (கூ)

தட்டையிடுக்கித்தலையைப்பறித்துச்சமணின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக்கொள்ளவேண்டாபேணித்தொழுமின்கள்
வட்டமுலையாளுமையாள்பங்கர்மன்னியுறைகோயில்
லட்டமாளித்திருள்வக்கணையுமண்ணுமலையாரே. (கo)

அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணுமலையாரை
கல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்
சொல்லால்மலித்தபாடலானபத்துமிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்கமன்னிவாழ்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஈங்கோய்மலை - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வானத்துயர்தண்மதிதோய்சடைமேல்மத்தமலர்சூடித்
தேனெய்த்தனமென்மொழிமான்விழியாள்தேவிபாகமரக்
கானத்திரவிலெரிகொண்டாடுங்கடவுளுலகேத்த
வேனத்திரள்வந்திழியுஞ்சாரலீங்கோய்மலையாரே. (க)

சூலப்படையொன்றேந்தியிரவிற்சுடுகாடிடமாக
கோலச்சடைகடாழக்குழல்யாழ்மொய்தைகொட்டவே
பாலொத்தனையமொழியாள்காணவாடும்பரமனு
ரேலத்தொடுகல்லிலவங்கமுழுமீங்கோய்மலையாரே. (உ)

கண்கொணுதலார்கறைகொண்மிடற்றுர்கரியினுரிதோலார்
விண்கொள்மதிசேர்சடையார்விடையார்கொடியார்வெண்ணீறு
பெண்கொடிருமார்பதனிற்பூசும்பெம்மானெமையாள்வா
ரெண்குமரியுந்திரியுஞ்சாரலீங்கோய்மலையாரே. (ஊ)

மறையின்னிசையார்நெறிமென்கூந்தன்மலையான்மகளோடுங்
குறைவெண்பிறையும்புனலுங்கிலவுங்குளிர்புன்சடைதாழப்
பறையுங்குழலுங்கழலுமார்ப்பப்படுகாட்டெரியாடு
மிறைவர்சிறைவண்டறைபூஞ்சாரலீங்கோய்மலையாரே. (எ)

கொந்தகுடலைப்பொடிநீறணிவார்நுதல்சேர்கண்ணினுர்
கந்தமலர்கள்பலவுநிலவுகமழ்புன்சடைதாழப்
பந்தொண்விரலாள்பாகமாகப்படுகாட்டெரியாடு
மெந்தமடிகள்கடிகொள்சாரலீங்கோய்மலையாரே. (ஏ)

நீறுரகலமுடையார்நிரையார்கொன்றையரவோடு
மாறுர்சடையாரயில்வெங்கணையாலவுணர்புரமூன்றுஞ்
சீறுவெரிசெய்தேவர்பெருமான்செங்கடைவெள்ளே
யேறுர்கொடியாருமையாளோடுமீங்கோய்மலையாரே. (ஐ)

வினையாயினதீர்த்தருளேபுரியும்விகிர்தன்விரிகொன்றை
கனையார்முடிமேல்மதியஞ்சூடுமீங்கோய்மலைமேல்

தனையார்கமலமலர்மேலுறைவான்றலையோடனலேந்து
மெனையாளுடையாளுமையாளோடமிர்கோய்மலையாரே. (எ)

பரக்கும்பெருமையிலங்கையென்னும்பதியிற்பொலிவாய
வரக்கர்க்கிறைவன்முடியுந்தோளுமணியார்விரல்தன்னு
னெருக்கியடர்த்துநிமலாபோற்றியென்றுநின்றேத்த
விரக்கம்புரிந்தாருமையாளோடமிர்கோய்மலையாரே. (அ)

வரியார்புலியினுரிதோலுடையான்மலையான்மகளோடும்
பிரியாதடனையாடல்பேணும்பெம்மான்றிருமேனி
யரியோடயனுமறியாவண்ணமளவில்பெருமையோ
டெரியாய்நிமிர்ந்தவெங்கள்பெருமானீங்கோய்மலையாரே. (கூ)

பிண்டியென்றுபெயராநிற்கும்பிணங்குஞ்சமணரு
மண்டைகலனுக்கொண்டுதிரியுமதியில்தேரரு
முண்டிவயிறுருரைகள்கொள்ளாதுமையோடனுகி
இண்டைச்சடையானிமையோர்பெருமானீங்கோய்மலையாரே. (கo)

விழவாரொலியுமுழவுமோவாவேணுபுரந்தன்னு
ளழலார்வண்ணத்தடிகளருள்சேரணிகொள்சம்பந்த
னெழிலார்சுனையும்பொழிலும்புடைசூழ்ங்கோய்மலையீசன்
கழல்சேர்பாடல்பத்தும்வல்லார்கவலைகழல்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநறையூர்ச்சித்தீச்சரம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பிறைகொள்சடையர்புலியினுரியர்பேழ்வாய்காகத்தர்
கறைகொள்கண்டர்கபாலமேந்துங்கையர்கங்காளர்
மறைகொள்கீதம்பாடச்சேடர்மனையில்மகிழ்வெய்திச்
சிறைகொள்வண்டேதனுர்நறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (க)

பொங்கார்சடையர்புனலானலர்பூதம்பாடவே
தங்காதலியுந்தாமுமுடனுய்த்தனியோர்விடையேறிக்
கொங்கார்கொன்றைவன்னிமத்தஞ்சூடிக்குளிர்பொய்கைச்
செங்காலன்னம்பெடையுஞ்சேருஞ்சித்தீச்சரத்தாரே. (உ)

முடிகொள்சடையர்மூவாவெண்மதியர்மூவாமேனிமேற்
பொடிகொணூலர்புலியினதளர்புரிபுன்சடைதாழக்
கடிகொள்சோலைவயல்சூழ்மடவிற்கயலாரினம்பாயக்
கொடிகொள்மாடக்குழாமார்நறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (ஊ)

பின்னுஞ்சடைமேனகுவெண்டலையர்பிரமன்றலையேந்தி
மின்னுமுருவிற்சங்கார்குழைதான்மிளிருமொருகாதர்
பொன்னுஞ்சொன்றைசெருந்திபுன்னேபொருந்துசெண்பகஞ்
சென்னுர்செல்வத்திருவார்நறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (எ)

நீரார்முடியர்கன்றொள்கண்டர்மறைகணிறைகாவர்
பாரார்புகழாற்பத்தர்சித்தர்பாடியாடவே
தோரார்நீடுமுழவார்விழவினெலியுந்திசைசெல்லச்
சீரார்கோலம்பொலியுறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (இ)

ஈண்டசடையர்நிரைகொள்கொன்றைவிரைகொள்மலர்மாலை
தூண்டுசுடர்பொன்னெளிகொள்மேனிப்பவளத்தெழிலார்வக்
தீண்டுமாடமெழிலார்சோலையிலங்குங்கோபுரந்
தீண்டுமதியந்திகழுறையூர்சித்தீச்சரத்தாரே. (உ)

குழலார்சடையர்கொக்கினிறகர்கோலநிறமத்தக்
தழலார்மேனித்தவளநீற்றர்சரிகோவணக்கிள
ரெழிலார்ராகம்புலியினுடைமேலிசைத்துவிடையேறிக்
கழலார்சிலம்புபுலம்பவருவார்சித்தீச்சரத்தாரே. (எ)

கரையார்கடல்சூழிலங்கைமன்னன்கயிலைமலைதன்னை
வரையார்தோளாலெடுக்கமுடிகணெரிந்துமனமொன்றி
யுரையார்கீதம்பாடலல்லவுலப்பிலருள்செய்தார்
திரையார்புனல்சூழ்செல்வமுறையூர்சித்தீச்சரத்தாரே. (அ)

செடியான்பிரமனேடிக்காணார்தினைப்பார்மதத்தாரா
யடியாரவருமருமாமறையுமண்டத்தமரரு
மூடியால்வணங்கிக்குணங்களேத்திமுதல்வாவருளென்னைச்
செடியார்செய்தெற்றிகழுறையூர்சித்தீச்சரத்தாரே. (கூ)

தின்றுண்சமணரிருந்துண்டேரர்தீண்டபோர்வையா
ரொன்றுமுணராவூமர்வாயிலுரைகேட்டிழல்வீர்காள்
கன்றுண்பயப்பாலுண்ணமுலையிற்கபாலமயல்பொழியச்
சென்றுண்டார்த்துசேருறையூர்சித்தீச்சரத்தாரே. (கூ)

சூயிலார்கோலமாதவிகள்குளிர்பூஞ்சுரபுன்னை
செயிலார்பொய்கைசேருறையூர்சித்தீச்சரத்தாரை
மயிலார்சோலைசூழ்ந்தகாழிமல்குசம்பந்தன்
பயில்வார்த்தினியபாடல்வல்லார்பாவநாசமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நீருக்குடநீத்தைக் காரோணம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வாரார்கொங்கைமாதோர்பாகமாகவார்சடை
நீரார்கங்கைதிங்கள்சூடிநெற்றியொற்றைக்கண்
கூரார்மழுவொன்றேந்தியந்தண்குழகன்குடமூக்கிற்
காரார்தண்டத்தென்டோளெங்தைகாரோணத்தாரே. (க)

முடியார்மன்னர்முடிமான்விழியார்மூவுலகும்மேத்தும்
படியார்பலனவாயார்பலரும்பரவிப்பணிந்தேத்தக்

கொடியார்விடையார்மாடவீதிக்குடந்தைக்குழகாருங்
கடியார்சோலைக்கலவமயிலார்காரோணத்தாரே. (உ)

மலையார்மங்கைபங்கரங்கையனலர்மடலாருங்
குலையார்தெங்குகுளிர்கொள்வாழைபழகார்குடமூக்கின்
முலையாரணிபொன்முலைவெண்ணகையார்மூவாமதியினர்
கலையார்மொழியார்காதல்செய்யுங்காரோணத்தாரே. (ஊ)

போதார்புனல்சேர்கந்தமுந்திப்பொலியவழகாருந்
தாதார்பொழில்சூழ்தெழிலார்புறவிலந்தண்குடமூக்கில்
மாதார்மங்கைபாகமாகமனைகள்பலிதேர்வார்
காதார்குழையர்காளகண்டர்காரோணத்தாரே. (எ)

பூவார்பொய்கையலர்தாமரைசெங்கழுநீர்புறவெல்லாந்
தேவார்சித்தையந்தணாளர்சீராலடிபோற்றக்
கூவார்குயில்களாலுமயில்களின்சொற்கிளிப்பிள்ளை
காவார்பொழில்சூழ்ந்தழகார்குடந்தைக்காரோணத்தாரே. (ஏ)

மூப்பூர்வியகெதியார்விதியாய்முன்னேயனல்வாளி
கோப்பார்பார்ந்தனிலகண்டருளுங்குழகர்குடமூக்கிற்
றீர்ப்பாருடலிலடுநோயவலமவினைகணலியாமைக்
காப்பார்காலனடையாவண்ணங்காரோணத்தாரே. (ஐ)

ஊனுர்தலைகையேந்தியுலகம்பலிதேர்ந்துழல்வாழ்க்கை
மானுர்தோலார்புலியினுடையார்கரியினுரிபோர்வை
தேனுர்மொழியார்திலைத்தங்காடித்திகழுங்குடமூக்கிற்
கானுர்கட்டமுடையார்செல்வக்காரோணத்தாரே. (ஒ)

வரையார்திரடோள்மதவாளரக்கனெடுப்பமலைசேரும்
விரையார்பாதமுறுதியாலூன்றலரிந்துசிரம்பத்து
முரையார்கீதம்பாடக்கேட்டங்கொளிவாள்கொடுத்தாருங்
கரையார்பொன்னிசூழ்தண்குடந்தைக்காரோணத்தாரே. (ஓ)

கரியமாலுஞ்செய்யபூமேலயனுங்கழறிப்போ
யரியவண்டந்தேடிப்புக்குமளக்கவொண்கிலார்
தெரியவரியதேவர்செல்வந்திகழுங்குடமூக்கிற்
கரியகண்டர்காலகாலர்காரோணத்தாரே. (கூ)

காணுமணர்கல்லதறியாக்காளுங்குரத்திகள்
பேணுர்தூமெய்மாசுகழியார்பேசிலவரோடுஞ்
சேணுர்மதிதோய்மாடமல்குசெல்வமெவிதிக்
கோணுகரமொன்றுடையார்குடந்தைக்காரோணத்தாரே. (கக)

கருவார்பொழில்சூழ்ந்தழகார்செல்வக்காரோணத்தானைத்
திருவார்செல்வமலருங்கணையைத்திகழுஞ்சம்பந்த

னுருவார்செஞ்சொன்மாலையிவைபத்தனைப்பாருலகத்துக்
கருவாரிம்மைப்பிறப்பதறுத்துக்கவலைகழியாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சோமநாதர், தேவியார் - தேனார்மொழியம்மை.

ஆடு பதிகம் - எட்டு.

திருக்காளூர் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வானார்சோதிமன்னுசென்னிவன்னிபுனங்கொன்றைத்
தேனார்போதுதானார்கங்கைதிங்களொடுசூடி
மானேர்நோக்கிகண்டங்குவப்பமாலையாடுவார்
காளூர்மேயகண்ணார்நெற்றியாளூர்செல்வமே. (க)

நீர்த்தலாகாவெள்ளமூழ்குநீள்சடைதன்மேலோ
ரேர்த்தகோணற்பிறையோடரவுகொன்றையெழிலாரப்
போர்த்தமென்சொலின்பம்பயந்தமைந்தரவர்போலாங்
காந்தள்விம்முகாளூர்மேயசாந்தநீற்றரே. (உ)

சிறையார்வண்டுந்தேனும்விம்முசெய்யமலர்க்கொன்றை
மறையார்பாடலாடலோடுமால்விடைமேல்வருவா
சிறையார்வந்தெனில்புகுந்தெனெழில்கலமுங்கொண்டார்
கறையார்சோலைக்காளூர்மேயபிறையார்சடையாரே. (ஙு)

விண்ணூர்திங்கட்கண்ணிவெள்ளோமாலையதுசூடித்
தண்ணூரக்கோடாமைபூண்டுதழைபுன்சடைதாழ
வெண்ணைவந்தெனில்புகுந்தங்கெவ்வகோய்செய்தான்
கண்ணூர்சோலைக்காளூர்மேயவிண்ணோர்பெருமானே. (ச)

தார்கொள்கொன்றைக்கண்ணியோடுந்தண்மதியஞ்சூடி
சீர்கொள்பாடலாடலோடுசேடராய்வந்து
ஊர்கடோறுமையமேற்றென்னுள்ளம்வெங்கோய்செய்தார்
கார்கொள்சோலைக்காளூர்மேயகறைக்கண்டத்தாரே. (ஞ)

மூளிவெள்ளெலும்பூறுநாலுமுழங்குமார்பரா
யெளிவந்தார்போலியமென்றெனில்லேபுகுந்துள்ளத்
தெளிவுகாணுங்கொண்டகுன்வர்தேறலார்பூவிற்
களிவண்டியாழ்செய்காளூர்மேயவொளிவெண்பிறையாரே. (கூ)

மூவாவண்ணர்மூளிவெண்பிறையர்முறுவல்செய்திங்கே
பூவார்கொன்றைபுனைந்தவர்தார்பொக்கம்பலபேசிப்
போவார்போலுமால்செய்துள்ளம்புக்கபுரிதாலர்
தேவார்சோலைக்காளூர்மேயதேவதேவரே. (எ)

தமிழினீர்மைபேசித்தானம்மீனைபண்ணிகல்ல
முழவமொந்தைமல்குபாடல்செய்கையிடமோவா
குமிழின்மேனிதந்துகோலநீர்மையதுகொண்டார்
கமழுஞ்சோலைக்காஞ்ஞர்மேயபவளவண்ணரே. (அ)

அந்தமாதியயனுமாஞமார்க்குமறிவரியான்
சிந்தையுள்ளுராவின்மேலுஞ்சென்னியுமன்னிலுன்
வந்தென்னுள்ளம்புகுந்துமாலைகாலையாயிவான்
கந்தமல்குகாஞ்ஞர்மேயவெந்தைபெம்மானே. (கூ)

ஆமையரவோடேனவெண்கொம்பச்குமாலைபூண்
தாமோர்கள்வர்வெள்ளர்போலவுள்வெந்நோய்செய்தா
ரோமவேதநான்முகனுங்கோணுகணையாலுஞ்
சேமமாயசெல்வர்காஞ்ஞர்மேயசேடரே. (கo)

கழுதுதுஞ்சுங்கங்குலாடுங்காஞ்ஞர்மேயானைப்
பழுதில்ஞானசம்பந்தன்சொற்பத்துமபாடியே
தொழுதுபொழுதுதோத்திரங்கள்சொல்லித்துதித்துலின்
றழுதுதுக்குமன்புசெய்வாரல்லலறுப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - செம்மேனிநாயகர், தேவியார் - சிவயோகநாயகியம்மை.

நிருப்புறவம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

நறவநிறைவண்டறைதார்க்கொன்றைநயந்துகயத்தாற்
சுறவஞ்சிறிவண்கொடியோனுடலம்பொடியாவிழிசெய்தான்
புறவமுறைவண்பதியாமதியாபுரமூன்றெரிசெய்த
விறைவனறவனிமையோரேத்தவுமையோடிருந்தானே. (உ)

உரவன்புலியினுரிதோலாடையுடைமேற்படராகம்
விரவிவிரிபூங்கச்சாவசைத்தவிகிர்தனுகிர்தண்ணம்
பொருவெங்களிறுபிளிறவுரித்துப்புறவம்பதியாக
விரவும்பகலுமிமையோரேத்தவுமையோடிருந்தானே. (உ)

பந்தமுடையபூதம்பாடப்பாதஞ்சிலம்பார்க்க
கந்தமல்குகுழலிகாணக்கரிகாட்டெரியாடி.
யந்தண்கடல்சூழ்ந்தழகார்புறவம்பதியாவமர்வெய்தி
யெந்தம்பெருமானிமையோரேத்தவுமையோடிருந்தானே. (ஈ)

கினைவார்கினையவினையான்பணியார்மலர்தூய்நித்தலுங்
கனையார்விடையொன்றுடையான்கங்கைதிங்கள்கமழ்தொன்றை
புனைவார்சடையின்முடியான்கடல்சூழ்புறவம்பதியாக
வெனையாளுடையானிமையோரேத்தவுமையோடிருந்தானே. (ச)

சங்கணரவுகுவெண்டலையுமுகிழ்வெண்டிங்களுந்
தங்குசடையன்விடையனுடையன்சரிகோவணவாடை
பொங்குதிரைவண்கடல்சூழ்ந்தழகார்புறவம்பதியாக
வெங்கும்பரவியிமையோரேத்தவுமையோடிருந்தானே. (இ)

பின்னுசடைகடாழக்கேழலெயிறுபிறழப்போ
யன்னடையார்மனைகடோறுமழகாற்பலிதேர்ந்து
புன்னைமடலின்பொழில்சூழ்ந்தழகார்புறவம்பதியாக
வென்னையுடையானிமையோரேத்தவுமையோடிருந்தானே. (உ)

உண்ணற்கரியவஞ்சையுண்டொருதொழற்தேவர் ×
விண்ணிற்பொலியவமுதமளித்தவிடைசேர்கொடியண்ணல்
பண்ணிற்சிறைவண்டறைபூஞ்சோலைப்புறவம்பதியாக
வெண்ணிற்சிறந்தவிமையோரேத்தவுமையோடிருந்தானே. (எ)

விண்டானதிரியனுர்கயிலேவேரோடெடுத்தான்றன்
றிண்டோளுடலுமுடியுநெரியச்சிறிதேயூன்றிய
புண்டாளெழியவருள்செய்பெருமான்புறவம்பதியாக
வெண்டோளுடையானிமையோரேத்தவுமையோடிருந்தானே. (அ)

தெடியானீடாமரைமேலயனுதேடிக்காண்கிலாப்
படியாமேனியுடையான்பவளவரைபோற்றிருமார்பிற்
பொடியார்கோலமுடையான்கடல்சூழ்புறவம்பதியாக
விடியார்முழவாரிமையோரேத்தவுமையோடிருந்தானே. (கூ)

ஆலமயிலின்பீலியமணரறிவில்சிறுதேரர்
கோலமொழிகளொழியக்குழுவுத்தழலுமெழில்வானும்
போலும்வடிவுமுடையான்கடல்சூழ்புறவம்பதியாக
வேலும்வகையாலிமையோரேத்தவுமையோடிருந்தானே. (கo)

பொன்னார்மாடநீடுஞ்செல்வப்புறவம்பதியாக
மின்னாரிடையாளுமையாளோடுமிருந்தவிமலனைத்
தன்னார்வஞ்செய்தமிழின்விரகனுரைத்ததமிழ்மாலை
பன்னாள்பாடியாடப்பிரியார்பரலோகந்தானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இதுவும் சோழிக்குப்பெயர்.

திருவேங்குரு - பண் - தநிந்தி.

திருச்சிற்றம்பலம்.

காவேறுன்மாமலர்கொண்டடிபரவிக்கைதொழுமாணியைக்கறுத்தவெங்கால
னேலமதிடுமுன்னுயிரோமெளவுதைத்தவுலமையவன்விரும்பனெம்பெருமான்
மாலைவந்தணுகவேதம்வந்துலவிமறிதிரைசங்கோடெவளமுனுந்தி
வேலைவந்தணைபுஞ்சோலைகள்சூழ்ந்தவெங்குருமேவியுள்ளிற்றிருந்தாரே. (1).

பெண்ணினேப்பாகமமாதுசெஞ்சடைமேற்பிறையொடுமரவினையணிந்தழகாகப்
பண்ணினேப்பாடியாடிமுன்பலிகொள்பரமரெம்மடிகளார்பரிசுகள்பேணி
மண்ணினேமூடிவான்முகடேறிமதிதிரைகடன்முகந்தெடுப்பமற்றுயர்ந்து
விண்ணளவோங்கிவெந்திழிகோயில்வெங்குருமேவியுள்விற்றிருந்தாரே. (உ)

ஓரியல்பில்லாவுருவமதாகியொண்டிறல்வேடனதுருவதுகொண்டு
காரிகைகாணத்தனஞ்சயன்றன்னேக்கறுத்ததற்களித்துடன்காதல்செய்பெருமா
னேரிசையாகவுபதமூரன்றுறைமலர்த்தாதுகள்மூசுவிண்டுதிர்ந்து
வேரிகளெங்கும்விம்மியசோலைவெங்குருமேவியுள்விற்றிருந்தாரே. (ஊ)

வண்டினைகொன்றைவன்னியுமத்தமருவியகூவிளமெருக்கொடுமிக்க
கொண்டணிசடையர்விடையினர்பூதங்கொடுகொட்டிகுடமுழாச்சூடியுமுழவப்
பண்டிகழ்வாகப்பாடியோர்வேதம்பயில்வர்முன்பாய்புனறகங்கையைச்சடைமேல்
வெண்பிறைசூடியுமையவளோடும்வெங்குருமேவியுள்விற்றிருந்தாரே. (எ)

சடையினர்மேனிநீறதுபூசித்தக்கைகொள்பொக்கணமிட்டுடனேகக்
கடைதொறும்வந்துபலியதுகொண்டுகண்டவர்மனமவைகவர்ந்தழகாகப்
படையதுவேந்திப்பங்கயக்கண்ணியுமையவள்பாகமுமமர்ந்தருள்செய்து
விடையொடுபூதஞ்சூழ்தரச்சென்றவெங்குருமேவியுள்விற்றிருந்தாரே. (ஏ)

கரைபொருகடலிற்றிரையதுமோதக்கங்குல்வந்தெறியசங்கமுமிப்பி
யுரையுடைமுத்தமணலிடைவைகியோங்குவானிருளறத்துரப்பவெண்டிசையும்
புரைமலிவேதம்போற்றுபூசுரர்கள்புரிந்தவர்கலங்கொளாகுதியினில்நிறைந்த
விரைமலிதூபம்விசும்பினேமறைக்கும்வெங்குருமேவியுள்விற்றிருந்தாரே. ஐ

வல்லிதுண்ணிடையாளுமையவடன்னேமறுகிடவருமதகளிற்றினேமயங்க
வொல்லையிற்பிடித்தங்குரித்தவள்வெருவல்கெடுத்தவர்விரிபொழின்மிகுதிரு
னல்லறமுரைத்துஞானமோடிருப்பகலிற்றிடலுற்றுவந்தவக்கருப்பு [வாளி
வில்லியைப்பொடிபடவிழித்தவர்விரும்பிவெங்குருமேவியுள்விற்றிருந்தாரே

பாங்கிலாவரக்கன்கயிலையன்றெடுப்பப்பலதலைமுடியொடுதோளைவெரிய
வோங்கியவிரலாலூன்றியன்றவற்கேயொளிதிகழ்வாளதுகொடுத்தழகாய
கோங்கொடுசெருந்திகூவிளமத்தங்கொன்றையுங்குலாவியசெஞ்சடைச்செல்வர்
வேங்கைபொன்மலராவிரைதருகோயில்வெங்குருமேவியுள்விற்றிருந்தாரே.

ஆறுடைச்சடையெம்மடிகளேக்காணவரியொடுபிரமனுமளப்பதற்காகிச்[ண்
சேறிடைதிகழ்வாகத்திடைபுக்குச்செலவறத்தவிர்ந்தனசெழிலுடைத்திகழ்வெ
ணீறுடைக்கோலமேனியர்நெற்றிக்கண்ணினர்விண்ணவர்கைதொழுதேத்த
வேறெமையாளவிரும்பியவிகிர்தர்வெங்குருமேவியுள்விற்றிருந்தாரே. (கூ)

பாடுடைக்குண்டர்சாக்கியர்சமணர்பயிறருமறவுரைவிட்டழகாக
வேடுடைமலராள்பொருட்டுவென்றக்கன்னெல்லையில்வேள்வியைத்தகர்த்தருள்செய்து
காடிடைக்கடிகாய்கலத்துடன்சூழக்கண்டவர்வெருவுறவிளித்தவெய்தாய
வேடுடைக்கோலம்விரும்பியவிகிர்தர்வெங்குருமேவியுள்விற்றிருந்தாரே. ()

விண்ணியல்விமானமிருபிடபேருமான்வெங்குருமேவியுள்விரும்பிருந்தாரை
கண்ணியதூயசொன்னூல்சம்பந்தனவின்றவிவாய்மொழிகேண்மினுபதேசம்
பண்ணியவிப்பாசுபதத்திறமையாலேபாடியுமாடியும்பயிலவல்லார்கள்
விண்ணவர்விமானங்கொடுவரவேறிவியனுலகாண்டுவீற்றிருப்பவர்தாமே. ()

இதனுஞ் சோழிக்குப்பெயர். திருச்சிற்றம்பலம்.

நீதிலம்பையங்கோட்டீ - பண் - தநிதஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பலியினர்பருப்பதத்தருத்திமாற்பேறுமாசிலாச்சிர்மறைக்காடுகெய்த்தான், நிலையினனெனதுரைதனதுரையாகநீறணிந்தேறுகந்தேறியநிமலன், கலையினர்மடப்பிணைதுணையொடுந்துயிலக்கானலம்பெடைபுல்கிக்கணமயிலாலு, மிலையினர்பைம்பொழிலிலம்பையங்கோட்டீரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (க)

திருமலர்க்கொன்றையானின்றியூர்மேயான்றேவர்கடலிமகன்றிருக்கழிப்பாலி, நிருபமனெனதுரைதனதுரையாகநீறணிந்தேறுகந்தேறியநிமலன், கருமலர்க்கமழ்சுனைநீண்மலர்க்குவளைகதிர்முலையிளையவர்மதிமுகத்தலவு, மிருமலர்க்கண்பொய்கையிலம்பையங்கோட்டீரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (உ)

பாலனும்விருத்தனும்பசுபதிதானும்பண்டுவெங்கூற்றுதைத்தடியவர்க்கருளுஞ், காலனெனதுரைதனதுரையாகக்கனலெரியங்கையிலேந்தியகடவுள், நீலமாமலர்ச்சுனைவண்டுபண்செய்யநீர்மலர்க்குவளைகடாதவிண்டெங்குஞ், மேலதாறும்பொழிலிலம்பையங்கோட்டீரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (ங)

உளங்கொள்வாருச்சியார்கச்சியேகம்பனெற்றியூருறையுமண்ணுமலையண்ணல், விளம்புவானெனதுரைதனதுரையாகவெள்ளநீர்விரிசடைதாங்கியவிமலன், குளம்புறக்கலைதுளமிலகளுஞ்சிலம்பக்கொழுங்கொடியெழுந்தெங்குங்கூவிளங்கொள்ள, விளம்பிறைதவழ்பொழிலிலம்பையங்கோட்டீரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (ச)

தேனுமாயமுதுமாய்த்தெய்வமுந்தானுய்த்தீயொடுநீருடன்வாயுவாந்தெரியில், வானுமாமெனதுரைதனதுரையாகவரியாவளைக்கசைத்துழிதருமைந்தன், கானமான்வெருவுறக்கருவிரலூகங்கடுவனெடுகளமூர்கற்கடுஞ்சார, லேனமானுழிதருமிலம்பையங்கோட்டீரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (ஞ)

மன்முலாமடியவர்க்கருள்புரிகின்றவகையலால்பலிதிரிந்துண்பிலான்மற்றோர், தன்மிலானெனதுரைதனதுரையாகத்தாழ்சடையிளமதிதாங்கியதலைவன், புன்மெலாமருவிகவிருவிசேர்முத்தம்பொன்னெமணிகொழித்திழிந்துவந்தெற்று, மின்மெலாமடைகரையிலம்பையங்கோட்டீரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (ஈ)

நீருளான்றீயுளானந்தரத்துள்ளானினைப்பவர்மாத்துளானித்தமாவே
த்து, மூருளாரெனதுணைதனதுணையாகவொற்றைவெள்ளேறுகக்தேறிய
வொருவன், பாருளார்பாடலோடாடலறுதபண்முரன்றஞ்சிறைவண்டினம்
பாடு, மேருளார்பைம்பொழிலிலம்பையங்கோட்டீரிருக்கையாப்பேணியெ
ன்னெழில்கொள்வதியல்பே. (எ)

வேருலாமாழ்கடல்வருதிரையிலங்கைவேந்தனதடக்கைகளடர்த்தவ
லுலகி, லாருலாமெனதுணைதனதுணையாகவாகமோரரவணிந்துழிதருமண்
ணல், வாருலாகல்லனமாக்களுஞ்சாரவாரணமுழிதருமல்லலங்கான, லேரு
லாம்பொழிலணியிலம்பையங்கோட்டீரிருக்கையாப்பேணியென்னெழில்
கொள்வதியல்பே. (அ)

கிளர்மழைதாங்கினனன்முகமுடையோன்கீழடிமேன்முடிதேர்ந்தள
க்கில்லா, வளமழையெனதுணைதனதுணையாகவொள்ளழலங்கையிலேந்திய
வொருவன், வளமழையெனக்கழைவளர்துளிசோரமாசுணமுழிதருமணிய
ணிமாலை, இளமழைதவழ்பொழிலிலம்பையங்கோட்டீரிருக்கையாப்பேணி
யென்னெழில்கொள்வதியல்பே. (கூ)

உரிஞ்சனசூறைகளுடம்பினராகியுழிதருஞ்சமணருஞ்சாக்கியப்பேயி
கள், பெருஞ்செல்வனெனதுணைதனதுணையாகப்பெய்பலிகென்றுழல்பெ
ரியவர்பெருமான், கருஞ்சுனைமுல்லைகன்பொன்னடைவேங்கைகளிமுகவ
ண்டொடுதேனினமுரலு, மிருஞ்சுனைமல்கியவிலம்பையங்கோட்டீரிருக்கை
யாப்பேணியென்னெழில்கொளவதியல்பே. (கo)

கந்தனைமலிகனைகடலொலியோதங்கானலங்கழிவளர்கழுமலமென்
னு, நந்தியாருறைபதிகான்மறைநாவனற்றமிழ்க்கின்றுணைஞானசம்பந்த,
னெந்தையார்வளருகரிலம்பையங்கோட்டீரிசையொடுகூடியபத்தும்வல்லார்
போய், வெந்துயர்கெடுகிடவிண்ணவரோடும்வீடுபேறின்மையின்வீடெளி
தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சந்திரசேகரர், தேவியார் - கோடேந்துமுலையம்மை.

திரு அச்சிறுபாக்கம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பொன்றிரண்டன்னபுரிசடைபுரளப்பொருகடற்பவளமொடழனிறம்
புனையக், குன்றிரண்டன்னதோளுடையகலங்குலாயவெண்ணூலொடுகொ
ழும்பொடியணிபவர், மின்றிரண்டன்னதுண்ணிடையரிவைமெல்லியலாளோ
யோர்பாகமாப்பேணி, யன்றிரண்டுருவமாயவெம்மடிகளச்சிறுபாக்கமதாட்
சிகொண்டாரே. (க)

தேனிலுமினியர்பாலனநீற்றர்தீங்கரும்பனையர்தந்திருவடிதொழுவா
ருனையந்துருகுவகைகடருவாருச்சிமேலுறைபவரொன்றலாதாரார்

வானகமிறந்துவையகம்வணங்கவயங்கொளிற்பதோர்வடிவினையுடையா
ரானையினுரிவைபோர்த்தவெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. ()

காரிருளுருவமால்வரைபுரையக்களிற்றின துரிவைகொண்டரிவைமேலோடி
நீருருமகிலினிமிர்சடைத்தாங்கிநீறணிந்தேறுகந்தேதியகிமலர்
பேரருளாளர்பிறவியிற்சேரார்பிணியிலர்கேடிலாப்பேய்க்கணஞ்சூழ
வாரிருண்மாலையாடுமெம்மடிகளச்சிறுபாகமதாட்சிகொண்டாரே. (ங)

மைம்மலர்க்கோதைமார்பினொளவுமலைமகளவளொடுமருவினொளவுஞ், செம்மலர்ப்பிறையுஞ்சிறையணிபுனலுஞ்செனனிமேலுடையவொஞ் சென்னிமேலுறைவார், தமமலரடியென்றடியவர்பரவத்தமிழ்ச்சொலுமவடசொலுந்தாணிழற்சேர, வம்மலர்க்கொன்றையணிந்தவெமமடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (ச)

விண்ணுலாமதியஞ்சூடினொளவும்விரிசடையுள்ளதுவெள்ளநீரொளவும்
பண்ணுலாமறைகள்பாடினொளவும்பலபுகழல்லதுபழியிலொளவு
மெண்ணிலாகாதவிமையவர்நாளுமேத்தரவங்களோடெழில்பெறின்ற
வண்ணலாரூர்தியேறுமெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (ஞ)

நீடிருஞ்சடைமேலிளம்பிறைதுளங்கநிழறிகழ்மழுவொடுநீறுமெய்பூசித்
தோடொருகாதினிற்பெய்துவெய்தாயசுடலையிலாடுவர்தோலுடையாகக்
காடரங்காகக்கங்குலுமபகலுங்கழுதாடுபாரிடங்கைதொழுதேத்த
வாடரவாடவாடுமெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (சு)

ஏறுமொன்றேறிநீறுமெய்பூசியிளங்கிளையரிவையோடொருங்குடனுகிக்
கூறுமொன்றருளிக்கொன்றையந்தாருங்குளிரிளமதியமுங்கூவிளமலரு
காறுமல்லிகையுமெருக்கொடுமுருக்குமகிழிளவன்னியுமிவைகலம்பக
வாறுமோர்சடைமேலணிந்தவெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே.

கச்சுமொள்வாளுங்கட்டியவுடையர்கதிர்முடிசுடர்விடக்கவரியுங்கு
டையும், பிச்சமும்பிறவும்பெண்ணணங்காயபிறைநுதலவர்தமைப்பெரிய
வர்பேணப், பச்சமும்வலியுங்கருதியவரக்கன்பருவரையெடுத்ததிண்டோ
ள்களையடர்வித், தச்சமுமருளுங்கொடுத்தவெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சி
கொண்டாரே. (அ)

கோற்றலாரேனுங்கோட்டலாரேனுநுகர்புகர்சாந்தமோடேந்தியமாலைக்
கூற்றலாரேனுமின்னவாறென்றுமெய்தலாகாததோரியல்பினையுடையார்
தோற்றலார்மாலுநான்முகமுடையதோன்றலுமடியொடுமுடியுறத்தங்க
ளாற்றலாற்காணராயவெமமடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (கூ)

வாதுசெய்சமணுஞ்சாக்கியப்பேய்கணல்வினைகீக்கியவல்வினையாள
ரோதியுங்கேட்டுமுணர்வினையிலாதாருள்கலாகாததோரியல்பினையுடையார்
வேதமும்வேதவெறிகளுமாகிவிமலவேடத்தொடுகமலமாமதிபோ
லாதியுமீறுமாயவெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (கo)

மைச்செறிகுவளைதவளைவாய்நிறையமதுமலர்ப்பொய்கையிற் புதுமலர்கிழி
பச்சிறவெறிவயல்வெறிகமழ்காழிப்பதியவராதிபதிகவுணியர்பெருமான் [யப்
கைச்சிறுமறியவன்கழலலாற்பேணக்கருத்துடைஞானசமபந்தனதமிழ்கொ
டச்சிறுபாக்கத்தடிகளேயத்துமன்புடையடியவரருவினையிலரே. [ண்

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பாக்கபுரேசர், தேவியார் - சுந்தராம்பிகை.

ஆகூ பதிகம் - எஎ.

திரு இடைச்சுரம் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வரிவளரவிரொளியரவரைதாழவார்சடைமுடிமிசைவளர்மதிசூடிக்
கரிவளர்தருகழல்கால்வலனேந்திக்கனலெரியாடுவர்காடரங்காக
விரிவளர்தருபொழிலிளமயிலாலவெண்ணிறத்தருவிகடிண்ணெனவீழு
மெரிவளரினமணிபுனமணிசாரலிடைச்சுரமேவியவிவர்வணமென்னே.(க)

ஆற்றையுமேற்றதோரரிசடையுடையரழகினையருளுவர்குழகலதறி
யார், கூற்றுயிர்செகுப்பதோர்கொடுமையையுடையர்கடுவிருளாடுவர்கொ
ன்றையுகந்தார், சேற்றயல்மிளிர்வனகயலிளவாளைசெருச்செயவோர்ப்ப
னசெமமுகமாந்தி, யேற்றையொடுழிதருமெழிறிகழ்சாரலிடைச்சுரமேவிய
விவர்வணமென்னே. (உ)

கானமுஞ்சுடலையுங்கற்படிலனுங்காதலர்தீதிலர்கனன்மழுவாளர்,
வானமுநிலமையுமிருமையுமானவணங்கவுமிணங்கவுமவாழ்த்தவும்படு
வர், கானமுமபுகையொளிவிரையொடுகமழருளிர்பொழிலிளமஞ்ஞைமன்
னியபாங்க, ரேனமும்பினையலுமெழிறிகழ்சாரலிடைச்சுரமேவியவிவர்வ
ணமெனனே. (ங)

கடமணிமார்பினர்கடறனிலுறைவர்காதலர்தீதிலர்கனன்மழுவாளர் [யர்
விடமணிமிடறினர்பிளிரவதோரரவர்வேறுமோசரிதையர்வேடமுமுடை
வடமுலையயலனகருங்குருதிதெறிவாழையின்றீங்கனியார்ந்ததேனட்டு
மிடமுலையரிவையரெழிறிகழ்சாரலிடைச்சுரமேவியவிவர்வணமென்னே.(ச)

கார்கொண்டகடிகமழ்விரிமலர்க்கொன்றைக்கண்ணியர்வளர்மதிகதிர்
விடக்கங்கை, நீர்கொண்டசடையினர்விடையுயர்கொடியர்நிழறிகழ்மழுவி
னரமுறிகழ்கிறத்தர், சீர்கொண்டமென்சிறைவண்டுபண்செய்புஞ்சுமபு
னலனையனசெங்குலைவாழை, யேர்கொண்டபலவினெடுழிறிகழ்சார லி
டைச்சுரமேவியவிவர்வணமென்னே. (ரு)

தோடணிகுழையினர்சுண்ணவெண்ணீற்றர்சுடலையினுடுவர்தோலு
டையாகப், பீடியர்செய்ததோர்பெருமையையுடையர்பேயுடனுடுவர்பெரி
யவர்பெருமான், கோடல்களொழுகுவமுழுகுவதும்பிகுரவமுமரவமுமன்
னியபாங்க, ரேடவிழ்புதுமலர்கடிகமழ்சாரலிடைக்சுரமேவியவிவர்வணமெ
ன்னே. (சு)

கழன்மல்குகாலினர்வேலினர்நூலர்கவர்தலையரவொடுகண்டியும்பூண்ப
ரழன்மல்குமெரியொடுமணிமழுவேந்தியாடுவர்பாடுவராரணங்குடையர்
பொழின்மல்குகீடியவரவமரவமன்னியகவட்டிடைப்புணர்குயிலாலு
மெழின்மல்குசோலையில்வண்டிசைபாடுமிடைச்சுரமேவியவிவர்வணமென்னே

தேங்கமழ்கொன்றையந்திருமலர்புனைவார்திகழ்தருசடைமிசைத்
திங்களுஞ்சூடி, வீங்கதவர்சுடலைவெண்ணீறுமெய்பூசிவேறுமோர்சரிதையர்
வேடமுமுடையர், சாந்தமுமகிலொடுமுகில்பொதிந்தலம்பித்தவழ்கனமணி
யொடுமிகுபளிங்கிடறி, யேந்துவெள்ளருவிகளொழிதிகழ்சாரலிடைச்சுர
மேவியவிவர்வணமென்னே. (அ)

பலவிலமிடுபலிகையிலொன்றேற்பர்பலபுகழல்லதுபழியிலர்தாமுந்
தலையிலங்கவிரொளிநெடுமுடியரக்கன்றடக்கைகளடர்த்ததோதன்மையையுடையர்
மலையிலங்கருவிகண்மணிமுழவதிரமழைதவழ்விளமஞ்ஞைமல்கியசார
லிலையிலவங்கமுமேலமுங்கமழுமிடைச்சுரமேவியவிவாவணமென்னே.(கூ)

பெருமைகடருக்கியோர்பேதுறுகின்றபெருங்கடல்வண்ணனும்பிர
மனுமோரா, வருமையரடிகிழல்பரவிநின்றேத்துமனபுடையடியவர்க்கணி
யருமாவர், கருமைகொள்வடிவொடுசுனைவளர்குவளைக்கயலினம்வயலிள
வாளைகளிரிய, வெருமைகள்படிதரவிளவனமாலுமிடைச்சுரமேவியவிவர்
வணமென்னே. (கo)

மடைச்சுரமறிவனவாளையுங்கயலுமருவியவயறனில்வருபுனற்காழிச்,
சடைச்சுரத்துறைவதோர்பிறையுடையண்ணல்சரிதைகள்பரவிநின்றுரு
குசம்பந்தன், புடைச்சுரத்தருவரைப்பூக்கமழ்சாரற்புணர்மடநடையவர்
புடையிடையார்ந்த, விடைச்சுரமேத்தியவிசையொடுபாடலிவைசொலவ
ல்லவர்பிணியிலர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - இடைச்சுரநாதர், தேவியார் - இமயமடக்கொடி.

தீருக்கழமலம் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அயிலுறுபடையினர்விடையினர்முடிமேலரவமுமதியமும்விரவிய
வழகர், மயிலுறுசாயல்வனமுலையொருபான்மகிழ்பவர்வானிடைமுகில்பு
ல்குமிடறர், பயில்வுறுசரிதையரோதுகந்தேத்திப்பாடியுமாடியும்பலிகொள்வ
ர்விசேர், கயிலையும்பொதியிலுமிடமெனவுடையார்கழுமலநினையநம்வினை
களிசறுமே. (க)

கொண்டலுகிலமும்புரைதிருமிடறர்கொடுமுடியுறைபவர்படுதலைக்
கையர், பண்டலரயன்சிரமரிந்தவர்பொருந்தும்படர்சடையடிகளார்பதிய
தனையலே, வண்டலும்வங்கமுஞ்சங்கமுஞ்சுறவுமறிகடற்றிரைகொணர்ந்தெ
ற்றியகரைமேற், கண்டலுங்கைதலுநெய்தலுங்குலவுங்கழுமலநினையநம்வி
னைகளிசறுமே. (உ)

எண்ணிடையொன்றினிரண்டினருருவமெரியிடைமூன்றினர்கான்
மறையாளர், மண்ணிடையைந்தினராறினரங்கம்வகுத்தனரேழிசையெட்
டிருங்கலைசேர், பண்ணிடையொன்பதுமுணர்ந்தவர்பத்தாபாடி நின்றடி
தொழுமதனனெவெகுண்ட, கண்ணிடைக்கனலினர்கருதியகோயில்கழுமல
நினையநம்மினைகரிசறுமே. (க)

எரியொருகரத்தினரிமையவர்க்கிறைவரோதுகந்தேறுவர்நீறுமெய்பூசித்
திரிதருமியல்பினரயலவர்புரங்கடீயெழவிழித்தனர்வெய்புரைதோளி
வரிதருகண்ணினைமடவரலஞ்சமஞ்சுறநிமிர்ததோர்வடிவொடுமவரத
கரியுரிமருவியவடிகளுக்கிடமாங்கழுமலநினையநம்மினைகரிசறுமே. (ச)

ஊனொதிர்ந்திடுபலிதலைகலனுகவுண்பவர்விண்பொலிந்திலங்கியவுருவர்
பானொதிர்ந்தடிதொழுவினைதருமாபிற்படவரவாமையக்கணிதவர்க்கிடமா
நீனொதிர்ந்திழிமணிவித்திலமுத்தநிரைசொரிசங்கமொடொண்மணிவரன்றிக்
காலொதிர்ந்தோதமவன்றிரைகளைகெற்றுங்கழுமலநினையநம்மினைகரிசறுமே.

முன்னுயிர்த்தோற்றமுமிறுதியுமாகிமுடியுடையமரர்களடிபணிந்தேத்தப்
பின்னியசடைமிசைபபிறைநிறைவித்தபேரருளாளனர்பேணியகோயில்
பொன்னியனறுமலர்புனலொடுதூபஞ்சாந்தமுமேந்தியகையினராகிக்
கன்னியர்நாடொறும்வேடமேபரவுங்கழுமலநினையநம்மினைகரிசறுமே.(சு)

கொலைக்கணித்தாவருசூற்றுதைசெய்தார்குரைகழல்பணிந்தவர்க்கருளியபொருளி, னிலைக்கணித்தாவரினையவல்லார்தருதெருதுயர்தவிர்த்தவெங்கிமலருக்கிடமா, மலைக்கணித்தாவரவன்றிரைமூரன்மதவிரிபுன்னைகள்முத்தெனவரும்பக், கலைக்கணங்கானலினீழலில்வாழுங்கழுமலநினையநம்மினைகரிசறுமே. (எ)

புயம்பலவுடையதென்னிலங்கையர்வேந்தன்பொருவரையெடுத்தவன்பொன்முடிதிண்டோள், பயமபலபடவடர்த்தருளியபெருமான்பரிவொடுமினிதுறைகோயில்தாகும், வியன்பலவிண்ணினுமண்ணினுமெங்கும்வேறுவேறுகங்களிற்பெயருளதென்னக், கயம்பலபடக்கடறிரைகளைக்கெற்றுங்கழுமலநினையநமவினைகரிசறுமே. (அ)

விலங்கலொன்றேந்திவன்மழைதடுத்தோனும்வெறிகமழ்தாமரையோனுமென்றிவர்தம, பலங்களானேடியுமறிவரிதாயபரிசினன்மருவினின்றினிதுறைகோயில், மலங்கிவன்றிரைவரையெனப்பரந்தெங்குமறிகடலோங்கிவெள்ளிப்பியுஞ்சுமந்து, கலங்கடன்சரக்கொடுகரக்கவருதேறுங்கழுமலநினையநம்மினைகரிசறுமே. (க)

ஆம்பலதவழுயன்றறவுரைசொல்லுமறிவிலாச்சமணருந்தேரருங்கணிசேர்
சோம்பலதவமறியாதவர்கொடிந்தமூதுரைகொள்கிலாமுதல்வர்தமமேனிச்
சாம்பலும்பூசிவெண்டலைகலனுகத்தையலாரிடபலிவையகத்தேற்றுக்
காம்பனதோளியோடினிதுறைகோயில்கழுமலநினையநமவினைகரிசறுமே.()

கலிகெழுபாரிடையூனெவுளதாங்கழுமலம்விரும்பியகோயில்கொண்டவர்மேல், வலிகெழுமனமிகவைத்தவன்மறைசேர்வருங்கலைஞானசமபந்

தனதமிழி, னெளிகெழுமாலையென்றுரைசெய்தபத்துமுண்மையினல்லினைக் கேத்தவல்லார்மேல், மெலிகெழுதுயரடையாவினைசித்தும்விண்ணவராற்ற லின்மிகபெறுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

கோயில் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றமபலம.

கற்றுங்கெரியோம்பிக்கலியையவாராமே
செற்றுர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றுவெண்டிங்கண்முதல்வன்பாதமே
பற்றுன்றுனைப்பற்றுபாவமே. (க)

பறப்பைப்படுத்தெங்கும்பசுவேட்டெரியோம்புஞ்
சிறப்பர்வாழ்தில்லைசிற்றம்பலமேய
பிறப்பிப்பெருமானைப்பின்றுழ்சடையானை
மறப்பிலார்கண்டீர்மையல்தீர்வாரே. (உ)

மையாரொண்கண்ணுர்மாடமெடுவீதிக்
கையாற்பந்தோச்சுங்கழிசூழ்தில்லையுட்
பொய்யாமறைபாடல்புரிதாணுலகேத்தச்
செய்யாணுறைகோயில்சிற்றம்பலந்தானே. (ங)

கிறைவெண்கொடிமாடமெற்றிநேர்திண்டப்
பிறைவந்திறைதாக்குமபரம்பலந்தில்லைச்
சிறைவண்டறையோவாச்சிற்றமபலமேய
விறைவன்கழலேத்துமின்பமின்பமே. (ச)

செல்வமெடுமாடஞ்சென்றுசேணிங்கிச்
செல்வமதிதோயச்செல்வமுயர்கின்ற
செல்வர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
செல்வன்கழலேத்துஞ்செல்வஞ்செல்வமே. (ஞ)

வருமாந்தளிர்மேனிமாதோபாகமாந்
திருமார்தில்லையுட்சிற்றம்பலமேய
கருமாணுரியாடைக்கறைசேர்கண்டத்தெம்
பெருமான்கழலல்லாற்பேணுதுள்ளமே. (சு)

அலையார்புனல்சூடியாகத்தொருபாக
மலையான்மகளோடுமகிழ்தாணுலகேத்தச்
சிலையாலெயிலெய்தான்சிற்றம்பலந்தன்னைத்
தலையால்வணங்குவார்தலையானர்களே. (எ)

கூர்வாளரக்கன்றன்வலியைக்குறைவித்துச்
சீராலேமல்குசிற்றம்பலமேய
நீராரசடையானைநித்தலேத்துவார்
தீராநோயெல்லாந்தீர்தமிண்ணமே. (அ)

கோணுகணையானுங்குளிர்தாமரையானுங்
காணுர்கழலேத்தக்கனலாயோங்கினன்
சேணுர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேத்த
மாணுகோயெல்லாமவாளாமாயுமே. (சு)

பட்டைத்துவராடைப்படிமங்கொண்டாடி
மூட்டைக்கட்டுரைமொழிவகேளாதே
சிடர்வாழ்தில்லைச்சிற்றமபலமேய
கட்டபெருமானுகாளுந்தாழுவோமே. (கo)

ஞாலத்தயர்காழிஞானசம்பந்தன்
சீலத்தார்கொள்கைச்சிற்றமபலமேய
சூலப்படையானைச்சொன்னதமிழ்மாலை
கோலத்தாற்பாடவல்லார்கலலாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - திருமூலத்தானநாயகர் - சபாநாதர், தேவியார் - சிவகாமியம்மை.

சீகாழி - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

கல்லார்தீமேவுந்தொழிலார்கல்வேதஞ்
சொல்லாகேண்மையாசுடர்பொற்கழலேத்த
வில்லாற்புரஞ்செற்றுன்மேவுமபதிபோலும்
கல்லாமதில்சூழ்ந்தகாழிநகர்தானே. (க)

தூளிவணடேன்பாயுமிதழிதூமத்தந்
தெளிவெண்டிங்கள்மாசுணநீர்திகழ்சென்னி
யொளிவெண்டலைமாலையுகந்தாலூர்போலும்
களிவண்டியாழ்செய்யுங்காழிநகர்தானே. (உ)

ஆலக்கோலத்தினஞ்சுண்டமூதத்தைச்
சாலத்தேவாக்கீந்தளித்தான்றன்மையாற்
பாலற்காய்ன்றும்பரிந்துபாதத்தாற்
வீலைத்தலையாவணங்கொண்டெமையாண்டவிரிசடையீ
ரிலைத்தலைச்சூலமுந்தண்டுமழுவுமிவையுடையீர்
சிலைத்தெமைத்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (ஊ)

விண்ணுலகாள்கின்றவிச்சாதரர்களும்வேதியரும்
புண்ணியரென்றிருபோதுந்தொழப்படும்புண்ணியரோ
கண்ணிமையாதனமூன்றுடையீருங்கழலடைந்தோந்
திண்ணியதீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (எ)

மற்றிணையில்லாமலிரண்டன்னதிண்டோளுடையீர்
கிற்றெமையாட்கொண்டுகேளாதொழிவதுதன்மைகொலோ
சொற்றுணைவாழ்க்கைதுறந்துன்றிருவடியேயடைந்தோந்
செற்றெமைத்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (ஐ)

மறுக்குமனத்தினைமாற்றியெம்மாவியைவற்புறுத்திப்
பிறப்பில்பெருமான்றிருந்தடிக்கீழ்ப்பிழையாதவண்ணம்
பறித்தமலர்கொடுவந்துமையேத்தும்பணியடியோஞ்
சிறப்பிலித்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (கூ-எ)

கருவைக்கழித்திட்டுவாழ்க்கைகடிந்துங்கழலடிக்கே
யுருகிமலர்கொடுவந்துமையேத்துதுகாமடியோஞ்
செருவிலரக்கனைச்சீரிலடர்த்தருள்செய்தவரோ
திருவிலித்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (அ)

காற்றமலர்மிசைநான்முகனரணன்வாதுசெய்து
தோற்றமுடையவடியுமுடியுந்தொடர்வரியீர்
தோற்றினுந்தோற்றுந்தொழுதுவணங்குதுகாமடியோஞ்
சிற்றமதாமவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (கூ)

சாக்கியப்பட்டுஞ்சமணுருவாகியுடையொழிந்தும்
பாக்கியமின்றியிருதலைப்போகமும்பற்றுமிவிட்டார்
பூக்கமழ்கொன்றைப்புரிசடையீரடிபோற்றுகின்றேந்
தீக்குழித்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (கo)

பிறந்தபிறவியிற்பேணியெஞ்செல்வன்கழலடைவா
னிறந்தபிறவியுண்டாகிலிமையவர்கோன்டிக்கட்
டிறம்பயில்ஞானசம்பந்தனசெந்தமிழ்பத்துமவல்லார்
நிறைந்தவுலகினில்வானவராகோனுலகுகூடுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது - திருக்கொடிமாடச் செங்குன்றூரில் - அடியார்களுக்குக்கண்ட சுரப்பிணிநீங்க வேதியருளியது.

தீருப்பிரமபுரம் - மொழிமாற்று - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

காடதணிகலங்காரவம்பதிகாலதனிற்
றோடதணிகுவர்சுந்தரக்காதினிற்றூச்சிலம்பர்
வேடதணிவர்விசயற்குருவமவில்லுங்கொடுப்பர்
பீடதணிமணிமாடப்பிரமபுரத்தாரே. (க)

கற்றைச்சடையதுகங்கணமுன்கையிற்றிங்கள்கங்கை
பற்றித்துமுப்புரம்பார்படைத்தோன்றலைசுட்டதுபண
டெற்றித்துப்பாமனையணிதருற்றையெழில்விளங்கும்
வெற்றிச்சிலைமதில்வேணுபுரத்தெங்கள்வேதியரே. (உ)

கூவிளங்கையதுபேரிசடைமுடிக்கூட்டத்தது
தூவிளங்கும்பொடிபூண்டதுபூசிற்றுத்தகதாக
மேவிளங்குதுதலாளையும்பாகமுரிதனரின்
பூவிளஞ்சோலைபுகலியுண்மேவியபுண்ணியரே. (ங)

உரித்ததுபாம்பையுடன்மிசையிட்டதோரொண்களிற்றை
யெரித்ததோராமையையின்பறப்பூண்டதுமுப்புரத்தைச்
செருத்ததுசூலத்தையேந்திற்றுதத்தக்கனேவேளவிபன்னூல்
விரிதவர்வாழ்த்தருவெங்குருவில்வீற்றிருந்தவரே. (ச)

கொட்டிவரக்கையாரப்பதுகைகுறுந்தாளன
விட்டிவாபூதங்கலப்பிலரின்புகழென்புலவின்
மட்டிவருந்தழல்சூடிவாமத்தமேந்துவாவான்
றொட்டிவருங்கொடித்தோணிபுரத்துறைசுதரே. (ஞ)

சாத்துவர்பாசுதடக்கையிலேத்துவர்கோவணைதங்
கூத்தவாகச்சுக்குலாவிக்குறுவாளொக்கிறகும்
போத்தவாபல்படைபேயனைசூடுவர்பேழிலார்
பூத்தவாகைநாழுபூதராய்மேவியபுண்ணியரே. (கூ)

காலதுகங்கைகற்றைச்சடையுள்ளாற்கழல்சிலம்பு
மாலதுவேதன்மழுவதுபாகம்வளாகொழுங்கோட்
டாலதுவூர்வரடலேறிருபபரணிமணிதீர்ச்
சேலதுகண்ணியோரங்காசிரபுரமேயவரே. (எ)

கொருப்புறுவெள்விடைமேனியதோறுவாகற்றியின்கண்
மருப்புறுவன்கண்ணர்தாதையைக்காட்டுவாமாமுருகன்
விருப்புறுபாம்புக்குமெய்த்தந்தையாவிறன்மாதவாவாழ்
பொருப்புறுமாளிகைத்தென்புறவத்தணிபுண்ணியரே. (அ)

இலங்கைத்தலைவனையெற்றிற்றிறுத்தரிலேயின்னுட்
கலங்கியகூற்றுயிர்பெற்றதுமாணிகுமைபெற்றது
கலங்கினார்மொக்கையினுவர்கொட்டுவர்காட்டகத்துச்
சலங்கினார்வாழ்வயற்சண்பையுண்மேவியதத்துவரே. (கூ)

அடியினைகண்டிலன்றுமனையோன்மான்முடிகண்டிலன்
கொடியணியும்புலியேறுகக்தேறுவர்தோலுடுப்பர்
பிடியணியுங்கடையாள்வெற்பிருப்பதோர்கூறுடையார்
கடியணியும்பொழிற்காழியுண்மேயகறைக்கண்டரே. (கo)

கையதுவெண்குழைகாததுசூலமமணர்புத்த
ரெய்துவர்த்தம்மையடியவரெய்தாரோனைக்கொம்பு
மெய்திகழ்கோவணம்பூண்பதுடுப்பதுமேதகைய
கொய்தலர்பூம்பொழிற்கொச்சையுணமேவியகொற்றவரே. (கக)

கல்லுயர்கழுமலவிஞ்சியுண்மேவியகடவுடன்னை
கல்லுரைஞானசம்பந்தன்ஞாகத்தமிழ்நன்குணர்தல்
சொல்லுதலகேட்டல்வல்லோர்தொல்லைவானவர்தங்களோடுஞ்
செல்குவர்சீரருளாற்பெறலாஞ்சிவலோகமதே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

மொழிமாற்றுமுறை.

காடதணிகலங் காரரவம்பதி—இதனை-காடுபதி எனவும், அணிகலங்காரரவம்எனவும், காலதனில்தோடதணிகுவர் சுந்தரகாதினில் தூச்சிலம்பர்—இதனை - காலதனில் தூச்சிலமபர் எனவும், சுந்தரக்காதினில் தோடது அணிகுவர் எனவும், வேடதணிகுவர் விசயற்குருவம் வில்லுங்கொடுப்பர்—இதனை-வேடது உருவம் அணிகுவர எனவும, விசயற்கு வில்லுங்கொடுபபர் எனவும, மொழிமாற்றுக.—இவ்வாறே மற்றத்தேவாரங்களுக்கு மொழிமாற்றுக.

திருப்பஞ்சபதம்-பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றமபலம.

சுடுமணியுமிழ்நாகஞ்சூழ்தரவனைக்கசைத்தா
னிடுமணியெழிலானேயேறலனெருதேறி
விடமணிமிடறுடையானமேவியகெடிலக்கோட்டுப
படுமணிவிடுசுடராபரும்பதம்பரவுதுமே. (க)

கோய்புல்குதோல்திரையகைவருநகருடம்பி
னீபுல்குதோற்றமெல்லாநினையுளகுமடநெஞ்சே
வாய்புல்குதோத்திரத்தால்வலஞ்செய்துதலைவணங்கிப்
பாய்புலித்தோலுடையான்பரும்பதம்பரவுதுமே. (உ)

தனியுறுதுயர்தீரத்தோன்றியோர்நல்வினையா
லினியுறுபயனதெரிண்டுமனம்வையேற்
கனியுறுமரமேறிக்கருமுசுக்கழையுகளும்
பனியுறுகதிர்மதியான்பரும்பதம்பரவுதுமே. (ங)

கொங்கணிகறுங்கொன்றைத்தொங்கலர்குளிர்சடையா
னெங்கணிணையகலிண்றுனெனவருளீசனிட
மைங்கணிணைவரிசிலையானங்கனையழகழித்த
பைங்கண்வெள்ளேறுடையான்பரும்பதம்பரவுதுமே. (ச)

துறைபல்சுனைமூழ்கித்தூமலர்சுமந்தேறி
மறையொலிவாய்மொழியால்வானவர்மகிழ்ந்தேத்தச்
சிறையொலிதெளிபயிலுந்தேனினமொலியோவாப்
பறைபடுவிளங்கருவிப்பருப்பதமபரவுதுமே. (நி)

சீர்கெழுசிறப்போவாச்செய்தவமெறிவேண்டி
லோர்கெழுமடமெஞ்சேயிரண்டுமனம்வையேற்
கார்கெழுகுறுங்கொன்றைக்கடவுளதிடம்வகையாற்
பார்கெழுபுகழோவாப்பருப்பதம்பரவுதுமே. (சு)

புடைபுல்குபடர்கமலம்புகையொடுவிரைகமழத்
தொடைபுல்குகுமாலிதிருமுடிமிசையேற
விடைபுல்குகொடியேந்திவெந்தவெணணீறணிவான்
படைபுல்குமழுவாளன்பருப்பதம்பரவுதுமே. (எ)

னினைப்பெனுமெங்கிணற்றைநின்றுநின்றயராதே
மனத்தினைவலித்தொழிதேனவலமவந்தடையாமைக்
கனைத்தெழுதிரள்கங்கைகமழ்சடைக்கரந்தான்றன்
பனைத்திரள்பாயருவிப்பருப்பதம்பரவுதுமே. (அ)

மருவியவல்வினைநோயவலம்வந்தடையாமற்
றீருவுருவமாந்தானுந்திசைமுகமுடையானு
மிருவருமறியாமலெழுந்தசோதிரிடுவே
பருவரையுறைமிர்ந்தான்பருப்பதம்பரவுதுமே. (கூ)

சடங்கொண்டசாத்திரத்தார்சாக்கியர்சமண்குண்டர்
மடங்கொண்டவிருமபியராய்மயங்கியோபேய்த்தேர்ப்பின்
குடங்கொண்டுநீர்க்குச்செல்வாரோதுமின்குஞ்சாத்தின்
படங்கொண்டபோலையினன்பருப்பதம்பரவுதுமே. (கo)

வெண்செங்கெல்வினைகழனிவிழவொலிகழுமலத்தான்
பண்செலப்பலபாடலிசைமுரல்பருப்பதத்தை
கன்சொலினற்பரவுஞானசம்பந்தனல்ல
வொண்சொலினிலைமாலையுருவெணத்தவமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது - ஸ்ரீசைலமென்றும், மல்லிகார்ச்சுனமென்றும், வழங்குகின்றது.
வடதேசத்திலுள்ளது.
சுவாமிபெயர் - பருப்பதேசுவரர், தேவியார் - பருப்பதமங்கையம்மை.
ஆடு பதிகம் - ககஅ.

திருக்கள்ளில் - பண் - வியாழக்குறிஞ்சி.
திருச்சிற்றம்பலம்.

முள்ளின்மேன்முதுகூகைமுரலுஞ்சோலை
வெள்ளின்மேல்விடுகரைக்கொடிவினோத
கள்ளின்மேயவண்ணல்கழல்கைதொழு
முள்ளுமேதுயர்வெய்தலொருதலையே. (க)

ஆடலான்பாடலானரவங்கள்பூண்டா
னோடலாற்கலனில்லானுறைபதியாற்
காடலாற்கருதாதகள்ளின்மேயான்
பாடலார்மபெரியாகள்பரசுவாரே. (உ)

எண்ணுர்மும்மதிலெய்தவிழைமையாமுக்கண்
பண்ணுர்நான்மறைபாடுபரமயோகி
கண்ணுர்நீறணிமார்பன்களளின்மேயாள்
பெண்ணுணும்பெருமானெமபிஞ்ஞகனே. (ஊ)

பிறைபெற்றசடையண்ணல்பெடைவண்டாலுங்
கறைபெற்றவிரிதொன்றைத்தாகயந்த
கறைபெற்றமிடற்றண்ணல்கள்ளின்மேயா
னிறைபெற்றவடியாரதெஞ்சுளானே. (எ)

விரையாலுமலராலும்விழுமைகுன்ரு
வுரையாலுமெதிர்கொள்ளவூரம்மாக்
கரையார்பொன்புனல்வேலிகள்ளின்மேயா
னரையாவெணகோவணத்தவண்ணருனே. (ஏ)

கலனுயபலகொள்கைகும்பானல்ல
வலனுயமழுவாளுமவேலும்வல்லான்
கலனுநலியோட்டான்கள்ளின்மேயான்
மலனுயதீர்த்தெய்துமாதவத்தோர்க்கே. (கூ)

பொடியார்மெய்பூசினும்புறவினறவங்
குடியாவூதிரியினுங்கூப்பிடினுங
கடியாரபூம்பொழிற்சோலைக்கள்ளின்மேயா
னடியாரபண்பிகழ்வார்களாகர்களே. (ஐ)

திருநீலமலரொண்கண்டேவிபாகம்
புரிநூலுந்திருமேனும்புல்குமாபிற்
கருநீலமலர்விமமுகள்ளிலென்றும
பெருநீலமிடற்றண்ணல்பேணுவதே. (அ)

வரியாயமலராலும்வையந்தன்னை
யுரிதாயவளந்தானுமுள்ளுதற்கங்
கரியானுமரியாதகள்ளின்மேயான்
பெரியானென்றறிவார்கள்பேசுவரே. (கூ)

ஆச்சியப்பேய்களோடமணர்குண்டர்
பேச்சிலைதெரியல்லபேணுமின்கள்
மாச்செய்தவளவயன்மல்குகஞ்சி
நீச்செய்தசடையண்ணறிருக்கடியே. (கூ)

திகைகொண்டும்புகழ்காழிச்செல்வமல்கு
பகல்போலும்பேரொளியான்பந்தனல்ல
முகைமேவுமுதிர்சடையான்கள்ளிலேத்த
புகழோடும்பேரின்பம்புகுதுமன்றே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்- சிவாநந்தேசுவரர், தேவியார் - ஆனந்தவல்லியம்மை.

நீநுவையாறு - திருவீராகம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பணிந்தவரருவினைபற்றறுத்தருள்செயத்
துணிந்தவன்றேலொடுநூறுதைமாபினிற்
பிணிந்தவனாவொடுபேரொழிலாமைகொண
டணிந்தவன்வளநகரந்தணையாறே. (க)

கோத்திமிக்கவனகர்கிளரொளியுடனடப்
பாத்தவன்பனிமதிபடர்சடைவைத்துப்
போர்த்தவன்கரியுரிபுலியதளாவரை
யார்த்தவன்வளநகரந்தணையாறே. (உ)

வரிந்தவெஞ்சிலைபிடித்தவுணாதம்வளநக
ரெரிந்தறவெய்தவனெழிறிகழ்மலாமே
லிருந்தவன்சிரமதுவிமையவாகுறைகொள
வரிந்தவன்வளநகரந்தணையாறே. (ங)

வாய்ந்தவல்லவுணர்தம்வளநகரெரியிடை
மாய்ந்தறவெய்தவன்வளாபிறைநிரிபுன
றோய்ந்தசெழுசடையினனறன்மறையாறங்க
மாய்ந்தவன்வளநகரந்தணையாறே. (ச)

வானமர்மதிபுல்குசடையிடையரவொடு
தேனமர்கொன்றையன்றிகழ்தருமார்பினன்
மானினமனவிழிமங்கையோர்பாகமு
மானவன்வளநகரந்தணையாறே. (ஞ)

மூன்பனைமுனிவரோடமரர்கடொழுதெழு
மின்பனைபிணையிலவிறைவனையெழிறிக
ழென்பொனையேதமிழ்வேதியர்தாந்தொழு
மன்பனன்வளநகரந்தணையாறே. (ட)

வன்றிறலவுணர்தம்வளநகரெரியிடை
வெந்தறவெய்தவன்விளங்கியமார்பினிற்
பந்தமர்மெல்விரல்பாகமதமர்ந்த
னந்தமில்வளநகரந்தணையாறே. (ண)

விடைத்தவல்லரக்கனல்வெற்பினையெடுத்தலு
மடிதலத்தாலிறையூன்றிமற்றவனது
முடித்தலைதோளைவரிதாமுறைமுறை
யடர்த்தவண்வளருகாதலூரணையாமே. (அ)

விண்ணவாதமமொடுவெங்கதிரோனல
வெண்ணிலிதேவாகளிருதிரன்வழிபடக்
கண்ணனுமபிரமனுங்காணாபரிதாகிய
வண்ணறன்வளருகாதலூரணையாமே. (கூ)

மருளுடையனத்துவன்சமணாகண்மாசறு
விருளுடையினைதுவாடபோர்வையினர்களுந்
தெருளுடைமனதுதவாதேதறன்மின்றியாணைமா
வருளுடைப்படிகடமர்த்தலூரணையாமே. (கo)

நலமலிஞானசம்பந்தனதினறமி
ழலைமலிபுனன்மல்குவருதலூரணைபாற்றினைக்
கலைமலிதமிழிவைகறவல்லாமிக
நலமலிபுகழ்மிகுநனையர்காமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூர் - திருநிராகம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கடைமருதிரிபுரமெரியுணகைசெய்த
படைமருகழலெழமழுவலபகவன
புடைமருதிளமுகில்வளமமாபொதுளிய
விடைமருதடையுமிடர்கெடலெளிதே. (க)

மழைதுழைமதியமொடழிதலைமடமஞ்ஞை
கழைதுழைபுனல்பெய்தகமழ்சடைமுடியன்
குழைதுழைதிகழ்செவியழகொடுமிளிர்வதோ
ரிழைதுழைபுரியணலிடமிடைமருதே. (உ)

அருமையனெளிமையனழல்விடமிடறினன்
கருமையினொளிபெறுகமழ்சடைமுடியன்
பெருமையன்சிறுமையன்பிணபெறுமொருமைய
னிருமையுமுடையணலிடமிடைமருதே. (ங)

பொரிபடுமுதுகுறமுளிகளிபுடைபுல்கு
கரிவளர்சுடலையுணடமெனகவில்வோன்
வரிவளராகுளிர்மதியொளிபெறமிளிர்வதோ
ரெரிவளர்சடையணலிடமிடைமருதே (ச)

வருகலமயிலனமடகடைமலிமகள்
பெருகலமுலையிணபிணசெய்தபெருமான்

செருவலமதிலெய்தசிவனுறைசெழுகை
திருவலபுகழ்மல்குமிடைமருதே. (டு)

கலையுடைவிரிதிகிற்கமழ்குழலகில்புகை
பலையுடைமடமகடனையிடமுடைபோன்
விலையுடையணிகலனிலனெனமழுவினை
டிலையுடைபடையவனிடமிடைமருதே. (கூ)

வளமெனவளர்வனவரிமுரல்பறவைக
ளிளமணலனைகளையிசைசெயுமிடைமரு
துளமெனநினையவரொளிகழலினையடி
குளமணலுறமுழுகிவழிபடல்குணமே. (எ)

மறையவனுலகவன்மதியவனமதிபுல்கு
துறையவனெனவலவடியவரதுயரிலா
கறையவனமிடறதுகனல்செய்தகமழ்சடை
யிறையவனுறைபருமிடமிடைமருதே. (அ)

மருதிடைகடவிபமணிவணர்பிரமரு
மிருதுடையகலல்குலரிகலினரிதெனக்
கருதிடலரிபரிதருருவொடுபெரிபரி
தெருதுடையடிகடமிடமிடைமருதே. (கூ)

தவருறுவிரிதிகிலுடையரநமமணரு
மவருறுசிறுசொலகயவனமினிடுமணல்
கவருறுபுனலிடைமருதுறைதொழுதெழு
மவருறுவினைகெடலணுகுதலகுணமே. (கo)

தடமலிபுகலியரதமிழ்கெழுவிரகின
னிடமலிபொழிலிடைமருதினையிசைசெய்த
படமலிதமிழிவைபரவவல்லவரவினை
கெடமலிபுகழொடுகிளரொளியினரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூர் - திருவிராகம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

விரிதருபுலியுரிவிரவியபவரையினர்
திரிதருமெயிலவைபுனைகணையினிலெய்த
வெரிதருசடையினரிடைமருதடைவுனல்
புரிதருமனனவர்புகழ்மிகவுளதே. (க)

மறிதிரைபடுகடல்விடமிடறின
றெறிதிரைகரையொருமிடைமருதெனுமவர்
செறிதிரைகரையொடுசெலவிலருலகினிற்
பிறிதினரெமதுமுடல்பெறுகுவதரிதே. (உ)

சலசலசொரிபுனல்சடையினர்மலைமக
ணிலவியவுடலினர்நிறைமறைமொழியின
ரிலரெனவிடுபலியவரிடைமருதினை
வலமிடவுடனலிவிலதுளவினையே. (௬)

விடையினரெவளியதோர்தலைகலனென நனி
கடைகடைதொறுபலியிடுகெனமுடுகுவ
ரிடைவிடலரிபவரிடைமருதனுக
ருடையவரடியிணைதொழுவதெமுயலே. (௭)

உரையருமுருவினருணர்வருவகையின
ரரைபொருபுலியதளுடையினரதன்மிசை
யிரைமருமரவினரிடைமருதனவுள
முரைகளதுடையவரபுகழ்மிகவுளதே. (௮)

ஒழுகியபுனன்மதியரவமோடுறை தரு
மழகியமுடியுடையடிகளதுறைகழ
லெழிலினருறையிடைமருதினைமலரொடு
தொழுதல்செய்தெழுமவரதியருறவிலரே. (௯)

கலைபலிவிரலினர்கடியதோரமழுவொடு
கிலையினர்சலமகளுலவியசடையினர்
மலைமகணமுலையிணைமருவியவடிவின
ரிலைமலிபடையவரிடமிடைமருதே. (௰)

செருவடையிலவலசெயல்செயத்திறலொடு
மருவரையினிலொருபதுமுடிதெரிதர
விருவகைவரனிறியவரிடைமருதது
பரவுவரருவினையொருவுதல்பெரிதே. (௰௧)

அரியொடுமலரவனெனவிவரடிமுடி
தெரிவகையரியவர்திருவடிதொழுதெழ
வெரிதருமுருவதமிடைமருதடைவுறல்
புரிதருமனவர்புகழ்மிகவுளதே. (௰௨)

குடைமயிலினதழைமருவியவுருவின
ருடைமருதுவரினர்பலிசெலவுறவிலை
யடைமருதிருவினரெதிர்தொழுதெழுகழல
ரிடைமருதெனமனமினிவதுபெறிலே. (௰௩)

பொருகடலடைதருபுகலியர்தமிழொடு
விரகினன்விரிதருபொழிலிடைமருதினைப்
பரவியவொருபதுபயிலவலவரிடர்
விரவிலர்வினையொடியமனுலகுறவே. (௰௪)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

திருவலிவலம் - திருவிராகம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பூவியல்புரிகுழல்வரிசிலைகர்துக
லேவியல்கணபிணையெதிர்விழியுமையவணை
மேவியதிருவுருவுடையவன்விரைமலர்
மாவியல்பொழில்வலிவலமுறையினறையே. (க)

இட்டமதமர்பொடியிசைகலினசைபெறு
பட்டவிர்பவளகனமணியெனவணிபெறு
விட்டொளிர்திருவுருவுடையவன்விரைமலர்
மட்டமர்பொழில்வலிவலமுறையினறையே. (உ)

உருமலிகடல்கடைவழியுலகமருயிர்
வெருவுறவகையெழுவிடமிவளிமலையணி
கருமணிகிகாகளமுடையவன்மிடைதரு
மருமலிபொழில்வலிவலமுறையினறையே. (ங)

அணிகாசடையழலவியுறவெனவரு
புனிசழ்வதமதிகனபொறிபரவழு
மெனகினெவாடுவருமிதமெலமுடிமிசை
மனமுடையவாவலிவலமுறையினறையே. (ச)

பிடியதனுருவுமைகொளமிகுகரிய
வடிசெடுதனதடிவழிபடுமவரிடா
கடிகணடிவரவருளினன்மிகுகொடை
வடிவினர்பயில்வலிவலமுறையினறையே. (ஞ)

தரைமுதலுலகினிலுயிர்புணர்தகைமிக
விரைமலிகுழலுமையொடுவிரவதுசெய்து
கரைதிரைகெடுதகவதுவருளினெழில
வரைதிகழ்மதில்வலிவலமுறையினறையே. (ட)

கலிதருதரைவரகடை வருமிடையவ
பொலிதருமடவரலியர்மனையதுபுகு
பலிகொளவருபவனெழின்மிகுதொழில்வளர்
வலிவருமதில்வலிவலமுறையினறையே. (ண)

இரவணனிருபதுகரமெழின்மலைதனி
னிரவணனினதரவவன்முடிபொடிசெய்து
விரவணமமரபெயரருளினனகெதி
யிரவணிகர்வலிவலமுறையினறையே. (அ)

தேனமர்தருமலரணையவன்வலிமிகு
மேனமசாயிலமகழியடிமுடி
தானணையாவுருவுடையவன்மிடைகொடி
வானணைமதில்வலிவலமுறையினறையே. (கூ)

இலைமலிதரமிகுதவருடையவர்களு
நிலைமையிலுண லுடையவாகளுநினைவது
தொலைவலிநெடுமறைதொடர்வலகயருவினன்
மலைமலிமதில்வலிவலமுறையிறையே. (கo)

மன்னியவலிவலகருறையிறைவனை
யின்னியல்கழமலகரிறையெழின்மறை
தன்னியல்கலைவல தமிழ்விரகனதுரை
யுன்னியவொருபதுமுயாபொருடருமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிழிமிழலை - திருவிராகம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அலாமகணமலிதரவவனியினிசழ்பவர்
மலாமலிகுழலுமைதனையிடமகிழ்பவ
நலமலியுருவுடையவாகாமிகுபுகழ்
நிலமலிமிழலையைநினையவல்லவரே. (க)

இருநிலமிதன்மிசையெழில்பெறுமுருவினர்
கருமலிகருமிகுபுவிமுதலுலகினி
லிருளறுமுநியினரிறையவாதொழுதெழு
நிருபமமிழலையைநினையவல்லவரே. (உ)

உலமகடலடகனிவனெனவருபவ
ரலமலிசருபுனலரவொடுகலை
யிலகலியிதழியுமிசைகருசடையினர்
நிலமலிமிழலையைநினையவல்லவரே. (ங)

மாடமாசனமகிழ்தரமனமுடையவ
காடமாகழுதகளைவமுழவொடுமிசை
பாடலினவில்பவாமிகுகருமுலகினி
னீடமாமிழலையைநினையவல்லவரே. (ச)

புகழ்மகடுணையினர்புரிகுழலுமைதனை
யிகழ்வுசெய்தவனுடையெழினமறைவழிவளர்
முகமதுசிதைதரமுனிவுசெய்தவன்மிகு
நிகழ்தருமிழலையைநினையவல்லவரே. (ஞ)

அன்றினொரியெனவருபவரிதினி
லெஞ்றியதிரிபரொருகொடியினிலெரி
சென்றுகொள்வகைசிறுமுறுவல்கொடொளிபெற
நின்றவர்மிழலையைநினையவல்லவரே. (சு)

காடையில்கொடையினர்கடிமலரயனதோர்
சிரம்பயில்வறவெறிசிவனுறைசெழுநகர்

வரம்பயில்கலைபலமறைமுறையறநெறி
நிரம்பினர்மிழலையைநினையவல்லவரே. (எ)

ஒருக்கியவுணாவிஞ்ஞெடொளிநெறிசெலுமவ
ரரக்கனண்மணிமுடியொருபதுமிருபது
கரக்கனகெரிகரமலரடிவிரல்கொடு
நெருக்கினன்மிழலையைநினையவல்லவரே. (அ)

அடியவராகுழுமிடவவனியினிகழ்பவர்
கடிமலரயனரிகருதருவகைதழல்
வடிவுருவியல்பிஞ்ஞெடுலகுகணிறைதரு
நெடியவன்மிழலையைநினையவல்லவரே. (கூ)

மன்மதனெனவொளிபெறுமவர்மருகமா
வன்மலர்தவருடையவாகளுமதியிலா
தன்மதியமணர்கடொடர்வருமிகுபுகழ்
நின்மலன்மிழலையைநினையவல்லவரே. (கo)

நித்திலன்மிழலையைநிகரிலிபுகலியுள்
வித்தகமறைமலிதமிழ்விரகன்வொழி
பத்தியில்வருவனபத்திவைபயில்வொடு
கற்றுவல்லவருலகினிலடியவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் - கூசு.

தீருச்சிவபுரம் - தீருவிராகம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிறறம்பலம்.

கலைமலியகலல்குலரிவைதனுருவினன்
மூலைமலிதருதிருவுருவமதுடையவன்
சிலைபலிமதில்பொதிசிவபுரகாதொழ
விலைகலிவினையிருமையுமிடாகெடுமே. (க)

படரொளிசடையினன்விடையினனமதிலவை
சுடரெரிகொருவியசிவனவனுறைபதி
திடலிடுபுனல்வயல்சிவபுரமடையகம்
மிடர்கெடுமுயர்கதிபெறுவதுதிடனே. (உ)

வரைதிரிதரவரவகடழலெழவரு
நுரைதருகடல்விடதுகர்பவனெழிறிகழ்
திரைபொருபுனலரிசிலதடைசிவபுர
முரைதருமடியவருயாகதியினரே. (கூ)

தணிவுடையவர்சுடுபொடியினருடலடி
பிணியடைவிலர்பிறவியுமறவிசுவா
தணிவுடையவராபயில்சிவபுரமருவிய
மணிமிடறனதடியிணைதொழுமவரே. (ச)

மறையவன்மதியவன்மலையவனிலையவ
னிறையவனுமையவண்மகிழ்நடவில்பவ
னிறையவனிமையவர்பணிகொடுசிவபுர
முறைவெனவுடையவனெமையுடையவனே. (டு)

முதிர்சடையிளமதிதிபுனல்பதிவுசெய்
ததிகழலொலிசெயவருநடவில்வோ
னெதிர்பவர்புரமெய்தவிணையிலியணைபதி
சதிர்பெறுமுளமுடையவர்சிவபுரமே. (சு)

வடிவுடைமலைமகள்சலமகளுடனமர
பொடிபடுமிழையதனபொலிதிருவுருவினன்
செடிபடுபலிதிரிசிவனுறைசிவபுர
மடைதருமடியவருவினையிலரே. (எ)

கமிருபதுமுடியொருபதுமுடையவ
னுரநெரிதரவரையடாவுசெய்தனுறை
பரனெனவடியவர்பணிதருசிவபுர
நகரதுபுகுதனம்முயர்கதியதுவே. (அ)

அன்றியனுருவுகொளரியயனெனுமவர்
சென்றளவிடலரியவனுறைசிவபுர
மென்றிருபொழுதுமுன்வழிபடுமவர்துய
ரொன்றிலாபுகழொடுமுடையரிவ்வுலகே. (கூ)

புத்தரோடமணர்களறவுரைபுறவுரை
வித்தகமொழிகிலவினையுடையடிகட
மித்தவமுயல்வுநிலிறைவனசிவபுர
மெய்த்தகவழிபடல்விழுமியகுணமே. (கo)

புந்தியாமறைநவில்புகலிமன்ஞானசம்
பந்தனதமிழ்கொடுசிவபுரகருறை
யெந்தையையுரைசெய்தவிசைமொழிபவரினை
சிந்திமுனுறவுயர்கதிபெறுவாகளே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழமலம் - திருத்தாளச்சந்தி - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பந்தத்தால்வந்தெப்பால்பயின்றுநின்றவும்பரப்-பாலேசேர்வாயே னேர்காண்பயில்கணமுனிவர்களுஞ், சிந்தித்தேவந்திப்பச்சிலம்பின்மங்கை தன்னெடுஞ்-சேர்வார்காணுணீள்கயிலத்திகழ்தருபரிசதெலாஞ்,சந்தித்தே யிந்தப்பார்சனங்கனனுதங்கணற் - முமேகாணுவாழ்வாரத்தகவுசெய்தவ ணதிடங், கந்தத்தாலெண்டிக்குங்கமழ்ந்திலங்குசந்தனக் - காடாபூவார்சீர் மேவுங்கழுமலவளகரே. (க)

பிச்சைக்கேயிச்சித்துப்பிசைந்தணிந்தவெண்பொடிப் - பீடார்நீடார்
மாடாரும்பிறைநுதலரிவையொடு, முச்சத்தால்நச்சிப்போரெடார்ந்தடார்க
வெங்கணை - றாராவூராநீள்வீதிப்பயில்வொடுமொலிசெயிசை, வச்சத்தா
னச்சுச்சேர்வடங்கொள்கொங்கைமங்கைமார் -வாராநேரேமாலாகும்வசிவல
வவனதிடங், கச்சத்தான்மெச்சிப்பூக்கலந்திலங்குவண்டினங் -காரார்காரார்
நீள்சோலைக்கழுமலவளநகரே. (உ)

திங்கட்கேதும்பைக்கேதிகழ்ந்திலங்குமத்தையின் - சேரேசேரேநீரா
கச்செறிதருசுரநதியோ, டங்கைச்சோவின்றிக்கேயடைந்துடைந்தவெண்
டலைப்-பாலேமேலேமாலேயப்படாவுறுமவனிறகும,பொங்கபோர்ஞ்சைச்
சேர்புயங்கமங்கள்கொன்றையின் - போதாதாரேதாமேவிப்புரிதருசடைய
னிடங், கங்கைகேயும்பொறபாகலநதுவநதபொன்னியின - காலேவாரா
மேலேபாய்கழுமலவளநகரே. (ஙு)

அண்டத்தாலெண்டிக்குமமைந்தடங்குமண்டலத் - தாறேவேறேவா
ளுள்வாவாவரிடமதெலா, மண்டிப்போய்வென்றிப்போர்மலைதலைநதவும்
பரு - மாறேலாதார்தாமேவும்வலிமிகுபுரமெரிய, முண்டக்நவெநதிட்டே
முடிந்திடிநதவிஞ்சிசூழ் - மூவாமூதூர்மூதூராமுளரிவெசெய்தவனிடங்,
கண்டிட்டேசெஞசொற்சேர்கவினசிறநதமந்திரக்-காலேபோவாதாமேவுங்
கழுமலவளநகரே. (ச)

திக்கிற்றேவற்றற்றேதிகழ்ந்திலங்குமண்டலச் - சிரூர்வீரூர்போரார்
தாருகனுடலவனெதிரே, புக்கிட்டேவெட்டிட்டேபுகைநதெழுநதசண்டந
தீப் - போலேபூநீர்நிகான்மீப்புணாதருமுயிரகடிறஞ, சொக்கத்தீதநிநாத்தத்
தேதொடர்நதமநுகைசெநகதத் - நோடேயாமேமாலோகத்துயாகளேபவன
திடங், கைக்கப்போயுக்கத்தேகனன்றுமிண்டுதண்டலைக் - காடேயோடாவு
ரேசேர்கழுமலவளநகரே. (ரு)

செற்றிட்டேவெற்றிச்சேர்திகழ்ந்ததும்பிமொய்ம்புருஞ் - சேரே
வாரார்நீள்கோதைதனெரியிழைபிடியதுவா, யொற்றைசசோமுற்றற்கொம்
புடைத்தடக்கைமுக்கண்மிக-கோவாதேபாய்மாதானதுறுபுகாமுகவிறை
யைப், பெற்றிட்டேமற்றிபபார்பெருத்துமிக்கதுக்கமும - பேராநோய்தாமே
யாமைபிரிவுசெய்தவனிடங்,கற்றிட்டேயெட்டெட்டுக்கலைத்துறைக்கரை
ச்செலக் – காணுதாரேசேராமெய்க்கழுமலவளநகரே. (கூ)

பத்திப்போர்வித்திட்டேபரந்தவைம்புலன்கள்வாய்ப் - பாலேபோகா
மேகாவாப்பகையறுவகைகினையா, முத்திக்கேவிக்ககதேமுடிக்குமுக்குணங்
கள்வாய் - மூடாவூடாலந்தக்கரணமுமொருதெறியாய்ச, சித்திகேயுய்த்
திட்டுத்திகழ்ந்தமெய்ப்பாம்பொருள் – சேர்வாதாமேதானகச்செயுமவனு
றையுமிடங், கத்திட்டோர்சட்டகங்கலந்திலங்குநற்பொருள் - காலேயோ
டாதார்மேவுங்கழுமலவளநகரே. (எ)

செம்பைச்சேரிஞ்சிச்சூழ்செறிந்திலங்குபைம்பொழிற்-சேரேவாரா
வாரிசத்திரையெறிகரிறைவ, னிம்பர்க்கேதஞ்செய்திட்டிருந்தரன்பயின்ற

வெற்-போர்பூதேரோர்பாதத்தெழில்விரலவணிறுவிட், டம்பொற்பூண்வெ
ன்றித்தோளழித்தவத்தனஞ்செய்தாற் - கார்ராகூர்வாள்வாளுளன்றருள்புரி
பவனதிடங், கம்பத்தார்தும்பித்திண்கவுட்சொரிதமும்மதக் - காரார்சே
ரூர்மாவீதிக்கழுமலவளாகரே. (அ)

பன்றிக்கோலங்கொண்டிப்படித்தடம்பயின்றிடப் - பாணுமாருனுமே
யப்பறவையினுருவுகொள, வொன்றிட்டேயம்புச்சேருயர்தபங்கயதவ-
னேதானேதானஃதுணராதுருவினதடிமுடியுஞ், சென்றிட்டேவகிப்பத்
திருக்களங்கொள்பைங்கண்ண - றேசால்வேரோராகாரந்தெரிவுசெய்தவன
திடங், கன்றுக்கேமுன்றிற்கேகலதிலதிறைகவுங்-காலேவாராமேலேபா
ய்கழுமலவளாகரே. (கூ)

தட்டிட்டேமுட்டிக்கைத்தடுக்கிடுக்கின்றுண்ணர் - தாமேபேணுதே
ராளுஞ்சமணுமுழலபவரு, மிட்டத்தாலத்தந்தானிதன்றதென்றுன்ற
வர்க - கேயாமேவாயேதுச்சொல்லிலைமலிமருந்தம்பூப், புட்டத்தேயெட்டிட்
டுப்புதைக்குமெய்க்கொள்புத்தரும்-போல்வாராமோராகேபோய்ப்புணர்வு
செய்தவனதிடங், கட்டிக்கால்வெட்டிதீங்கரும்புதந்தபைமபுனற்காலே
வாராமேலேபாய்கழுமலவளாகரே. (கo)

கஞ்சத்தேணுண்டிட்டேகளித்தவண்டுசெண்பகக் - காணைதேனே
போராருங்கழுமலவரிறையைத், தஞ்சச்சார்சண்பைகோனசமைத்தநற்
கலைத்தறை - தாமேபோல்வாதேனேர்தமிழ்விரகனமொழிக, ளெஞ்சத்
தேய்வின்றிக்கேயிறைத்திசைத்தமைதகொண - டேழேயேழோலேமூன்
றியலிசையிசையியல்வா, வஞ்சதேய்வின்றிகேமனங்கொளபயிற்று
வோர் - மாபேசேர்வாள்வாளனூசிமதிநுதன்மடவாலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சீகாழி - திருஞானசம்பந்தம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பிரமபுரத்துறைபெம்மானெமடான
பிரமபுரத்துறைபெம்மானெம்மான்
பிரமபுரத்துறைபெமமானெம்மான்
பிரமபுரத்துறைபெமமானெம்மான். (க)

விண்டலாபொழிலணிவேணுபுரத்தான்
விண்டலாபொழிலணிவேணுபுரத்தான்
விண்டலாபொழிலணிவேணுபுரத்தான்
விண்டலாபொழிலணிவேணுபுரத்தான. (உ)

புண்டரிகத்தவன்மேவியபுகலியே
புண்டரிகத்தவன்மேவியபுகலியே
புண்டரிகத்தவன்மேவியபுகலியே
புண்டரிகத்தவன்மேவியபுகலியே. (ங)

விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன்
விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன்
விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன்
விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன். (சு)

சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன்
சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன்
சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன்
சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன். (டு)

பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி
பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி
பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி
பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி. (சு)

செருக்குவாய்ப்புடையான்சிரபுரமென்னிற்
செருக்குவாய்ப்புடையான்சிரபுரமென்னிற்
செருக்குவாய்ப்புடையான்சிரபுரமென்னிற்
செருக்குவாய்ப்புடையான்சிரபுரமென்னில். (எ)

பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன்
பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன்
பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன்
பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன். (அ)

தசமுகனெரிதரவூன்றுசண்பையான்
தசமுகனெரிதரவூன்றுசண்பையான்
தசமுகனெரிதரவூன்றுசண்பையான்
தசமுகனெரிதரவூன்றுசண்பையான். (கூ)

காழியானையனுள்ளவாகாண்பரே
காழியானையனுள்ளவாகாண்பரே
காழியானையனுள்ளவாகாண்பரே
காழியானையனுள்ளவாகாண்பரே. (கூ)

கொச்சையண்ணலைக்கூடகிலாருடன்மூடரே
கொச்சையண்ணலைக்கூடகிலாருடன்மூடரே
கொச்சையண்ணலைக்கூடகிலாருடன்மூடரே
கொச்சையண்ணலைக்கூடகிலாருடன்மூடரே. (கக)

கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

ஆ. பதிகம் - கஉஎ.

திரு ஏகபாதத் திரு வுள்ளக்கருத்து.

க. பிரமபுரத்துறை பெம்மானெம்மான்.

(இதன்பதப்பொருள்.) பிரமம-ஞானாகாசமாகிய பராசத்தியை, புரத்துறை-அந்தப் பரிபூரணத்தை மிகுதியாக வியக்கப்பட்டது, பெம்மான்-பெருமான், எம்மான் எந்தப்பெரியோன் என்க.

(பொழிப்பு.) ஞானாகாசமாகிய பராசத்தியான பரிபூரணத்தை மிகுதியாகவியந்து அந்தப் பராசத்திக் கதிதமாகிய சுகமே வடிவாய் முதல் நடுவிறுதி காணப்படாத வஸ்து எந்தப்பெரியோன்.

பிரமபுரத்துறை பெம்மானெம்மான.

(ப-ள்) பிரமபுரத்து - மேல்நிலத்து, உறை - தண்ணீர், பெம் - விருப்பம், மான் - மான்போலும் விழியையுடையபெண். எ - எழுமுடைய, ஆன்-ஆன்மா என்க.

(பொ-பு.) மேல்நிலமாகிய ஆகாசத்தின்கண்ணே யோடாநின்ற கங்காதேவியை விரும்பித் திருமுடியிலே வைத்தவன், எம்மை நீங்காத நிலைமையையுடைய எமதுயிர்.

பிரமபுரத்துறை பெம்மானெம்மான.

(ப-ள்) பிரமம்-பிரமத்துவம், புரம்-சரீரம், உறை-எண்ணுதல், பெம்-ஆசை, ஆன்-அமையாமை, எம்மான்-எனை யொக்கவந்தவன் என்க.

(பொ-பு) பிராரூபத்திலே யெண்ணப்பட்ட என்னை முத்தியிலேவிடுகைக்கு அமையாத விருப்பமுள்ளவனு யென்னை யொகவந்தவன்.

பிரமபுரத்துறை பெம்மானெமமான்.

(ப-ள்.) பிரமபுரத்துறை பிரமபுரமென்கிற சிகாழிப்பதியிலே வீற்றிராநின்ற, பெம்மான்-கர்த்தாவானவன், எமமான்-என்னுடையசுவாமி என்க.

(பொ பு) பிரமபுரமென்கிற சிகாழிப்பதியிலே வீற்றிராநின்ற கர்த்தாவானவன் என்னுடையசுவாமி, பெரியோனும எனகுயிரானவனும் என்னை யொக்கவந்தவனும் சிகாழிப்பதியில் வீற்றிருகுங் கடவுளெனகூட்டிப் பொருள்கொள்க.

உ. விண்டலர்பொழிலணி வேணுபுரத்தரன்.

(ப-ள்) விண்டு-மலை, அலர்-ஒலி, பொழில் - உலகம், அணிவு-அகப்படுத்தல், எண்-பெருமை, நுபுரம்-சிலம்பு, தரன்-தரித்துள்ளவன் என்க.

(பொ-பு.) அஷ்டகுலபர்வதங்களும், ஒலிசிறந்த தரிசுமணியாகவும், அகிலலோகங்களையும் உள்ளேயகப்படுதலுந் தன்மையவாயும், பெரிதாயுமுள்ள திருச்சிலம்பினைத் தரித்துள்ளவன். நூபுரம் எனற்பாலது - நுபுரம் எனக் குறுகிநின்றது.

விண்டலர்பொழிலணி வேணுபுரத்தரன்.

(ப-ள்.) விண்டு-விஷ்ணு, அலர்-புறனுரை, பொழில்-அரசினிழல், அணி-பொருந்தி, வேணு-விருப்பம், புரத்துஅரன்-புரத்தையரித்தவன் என்க.

(பொ-பு.) விஷ்ணுவின் புறனுரையாகிய சிவதூஷணத்தை அரசமரத்தினிழலில் அவனுடனிருந்து விரும்பியுள்ள மூப்புரங்களைச் சங்கரித்துள்ளவன். அண்ணியெனற்பாலது - அணியென இடைக்குறையாய் நின்றது.

விண்டலர்பொழிலணி வேணுபுரத்தரன்.

(ப-ள்.) விண்தலர்-தேவர்கள், பொழில்-கற்பகப்பூஞ்சோலை, அணிவு-சூடுதல், வேணு-எண்ணும், புரத்தரன்-தேவேந்திரன் என்க.

(பொ-பு) தேவர்கள் கற்பகப்பூஞ்சோலை மலர்களால் அர்ச்சிக்கப் படுகின்ற தேவேந்திரனுடைய. எணு எனற்பாலது-எணுஎன நீண்டது. புரந்தான் எனற்பாலது புரத்தானென வலித்துநின்றது.

விண்டலர்பொழிலணி வேணுபுரத்தான்.

(ப-ள்.) விண்டு-இதழ்கள்விண்டு, அலர்-மலர்கின்ற, பொழில்அணி-சோலை சூழ்ந்த, வேணுபுரத்துஅரன் - வேணுபுரமென்று மொருபெயருள்ள சிகாழிப்பதிக்குக் கர்த்தா என்க.

(பொ-பு.) இதழ்கள் விண்டுமலர்கின்ற சோலைசூழ்ந்த சிகாழிப்பதிக்குக் கர்த்தா வாயுள்ளவன். தேவேந்திரன் மூங்கில்வழியாகவந்து பூசித்ததால் வேணுபுரமென்னும் பெயர்பெற்றது. சிலம்பினைத் தரித்துள்ளவரும், மூப்புரத்தை யெரித்தவரும, தேவேந்திரனுடைய சோலைசூழ்ந்த வேணுபுரத்தில் வீற்றிருக்கும் இறைவ னெனக்கூட்டியுரைத்துக்கொள்க.

கூ. புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(ப-ள்) புண்டரிகத்தவன்-இதயகமலத்திலுள்ளவன், மேவியபுகலியே - எனக் கின்பந்தருவானுமாய் மீளாவழியாகிய புகலிடமாயுமுள்ளவன் என்க.

(பொ-பு) இதயகமலத்திலிருந் திடையுறுத வானந்தம் பொழியப்பட் டென்னை மலபோதத்தில் தள்ளாமல எனக் கடைக்கலப் பொருளாயுள்ளவன்.

புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(ப-ள்) புண்டரிகம்-திரிபுண்டரம, தவன் - மிக்க பெருமையை யுடையவன், மேவிய-பொருந்திய, புகலி-சொல்லப்பட்டவன். ஏ-என்ப தீற்றசை என்க.

(பொ-பு.) ஆன்மாக்களுக்கு இரக்ஷையாக முண்டம்போலிருந்த திருநீற்றை யணியப்பட்ட மிக்க கருணையானவனே யான்பாடும் பாடலை யுவந்துள்ளவன்.

புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(ப-ள்.) புண்டரிகம்-புலி, தவன் - தவமுனி, மே - கூத்து, வியன் - பொன், பு-பொது, கலி-கற்றவன் என்க.

(பொ-பு.) புலிக்காலும், புலிக்கையும் பெற்றுள்ள வியாக்கிரபாத முனிவருக்கு ஞானானந்தமாகிய நாடகத்தைக் கனகசபையிலே யாடல்செய்யும் பதஞ்சலிதனையைக கற்றுள்ளான். வியம் எனற்பாலது-வியவெனக் கடைகுறைந்து நின்றது.

புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(ப-ள்) புண்டரிகத்தவன்-பிரமதேவன், மேவிய-தனது போதத்தாலே பணியலுற்ற, புகலியே-புகலியென்னுஞ் சிகாழிப்பதியே என்க.

(பொ-பு) கீழ்ச்சொன்ன லீலைகளெல்லாஞ்செய்கின்ற சிவன் தனதிச்சையால் பொருந்தியிருக்குமூர் பிரமாவானவன் பூசித்த புகலியென்னுந் திருப்பதி.

ச. விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(ப ள்) விள-விளாம்பழத்தை, கொளி - கன்றுகுணிலாக எறிந்துகொண்டவனாகிய விஷ்ணு, இ-விட்டு விளங்கானின்ற, கழ்தரு-நின்மலமீடிய, எங்கு-எவவிடத்தில், உருமேவினன்-தனது திருமேனியிலே மேவினன் என்க.

(பொ-பு.) கன்றுகுணிலாக எறிந்து விளவின்கனியைக்கொண்ட காரணனைப் பிரகாசஞ்செய்யப்பட்டு நின்மலமாயிருக்குள்ள தனது பெரியதிருமேனியிலே ஒன்றுபாதியாக வைத்துள்ளான் என்க. தீ எனற்பாலது - தி எனக்குறுகிநின்றது. கழுதரு எனற்பாலது-கழ்தரு எனநின்றது.

விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(ப-ள்) விலங்கு எனற்பாலது விளங்கு எனவும், ஒலி எனற்பால்து-ஒளி எனவுந் திரிந்துநின்றது. விலங்கு-மாறுபாடாய், ஒலி-கதறப்பட்ட பௌத்தனது தலையிலே, தி-அக்கினியைச்சொரிந்து, கழ்தரு-மிக்கபயத்தோடும் விழுகின்ற, எங்கு - ஒலிக்கும், உருமு-இடியை, எவினன்-விழும்படியேவினன் என்க.

(பொ பு.) மாறுபாடாய்க் கதறப்பட்ட பௌத்தனது தலையிலே அக்கினியைச்சொரிந்து மிக்க பயத்தோடும் விழுகின்ற இடியை விழும்படி யேவிப் பௌத்தரை வேரறுத்தானுந் தானேயன்றி யானன்றுகும்.

தீ எனற்பாலது - தி எனவும், காழ்தரு எனற்பாலது - கழ்தரு எனவும், எங்கு எனற்பாலது-எங்கு எனவுங் குறுகிநின்றன.

விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(ப-ள்.) விள்-நீங்குதல், அங்கு-அவ்விடத்தில், ஒளிது-ஒள்ளியது, இகழ்தரு-இகழப்படுமெ, எங்குரு-எம்முடையகுரு, மேவினன்-கலந்தனன் என்க.

(பொ-பு.) தனது பரிபூரணத்திலே தன்னையிழந்து இரண்டாய் விசுவமுருகித் தான் விஷமாகத தூஷணப்பட்டு நிற்கின்ற எனைகளும் குருமூர்த்தியாய்வந்து என் பிறவியையொழித்துத் தனது பேரின்பமாகிய பரிபூரணத்திலே எனதடிமை குலையாமலிரணடற வைததவன்.

விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(ப-ள்.) விளங்கு ஒளி-எங்கும் பிரகாசியாகின்ற கீர்த்தி, திகழ்தரு - சிறத்தல், வெங்குரு-இயமனற் பூசிகப்பட்ட திருப்பதி, மேவினன்-விருமபினன் என்க.

(பொ-பு) கீழ்ச்சொல்லிபபோந்த செய்திகளெல்லாமுடைய னெத்தன்மைய னேனெனனில் எங்கும பிரகாசியாகின்ற கீர்த்தியினற் சிறக்கப்பட்டுள்ள இயமனற் பூசிக்கப்பட்ட வெங்குரு வென்னு ந திருப்பதியை விருமபியுள்ளான். வெங்குரு என்பதும சீகாழி.

ரு. சுடர்மணிமாளிகைத் தோணிபுரத்தவன்.

(ப-ள்.) சுடர்மண்-சூடார்மண், இம்-ஈமம், ஆளி-ஆளப்பட்டவன், கைத்தோணி - போதொலைத்த தெமபைபமாலை, புரத்து - திரிபுரங்களையும், அவன் - அவம் பணைணினவன என்க.

(பொ-பு.) சுடுநிலமாகிய மயானத்தை நடமாடு மிடமாகக்கொண்டும், மூப்புரங்களையும் நகைசெய்து சுடப்பட்ட வெற்றிபபோரையுடைய தெம்பைமாலைக்கடவுள். சூடார் எனற்பாலது-சுடனெனவும, ஈமம் எனற்பாலது - இம் எனவும், குறுகிநின்றன. தோணிமெனற்பாலது-தோணியென மருவிற்று.

சுடர்மணிமாளிகைத் தோணிபுரத்தவன்.

(ப-ள்) சுடர்மணி - சூடாமணி, மாளி-மாலி, கைத்தோள் - துதிக்கையினையுடைய யானையை, நிபுரத்தவன்-வடிவில்லாயற் செய்தோன் என்க.

(பொ-பு) என்னுச்சிக்குச் சூடாமணியுமாய் என்மேல் வைத்த மாலினையுடையனுமாய் யாகத்தின்கணவந்த யானையை வடிவொழிதலுப் போர்க்குந் தன்மையையுடையவன்.

சூடாமணியெனற்பாலது - சுடர்மணியெனவும், மாலியெனற்பாலது - மாளி எனவும், தோல் எனற்பாலது - தோள் எனவும் நின்றன. மாலையுடையவன் - மாலி. தோல்-யானை.

சுடர்மணிமாளிகைத் தோணிபுரத்தவன்.

(ப-ள்.) சுடர்-சூரியன், மணி-கழுவி, மாளி-கெட்டவன், கைத்தோணி-தெப்பம், புரத்தவன்-புரந்தவன் என்க.

(பொ-பு.) சூரியனுடைய களங்கத்தைக் கழுவப்பட்ட சமுத்திரம்போன்ற சினைக்கடலிலே கீழ்ப்பட்டமூழ்கிக் கெடாநின்ற ஆன்மாக்களுக்குக் கைப்பற்றிக் கரையேறுந் தெப்பமாகப் பிரணவமென்கிற மந்திரத்தை அவரது செவியின்கண்ணே யுண்டாக்காநின்றவன்.

மண்ணி என்பது-மணியென இடைகுறைந்து நின்றது. புரந்தவன் எனற்பாலது-புரத்தவன் என வலித்தல் விகாரமாயிற்று.

சுடர்மணிமாளிகைத் தோணிபுரத்தவன்.

(ப-ள்.) சுடர்-விளக்கத்தையுடைய, மணி-நவரத்தினங்களாலே அலங்கரிக்கப்பட்ட, மாளிகை-மாளிகைகள்சூழ்ந்த, தோணிபுரத்தவன் - திருத்தோணிபுரத்தின்கண்ணே வாழ்கின்றவன் என்க.

(பொ-பு) விளக்கத்தையுடைய நவரத்தினங்களாலே அலங்கரிக்கப்பட்ட மாளிகைசூழ்ந்த திருத்தோணிபுரத்திலே வீற்றிருக்குஞ் சிவன் இத்தன்மையன்.

சு. பூசுரர்சேர்பூந்த ராயவன்பொன்னடி.

(ப ள்) பூ-பூமியிலுள்ளோர், சுரர்-தேவர்கள், சேர்-தோன்றுதல், பூ - இதயகமலம், தராயவன்-தரிதவன், பொன்-பொலிவு, அடி-கண்ணடி என்க.

(பொ-பு) பூமியிலுள்ளாரையுந் தேவகணங்களா யுள்ளாரையுந் தனது நாபிக்கமலத்திலே தோற்றுவிக்கபபட்ட பிர்மா விஷ்ணுவினது போதத்திலே கண்ணடியும் நிழலும்போலப் பிரதி விமபியாநின்றவன். ஆடி என்பது அடியெனக் குறுகினின்றது.

பூசுரர்சோபூந்த ராயவன்பொன்னடி.

(ப-ள்) பூசுரா-மலத்தைக்கழுவிய சிவஞானிகள், சேர்-திரட்சி, பூ - பொலிவு, தராய்-பெறப்பட்ட, அவன்-அகடவுள், பொன-வனப்பு, நடி - நாடகமாடப்பட்டவன் என்க.

(பொ-பு) மலத்திரயங்களைக் கழுவப்பட்ட சிவஞானிகள் கூட்டம் பொலிவு பெறத்தக்க வனபபையுடைய ஆனந்தநிருத்தஞ் செய்தருள்பவன்.

பூசுராசோபூந்த ராயவன்பொன்னடி.

(ப ள்) பூசு-திருநீற்றையுத்தூளிக்கப்பட்ட, உரர்-மார்பையுடையவர், சேர்பு-அரிதல், ஊந்தராய-தள்ளுதல், யவன-யௌவனம், பொன்-அழகு, அடி-மூலம்என்க.

(பொ-பு) சர்வாங்கமு முத்தூளணம்பண்ணின மார்பையுடைய சிவஞானிகளும், புண்ணியபாவக கட்டையரிந்து விசுவத்தைத் தள்ளப்பட்ட சிறப்பையுடையருமா யிராநின்றவர்களுக்கு மிகுதியான மூலமாயுள்ளவன். உந்தராய் என்பது-ஊந்தரா யென நீண்டது.

பூசுரர்சேர்பூந்த ராயவன்பொன்னடி.

(ப-ள்) பூசுரர்-மறையோர், சேர்-திரட்சி, பூந்தராயவன் - பூந்தராயென்னுந் திருப்பதியிலேயுள்ளவன், பொன்னடி-அழகிய திருவடித்தாமரை என்க.

(பொ-பு.) மறவிலா மறையோர்வாழ்கின்ற திருப்பூந்தராயென்னுந் திருப்பதியின்கண் வீற்றிராநின்ற சிவனது அழகிய திருவடித்தாமரை யென்னை யாண்டிடுவதாக. பூந்தராயென்பதுஞ்-சோழி.

எ. செருக்குவாய்ப்புடையான் சிரபுரமென்னில்.

(ப ள்.) செருக்கு-மயக்கம், வாய்ப்பு-மேலீடு, உடையான் - கேடுசெய்யான், சிரபுரம்-மேலாகிய இருப்பு, என்னில்-என்னுடையபோதமே என்க.

(பொ-பு.) தனது திருவடிப்பிரசாத மில்லாதார்க்கு மலமயக்கத்தின் மேலீட் டைக்கெடாத சிவனுக்கு விசுவாதீதமான இருப்பிடம் எனது சைதனியமே.

செருக்குவாய்ப்புடையான் சிரபுரமென்னில்.

(ப ள்) செர் - சத்தாதிக ளஞ்சுஞ்சேரப்பட்ட, உக்கு - அந்தப்பூமி, வாய்ப்பு டையான்-தன் வாயினிடமாகவுள்ள விஷ்ணு, சிர்-சிறப்பு, அபுரம் - உயிரோன களே பரம், என்னில்-மேனிலை என்க.

(பொ-பு) சத்தாதிக ளஞ்சுஞ்சேரப்பட்ட உலகத்தைத் தன் வாயினிடமாக வுடைய விஷ்ணுவின் களேபரத்தைத் திருமேனியிலே தரித்துள்ளான். சேர்-எனற்பா லது-செர் எனவும், சீர் எனற்பாலது-சிர் எனவுங குறுகினனறன.

செருக்குவாய்ப்புடையான் சிரபுரமெனனில்.

(ப-ள்) செருக்கு-ஆத்துமவிகாரமாகிய கர்வம், வாய்-இந்திரியம், புடையான்-இடத்தான், சிரம்-மேல், புரம்-சரீரம, என்னில்-சததியம் என்க.

(பொ பு) ஆத்துமவிகாரமாகிய காவத்திலே இந்திரியங்களுக்கு விடயமா கிய சுவாக்கத்தி லிச்சையையுடையானுககு அந்தச் சுவர்க்கம் மெய்யாக விசேடித்திரு க்குமன்றே.

செருக்குவாய்ப்புடையான் சிரபுரமென்னில்.

(ப-ள்) செருக்கு-இந்திரியயுத்தத்திற்கு, ஆய்ப்பு-இளைப்பு, உள்ளையான்-உள் ளைக்கப்படான், சிரபுரமென்னில்-சிரபுரமென் றுரைகளில் என்க.

(பொ-பு.) இந்திரியவன்மையாகிய யுத்தத்துக்கு இளையாமல் அந்த இந்திரியமா கிய பாணங்கள் தன தறிவுக்குள் தைக்கப்படாலை.

(தாற்பரியம்.) ஒருகாற் சிரபுரமென்று சொன்னவிடத்துப் பஞ்சேந்திரியங்க ளையும் அவியப்பொருது சிவனுடைய திருவடியிலே அடையாநிற்பன் என்பதாம்.

அ. பொன்னடிமாதவர் சேர்புறவத்தவன்.

(ப-ள்) பொன்-பொலிவு, நடி-கூத்துடையான், மாது-பத்திரகாளி, அவர்-பூதகணங்கள், சோ-தங்குதல், புறவததவன்-சுடுகாட்டிலுள்ளவன் என்க.

(பொ-பு) பொலிவினையுடைய மாயாநிருத்தம் புரிகின்ற பத்திரகாளியும், பூதபசாசும்பொருந்திய மயானமே திருக்கோயிலாக வுள்ளவன்.

பொன்னடிமாதவர் சோபுறவத்தவன்.

(ப-ள்.) பொன்-தூய்மை, அடி-வழி, மாதவர் - தபோதனர், சேர் - திரட்சி, புறவம்-மூல்லைநிலம், தவன்-தவம்புரிந்துள்ளான் என்க.

(பொ பு.) சுத்தமான வழியைத்தரப்பட்ட மகா இருஷிகள் திரண்டு தவம் பண்ணுநிற்கும் ஆரணியத்தில் தனித்துத் தவம்புரிபாநிற்குந் தபோதனன்.

பொன்னடிமாதவர் சேர்புறவத்தவன்.

(ப-ள்.) பொன்-இலக்குமி, அடி-ஆபாணத்தொகுதி, மாது அவர் - இருடி பத்தினிகள், சேர்பு உறு-பிச்சையிடவந்தணைதல், அவத்தவன் - கலிசோர்தலிலச்செய்த திருவாணி என்க.

(பொ-பு.) அழகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இலக்குமியை யொத்த இருபத்தினிகள் பிச்சையிடவந் தலையுமிடத்துத் தனக்குள்ள திருவாணத்தை அவர்களுக்குக்கொடுத்தவன்.

பொன்னடிமாதவர் சேர்புறவத்தவன்.

(ப ள்.) பொன்-பொன்னுற்செய்யப்பட்ட பாடகநூபுர காலாழிகள்முதலியவு மிடப்பட்ட, அடி-பாதம், மாதவர்-கன்னியர், சோ-இனமாய்விளையாடுதல், புறவத்தவன்-திருப்புறவமென்கின்ற திருப்பதியில் வாழ்கின்றவன் என்க.

(பொ பு) பொன்னும் செய்யப்பட்ட பாடக நூபுராதிகளைப் பாதங்களிலே யணிந்துள்ள கன்னியர்திரண்டு விளையாடும் புறவமென்னுந் திருப்பதியில் வாழ்கின்ற சிவன். புறவம் என்பதனுஞ்-சோகாழி.

கூ. தசமுகனெரிதர வூன்றுசண்பையான்.

(ப-ள்.) தசமுகன்-தயவையுடையான், எரிதர - எரிவீசு, ஊன்று - அழுந்து, சண்-வேகம், பையான்-படம்பொருந்திய பாம்பையுடையான் என்க.

(பொ-பு) ஆத்துமாக்களிடத்துக் கருணைபிறக்கு மிடமாயுள்ளவன். அக்கினி வீசப்பட்டுத் திருவயிலே அழுந்தச்சாத்தியுள்ள விரிந்த படத்தினையுடைய பாம்பை அணைஞாணாக வுடையான்.

தசமுகனெரிதர வூன்றுசண்பையான.

(ப-ள்.) த-அது, சமுகம்-திரட்சி, நெரி-நேரானவன், தர-புலி, ஊன் - மாமிசம், துசு-தூசு, அண்பையான்-விரித்துடுத்தான் என்க.

(பொ-பு) எல்லாமிறந்து அத்தமாயுள்ள சிவஞானிகள் குழாத்துக்கு நேரிதாகிய சூனியமாயுள்ள பொருளைத் தோற்றுவித் துள்ளானுமாய்ப் புலியினது ஊன்பொருந்திய தோலாடையைத் திருவயிலே விரிதுடுத்தவன். நேரி எனற்பாலது - நெரி எனக் குறுகிநின்றது. தரக்கு எனற்பாலது-தர எனக் குறைந்தது. தூசு எனற்பாலது-துசு எனக் குறுகிநின்றது. பாயான் - எனற்பாலது பையானெனக குறுகிப் போலியாயிற்று.

தசமுகனெரிதர வூன்றுசண்பையான்.

(ப-ள்.) தசம்-தைசதம், உக-கெட, நெரி-எதிர்ப்பட்டவன், தரம்-மலை, ஊன்-திருவுளத்தடைத்தல், து-விசேஷ ஞானமுள்ளவன், சண்-சட்சமயம், பையான்-பயனுள்ளவன் என்க.

(பொ-பு.) ஆத்துமவிகாரமான அகங்காரம்போம்படி என்னறிவி லெதிர்ப்பட்டவன் கயிலாயமலையைத் திருவுள்ளத்தடைத் தெழுந்தருளியிருந்து ஆத்துமாக்களை யிரக்ஷியாநின்ற விசேஷத்தை யுடையவனென் றேத்தும் சட்சமயங்களுக்கும் அவரவர்கொண்ட பயனுள்ளவன். நேரி எனற்பாலது-நெரியெனக் குறுகிநின்றது.

தசமுகனெரிதர வூன்றுசண்பைபான்.

(ப-ள்.) தசமுகன் - பத்துத்தலைகளையுடைய இராவணன், நெரிதர-முறிய, ஊன்று-அமுக்கிய, சண்பையான்-சண்பையென்னுந் திருப்பதியில் வீற்றிருப்பவன் என்க.

(பொ-பு.) பத்துத்தலையுள்ள இராவணன் முறியும்படி திருவிரலாலடர்த்தவன் யாரொன்னில், சண்பையென்னுந் திருப்பயிலே வீற்றிருக்குங் கடவுள்.

கo. காழியானைய னுள்ளவாகாண்பரே.

(ப-ள்) காழியான-நிலைபெற்று நின்மலமான சித்தத்தையுடைய பத்தரிடத்து, உள்ளவா-சந்நியம், காண்பரே-நோக்குவர் என்க.

(போ-பு) நிலைபெற்று நின்ற நின்மலமாகிய சித்தத்தையுடைய பத்தரிடத்துச் சத்தியப்பொருள் வீளையுமபொருட்டு ஞானகாட்டத்திலுலே அவர்களைக் கடாக்ஷிக்கின்றவன்.

காழியானய னுள்ளவாகாண்பரே.

(ப-ள்) காழியான்-களங்கமுள்ளவன், நயனுள்ளவா-ஞானக்கண்ணுள்ளவாறு, காண்பரே-நிலையையாக நினைப்பரே என்க.

(போ-பு.) திருமிடற்றிற் களங்கமுடையாளது கருணையை நினைத்து ஞான நாட்டத்தையுடைய சிவஞானிகள் சிவனுக்கிச்சை தன்னடியார்க்கே ஆங்காரத்தைத் தடுக்குதே பணியெனத் தமதறிவிலே கருதாநிற்பர்.

காழியானய னுள்ளவாகாண்பரே.

(ப-ள்) காழியான்-விஷ்ணு, அயன்-பிரமா, உள்ள-நினைக்க, ஆ - அதிசயம், கண்-கருதுதல், பரே-அன்னியம் என்க.

(போ-பு) விஷ்ணுவும்-பிரமாவுந் திருமுடியுந் திருவடியுங்காணும்பொருட்டு, வராகமு-மன்னமுமாகக்கருதி வடிவுகொண்டார் ஐயோ உள்ளபடி கருதிச் சிவனைப் பெருமல் அவர்கருதிய தேதென்னில், அன்னியமேகண்டனா. கண - எனற்பாலது-காண் என நீண்டது.

காழியானய னுள்ளவாகாண்பரே.

(ப-ள்.) காழியான்-காழிப்பதியிலுள்ளான், அயன் - ஐயன், உள் - என்னறிவி லுண்டான, அவா-ஆசை, காண்பரே-தரிசிப்பரே என்க.

(போ-பு.) என்பொருட்டாற் காழியென்னுந் திருப்பதியைப் படைத்தானே என்னையனை எனதாசையை-கீழ்ச்சொன்ன விருவாகளும தாங்கள் தேடுந் தேட்டப்பிறி வில் மயக்கத்திலே தேட்டமழிசதுத் தோன்ரு நிற்பவனை தேடி மறத்தலொழிந் தெவ் வாறுகாண்பர்.

கக. கொச்சையண்ணலைக் கூடகிலாருடன்மூடரே.

(ப-ள்.) கொச்சை-அறியாமையைப் பொருந்தியுள்ள ஆணவமலம், அண்ணலை-பொருந்துதலை, கூடகிலார்-மாறுபட்டார், உடல்-உடலாலே, மூடரே-மூடரோ என்க.

(போ-பு) ஆணவமலத்தோடு கூடியுள்ள மயக்கத்துடன் மாறுபட்டோர்கள் மாயாதனுவாலு மந்திரதனுவாலு மறைக்கப்படாகன். மூடார் எனற்பாலது - மூடர் எனக் குறுகிநின்றது.

கொச்சையண்ணலைக் கூடகிலாருடன் மூடரே.

(ப-ள்.) கொச்சை-புலால் நாற்றம், அண்ணல்-அணுகுதல், கூடகிலார் - மனம் பொருந்தமாட்டாதார், உடல் மூடரே-சரீரத்தைப் புதைப்பரோ என்க.

(போ-பு) புலால் நாற்றத்தைப் பொருந்திய வழுக்குமெய்யைப் பொய்யென்று மனங்கொள்ளமாட்டாமல் அதுவே தமது நிலைபெற்ற வுருவாக நினைத்துத் துவராடை யாலே யுடம்பைச் சூழப்பட்ட பௌத்தரும்.

கொச்சையண்ணலைக் கூடகிலாருடன்மூடரே.

(ப-ள்) கொச்சையள்-பேதைத்தன்மையையுடைய மச்சியகந்தி, நலை-புலப்படா நின்ற அவளது நலத்தைக்கருதி, கூடு-சரீரம், அகில்ஆர்-அகில் மணம்பொருந்திய உடன்-அத்தன்மையாளுடன், மூடரே-மொய்க்குமாறு பண்ணினது அது பொருந்துதல் என்க.

(போ-பு.) பேதைத் தன்மையையுடைய மச்சியகந்தியினுடைய நலத்தைக் கொள்ளும்பொருட்டு அவளது சரீரமெல்லாம் சுகந்த மொய்க்குமபடி யவளுடனே பொருந்திய பராசரனுடைய மகாவிருடிவந்து சிவனைப்பொருந்தியருச்சிக்கப்படுதலால்.

கொச்சையண்ணலைக் கூடகிலாருடன்மூடரே.

(ப-ள்.) கொச்சை-கொச்சையாகிய பராசரன் பேராலுள்ள கொச்சையெண் ணுந் திருப்பதி, அண்ணலை-கத்தாவை, கூடகிலார-நேர்படமாட்டார், உள்தல்-உள்ளுதல், மூடரே-அந்தகார நிறைந்த போதத்தையுடையவரே என்க.

(பொ-பு) பராசரமுனிவரைப் பூசிகசப்பட்டு அவன் பெயரால் பெயர்பெற்று ள்ள கொச்சை நகரென்னுந் திருப்பதியிலே எழுந்தருளியிராநின்ற தலைமையோனை உள்ளபடி தரிசனம்பண்ணி வழிபட மாட்டார்களது நிலைவு எவ்வாறிருக்கு மென்னில், மழைக்காலிருளும்வெளிதென இருண்டமயக்கத்தையுடையஆணவபோதமாயிருக்கும்.

கஉ. கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை.

(ப ள்) கழுமல்-மிகுதிப்பட்டகுற்றம், அமுது செலம், பதிக்க - வினைவிக்க, உள்ளி-உள்ளநீ, கட்டு-வடிவாகக் கட்டுண்டல், உரை-தேயதல் என்க.

(பொ பு) மிகுதிப்பட்ட தோஷமாயுள்ள சுக்கில சுரோணிதமாகிய இருவகை நீரின்கண்ணே சிரமுதலாகிய அவயவமாகத் தோற்றிப பூமியின்கண் செனித்துப பரிண மித்துப் பின்பு தேய்ந்து மரிக்கினற சென்மத்தையும். பரிணமித்தல்-வேறுபடுதல்.

கழுமலமுதுபதிக் கவுணிபன்கடடுரை.

(ப-ள்.) கழு கழுவப்படும், மலம் உது - ஆணவமலமு மற்றதனுடன் சுட்டிச் சொல்லப்பட்ட மாயாமலத்தையுங கன்மமலததையும், பதி-பாதி, கவுணி - உள்ளே அகப்படுத்திக் கவுளிகரித்துககொள்ளுதல், அன்கண - ஆத்துமாவினிடத்து, துரை-இறைவர் என்க.

(பொ-பு.) கீழ்ச்சொல்லிப்போந்த சென்மத்தையுங் கழுவி மலத்திரயங்களை யுங் கழுவாநிற்கும. (எனறபதம நிற்க. இனிச சிவனது நாமமுரைக்கற்பாற்று.) தன துபாதியாகிய திருவருளிலே என்னை யகப்படுத்திக் கவுளிகரிதது்கொணடாந்த அருள் வழியாக எனதிடத்தி லிடையருமல் வாழுந தனனை யெனக்குதந் தடிமை குலையாம லெக்கண்ணும விட்டு விளங்குங கத்தர். பாதி எனற்பாலது-பதியெனக்குறுகினின்றது.

கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை.

(ப-ள்.) கழும்-மயக்கம், அலம்-அலக்கணபடுதல், அமுது-அமுதம், பதி-கர்த் தர், க-சிரசு, உணியன்-உணணப்பட்டவர, கட்டு-விளக்கம், உரை-பொன் என்க.

(பொ-பு) மாயா மயக்கத்தின்கண்ணே மயங்கி பெத்தமுத்தி யிரண்டுந்தெரி யாமல் நிண்டாடப்பட்ட மலபோதாகரு அமுதம்போன்று அரிதா யுள்ளவனுமாய் விட்டு விளஙகப்படாநின்ற பொன்னுருவை யுடையவனுய்ச் சிருஷ்டிக்குக் காததாவா கிய பிரமனது சிரக்கபாலத்திலே பிச்சைகொணடு துகருங்கருணையாளனே.

கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை.

(ப-ள்.) கழுமலமுதுபதி-கீழ்ச்சொன்ன பதியின்கண், கவுணியன் - கவுணிய கோத்திரத்துவந்த மறையோனுகிய யான், கட்டு-காட்டு, உரை - உரைப்பீராக என்க.

(பொ-பு.) திருக்கழுமல மென்னும் மூவாப் பழங்கிழமைப் பன்னிரு பெயர் பெற்ற அனாதி மூலமாகிய பதியிடத்துக கவுணிய கோத்திரதகிலே தோன்றப்பட்ட யான் நிவேதிக்கப்படும் காட்டாகிய இபபாடலெக் கீழ்ச்சொன்னவற்றிலு மலதிரயங்க ளிலும் அழுந்தா நின்ற ஒருத்தராகிலும் பலராகிலும் உரைசெய்வார் உயாந்தாரே யாத லா லிப்பாடலை யிடைவிடாம லுரைசெய்வீராக. காட்டு என்பது - கட்டெனக் குறுகி நின்றது.

திருச்சிற்றம்பலம்.

உரை - முற்றியது.

திருவெழுகூற்றிருக்கை.

திருச்சிற்றம்பலம்.

ஒருருவாயினை மானுங்காரத்- திரியல்பாயொருவிண்முதல்பூதல-மொன்றியவிருசுடரும்பர்கள்பிறவும் - படைத்தளித்தழிப்பமும்மூர்த்திகளாயினை-யிருவரோடொருவனுகிநின்றனை - யோரானீழலுன்கழலிணை - முப்பொழுதேத்தியநால்வர்க்கொளிநெறிகாட்டினை - காட்டமூன்றுகக்கோட்டினை-யிருநதியரவமோடொருமதிசூடினை - யொருதாளீரயின்மூவிலைச்சூல - நாற்கான்மான்மறியைத்தலையரவ - மேந்தினைகாய்ந்தகால்வாய்மும்மதத்திருகோட்-டொருகரியீடழித்துரித்தனை-யொருதனுவிருகால்வளையவாங்கி- முப்புரத்தோடுகானிலமஞ்சக் - கொன்றுதலத்தறவுணரையறுத்தனை-யம்புலனுலாமந்தக்கரண-முக்குணமிருவளியொருங்கியவாலேரேத்தநின்றனை யொருங்கியமருத்தா-டிருபிறப்போர்த்தமுப்பொழுதுகுறைமுடித்து-நான்மறையோதியைவகைவேள்வி - யமைத்தாறங்கமுதலெழுத்தோதி - வரன்முறையின்றெழுவான்றனை வளாக்குமபிராமபுரம்பேணினை - யறுபதமுரலும் வேணுபுரமவிருமபினை - யிகலியமைந்துணாபுகலியமர்ந்தனை - பொங்குகாற்கடல்சூழ்வெகுளிநவிளங்கினை - பாணிமூவுலகுமபுகையமேன்மிதந்த-தோணிபுரத்துறைந்தனை தொலையாவிருநிதி - வாய்ந்தபூந்தாயேய்ந்தனை-வரபுரமென்றுணர்சிரபுரத்துறைந்தனை-யொருமலையெடுத்தவிருநிலவரக்கன்-விறல்கெடுத்தருளினைபுரவம்புரிந்தனை - முகநான்குத்தியின்றோணுமுகனறியாப் - பண்பொடுநின்றனைசண்பையமர்ந்தனை-யையுறுமமணருமறுவகைத்தேரரு-மூழியுமுணராக்காழியமர்ந்தனை - யெச்சனேழிசையோன்கொச்சையைமெசசினை - யாறுபதமுரைந்தமர்கல்வியு - மறைமுதலனன்குமூன்றுகாலமும் - தோன்றநின்றனையிருமையினொருமைய-மொருமைதன்பெருமையுமறிவிலா மறையோர்-கழுமலமுதுபதிக்கவுணியனகடவுரை - கழுமலமுதுபதிக்கவுணியனறிய-மனையதன்மையையாதலினினை-நினையவல்லவரில்லைணிலத்தே.

திருவெழுகூற்றிருக்கைத் திருவுள்ளக்கருத்து.

ஒருருவாயினை - என்றது, எல்லாத்தத்துவங்களையுங்கடந்து வாக்குமனங்களுக்கு மெட்டாமலிருந்துள்ள தற்சுருபத்தான் பஞ்சகிருத்தியங்களையும் நிகழ்த்த வேண்டினதிச்சையா லெடுத்துக்கொண்டிருக்கும் திருமேனியையென்றவாறு.

மானுங் காரத்திரியல்பாய் - என்றது, மானென்பது - சத்தி - யாங்காரத்திரியல்பாய் - தற்சத்தியைக்கொண்டு சர்வாணுக்கிரகமான பஞ்சகிருத்தியங்களைநடத்தவேண்டிச் சத்திசிவமாகிய வீரண்டிருவாயினை என்றவாறு.

ஒரு - என்றது, அந்தச் சத்தியுடனே கூடியொன்றுகிநின்றனை என்றவாறு.

விண்முதல்பூதல மொன்றியவிருசுட ருமபாசன்பிறவும் படைத்தளித்தழிப்ப மும்மூர்த்திகளாயினை - என்றது, ஆகாசமுதலாகப் பூமியீறுகவுள்ள பஞ்சபூதங்களையுஞ் சந்திராதித்தர்களையுந் தேவர்களையு மற்றுமுள்ள ஆத்மாக்களையும் படைகைக்கும், காக்கைக்கும், அழிக்கைச்சும், பிரமா - விஷ்ணு - ருத்திரரென்கின்ற திருமூர்த்திகளுமாயினை என்றவாறு.

இருவரோடொருவனுகி நின்றனை - என்றது, பிரமாவையும் விஷ்ணுவையுமிடத்திலும் வலத்திலும் அடக்கிக்கொண்டு ஏகமாய்த் திருமூர்த்தியாகி நின்றனை என்றவாறு.

ககூஅ திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

ஓரால்நீழலுன்கழலிரண்டு மும்பொழுதேத்திய கால்வர்கொளிநெறிகாட்டினை என்றது. விருக்ஷங்களுக்கெல்லாந் தலைமையாயிருப்பதொரு வடவிருக்ஷத்தினீழலிலே பெழுந்தருளியிருந்து நின்னழகிய ஸ்ரீபாதங்களே யுதய - மத்தியான - மத்தமனமென்கின்ற மூன்றுகாலமுந் தோத்திரஞ்செய்யாநின்ற அகஸ்தியன் - புலத்தியன் - சனகன் - சனற்குமாரனென்னும் நால்வகையிருடிகளுக்குந்தற்சுருபமான திருமேனியைக்காட்டியருளினை என்றவாறு.

நாட்டமூன்றுகக்கோட்டினை - என்றது பிரம்மா முதலாயிருந்துள்ள அத்மாக்கள் ரூபமென்னும் புலனுலே சர்வ பதார்த்தங்களையுங் காணுதபடியாலே சந்திராதித்தர்களையு மக்கினியையு மூன்றுகண்ணுகக் கொண்டருளி அந்தகாரமான விருளை யோட்டினை என்றவாறு

இருநிலபரவமோடொருமதிரூடினை - என்றது. பெரிதாகிய கங்கையையு மொப்பில்லாத பாம்பினையு மொருகாலத்தினுமுதிராத பிறைக்கண்ணியையுஞ் சூடியருளினை என்றவாறு.

ஒருதாளீரயின்மூவிலைச்சூல நாற்கான்மான்மறியைந்தலை யரவமேந்தினை - என்றது. பிரணவமாயிருந்துள்ள ஒருகாம்பினையும் ஈருகின்ற கூர்மையினையும் பிரம்மா - விஷ்ணு - ருத்திரனென்கின்ற மூன்றிலையினையுமுடையதொரு சூலத்தினையும் இருக்கு யசுர் - சாமம் - அதர்வணமென்கின்ற நாலுவேதங்களையும் நாலுகாலாயிருந்துள்ள தொரு மான்கன்றினையும் ஸ்ரீபஞ்சாக்ஷரங்களையு மஞ்சுதலையாகவுடையதொரு மகாநாகத்தினையும் அஸ்தங்களிலேதரித்தருளினை என்றவாறு.

காய்ந்தகால்வாய் மும்மதத்திருகோட் டொருகரிமீடழித்துரித்தனை - என்றது தன்னிழலைக்காயத்தக்க கோபத்தினையும் தொங்கும்வாயினையு மிரண்டு கொம்பினையு முடையதொரு ஒப்பில்லாத ஆனையினுடைய பெலங்களையெல்லாங்கெடுத்து உரித்துப் போர்த்தனை என்றவாறு.

ஒருதனுவிருகால்வளையவாங்கி மூப்புரத்தோடு நானிலமஞ்சக் கொன்றுதலத் திறவுவுணரையறுத்தனை - என்றது. ஒப்பில்லாத பொன்மலையாயெவில்லை யிருதலையும் வளையவாங்கி அஸ்திரத்தைத்தொடுத்து, மூன்றுபுராதிகளாகிய அவுணரையறுத்தனை என்றவாறு.

ஐம்புலநாலா மந்தக்கரண முக்குணமிருவளி யொருங்கியவாறேரைத்த நின்றனை - எனறது சத்த - பரிச - ரூப - ரச - கந்தமென்னப்பட்ட ஐம்புலங்களையு, மனம புத்தி - யாங்கார - சித்தமென்கின்ற அந்தக்கரணங்கள் நான்கினையும், ராசத - தாமத - சாத்துவிதமென்கின்ற மூன்றுகுணங்களையும், பிராணன் - அபானனென்கின்ற விரண்டு வாயுவையும, மூலாதாரத்திலே யொடுக்கிக்கொண்டு ஏகாக்கிரசித்தராயிருந்துள்ள தேவர்களேத்தினறனை என்றவாறு.

ஒருங்கியமனத்தோடிருபிறப்போர்ந்துமுப்பொழுதுகுறைமுடித்துநான்மறை யோதி ஐவகைவேள்வியமைத்தாறங்க முதலெழுத்தோதிவரன்முறைபயின்றெழுவான் றனைவளர்க்கும் பிரமபுரமபேணினை - என்றது. ஆகாரம் - நித்திரை - பயம் - மைதுன மிவற்றில் செல்லுகின்ற மனத்தைப் பரமேசுவரனுடைய ஸ்ரீபாதங்களிலேயொருகி மூன்று தாம் மாதாவின உதரத்திலேபிறந்த பிறப்பும், உபநயனத்தின்பின்பு உண்டான பிறப்புமாகிய இரண்டையும் விசாரித்துமூன்றுசந்தியும், செபதாப்பண - அனுட்டான, ஓமங்களையுமுடித்து, இருக்கு-யசுர்-சாம-அதர்வணமென்கிற நாலுவேதங்களையுமோதி-சிவபூசை - குருபூசை மகேசுரபூசை - பிராமணபோசனம் - அதிதி புசிப்பு என்கின்ற வைந்துவேள்வியு முடித்து, ஓதல ஓதுவித்தல் - வேட்டல் - வேட்பித்தல் - ஈதல் - ஏற்றல் - என்னுமாறங்கங்களையுங்கடத்தி இவைகளுக்கு முதலாயிருந்துள்ள பிரணவத்தையு

மூச்சரித்துத் தேவலோகத்திலுள்ள தேவர்களுக்கு மவிகொடுத்து மழையைப்பெய்விக்கும் பிராமணராலே பூசிக்கப்பட்ட பிரமபுரமே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனை என்றவாறு.—ஆறங்கமாவன - மந்திரம் - வியாகரணம் - நிகண்டு-சந்தோபிசிதம் - நிருத்தம் - சோதிடம் - இவ்வாறு வழங்கப்படுகின்ற முறைபொன்று.

அறுபதமூரலும்வேணுபுரம்விரும்பினை - என்றது. அறுகாலுடைய வண்டுகளிசைபாடும் பொழிலசூழ்ந்த வேணுபுரமென்பதே திருப்பதியாக எழுந்தருளினை என்றவாறு.—வேணுபுரமென்பதற்குக் காரணம் - வேணு என்பானொரு இந்திரனுடன் கசமுகனென்பானொரு வசுரன் வந்து யுத்தம்பண்ண வவனுடனே பொருது அபசெயப்பட்டுப் பிரமபுரமென்னு முன்சொன்ன பதியிலேவந்து பரமேசுவரன்திருவடிகளிலே தம்பிரானே யடியேனுக்கமைத்தருளின சுவர்க்கலோகத்தைக் கசமுகன்சங்கரிக்க அவனுடன் யுத்தமபண்ணி அபசெயப்பட்டுப போந்தேனென்று விண்ணப்பஞ்செய்து பூசிக்கையாலே தம்பிரானுங்கணேசுரனைத் திருவுளத்தடைத்து வாராய் கணேசுரனே கசமுகன் வரப்பிரசாதமுடையவன் ஒருவராலு மவனைச் செயிக்கப்போகாது நீயுமவன் வடிவாகச்சென்று உன்வலக்கொம்பை முறித்தெறிந்து அவனைக்கொன்று வேணுவென்கின்ற இந்திரனைச் சுவர்க்கலோகத்திலே குடிபுகவிட்டுவாவென்று திருவுளம்பற்றக், கணேசரனு மவன்வடிவாகச் சென்று தன்வலககொம்பை முறித்தெறிந்து அவனையுங் கொன்று வேணுவென்கின்ற இந்திரனையு சுவர்கலோகத்திலே குடிபுகவிடவுண்டானதென்க.

இலியமைந்துணர்புகலியமர்ந்தனை - என்றது. தேவர்கள் மூன்புபுகலிடமென்று புருதலாலதிருப்புகலியென்பதே திருப்பதியாகவெழுந்தருளியிருந்தனை என்றவாறு. தேவலோகமான வமராபதியைச் சூரபதுமா என்பானொரு வசுரன்வந்து சங்காரம்பண்ண அவனுடனே தேவேந்திரன் முதலாயுள்ளாபொருது அபசெயப்பட்டு யுத்தத்தையொழிந்து இனி நமக்குப்பரமேசுவரன் ஸ்ரீபாதமொழிய, புகலிடமில்லையென்றவேணுபுரதலிலேவந்து பரமேசுவரனைத்சென்டம் பண்ணி யவனுலுண்டான கலிகையைவிண்ணப்பஞ் செய்து எங்களை ரகூஷித்தருளவேண்டுமென்னப் பரமேசுவரனும் - சுப்பிரமணியனைத் திருவுளத்தடைத்து வாராய சுப்பிரமணியனேநீ - ஆறுமுகமும - பன்னிரண்டுகையுமாகப்போயச் சூரபத்மாவையுஞ் செயிததுத் தேவலோகதிலே தேவாகளையும் குடிபுகுதவிட்டுவாவென வருகைகாரணம்.

பொங்குநீர்க்கடல்சூழ்வெங்குருவினங்கினை-என்றது. மிகவுங் கோபிக்கப்பட்ட கடல்சூழ்ந்த வெங்குருவென்றதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை என்றவாறு—லோகங்களுகெல்லாந் தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவான் என்னையொழிந்து காத்தாவுண்டோவென்று மனைகொவஞ் சொல்லுகையாலே பரமேசுவரனும் இவன் மகாகொவிபாயிருந்தானிவனுடைய செர்வத்தை யடகவேணுமென்று திருவுளத்தடைத்தருளித் தேவாக்குகுருவாகிய அதிகாரத்தை மாற்றியருளப் பயப்பட்டுப் புகலியென்கின்ற திருப்பதியிலேபோய்ப் பரமேசுவரனைத் தெண்டம்பண்ணி அடியேன்செய்த அபராதங்களைப பொறுத்தருளி யடியேனை ரட்சிததருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யத் தம்பிரானும் நீ மகாவேகியாயிருந்தாயென்று திருவுள்ளமாய் முன்புபோலே தேவர்களுக்குக் குருவாகிய வதிகாரதையுங் கொடுத்தகாரணத்தால் வெங்குரு என்கின்ற பெயருண்டாயது.

பாணிமூவுலகும்புதையமேல்மிதந்த தோணிபுரத்துறைந்தனை-என்றது. பாணியென்கின்ற செலம்பிரளயமாய்ப் பூமி-அந்தர-சுவர்க்க - மூன்றுலோகங்களையும் புதைப்பவதைச் சங்காரம்பண்ணி யருளியதின்மேலே தோணிபோலமிதந்த வெங்குருவாகிய தோணிபுரமென்றதே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனை என்றவாறு.

தொலையாவிருநிதிவாய்ந்த பூந்தாராயேய்ந்தனை - என்றது. வேண்டினர் வேண்டியது கொடுத்துத் தொலைவறச் சங்கநிதி-பத்மநிதியென்று சொல்லப்பட்ட இரண்டுநிதி

களும் பூவுந்தாராயும் பூசிக்கையாலே திருப்பூந்தாராயென்னப்பட்ட திருப்பதியிலே எழுந்தருளியிருக்கிறவனே என்றவாறு —ஒருகாலத்திலும் தொலையாதவரத்தைப் பெறுவதற்காரணமாகத் திருத்தோணிபுரத்திலேவந்து தம்பிராட்டியாரான உலகமுலைநாயகியம்மைக்கு வேண்டுவதென்னென்று கேட்டருள, தம்பிரானே அடியோங்களுக்கு எல்லாக்காலங்களிலும் தொலையாமல் கொடுக்கத்தக்க வரத்தைப் பிரசாதித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, அவ்வாறே தொலையாதவரத்தையுங் கொடுத்தருளி மகாசங்காரத்தினும் தம்முடைய ஸ்ரீஅஸ்தங்களிலே தரித்தருளும் வரப்பிரசாதமுங் கொடுத்தருளினதால் பூந்தாராயெனப் பெயருண்டாயது.

வரபுரமென்றுணர் சிரபுரத்துறைந்தனை-என்றது. வரத்தைத் தருவதான புரமென்றுணரத்தக்க சிரபுரமென்பதே திருப்பதியாக எழுந்தருளியிருக்கிறனே என்றவாறு.— தேவர்களும்-பிரமா-விஷ்ணுக்களுமாகக்கூடி அமிர்தத்தை யுண்டாக்கித் தேவகளையிருத்தி விஷ்ணுபகவான் அமிர்தம் படைத்துக்கொண்டு வருகிற வேளையில் ராகுகேதுவென்கின்ற இரண்டுபாம்பும் கூடிக்கரந்திருந்து அமிர்தபானம் பண்ணுவதாக இருப்பதுகண்டு விஷ்ணுபகவான் அமிர்தம் படைத்துவருகின்ற சட்டுவத்தைக்கொண்டு தலையறவெட்டுகையா லுடலிழந்து நாகமிரண்டுமே நமமுடல்தரக்கடவான் பரமேசுவரனெழிய வேறேயில்லையென்று திருப்பூந்தாராயிலேவந்து பரமேசுவரனைநோக்கி யிரண்டுசிரங்களும் பூசித்தலால் சிரபுரமென்று பெயருண்டாயது.

ஒருமலையெடுத்த விருதிறலரக்கன் விறல்கெடுத்தருளினை-என்றது. பெருமையுள்ள கயிலாயமென்னும் பேரையுடைத்தாய் உலகுக்கே ஆலயமாயிருப்பதொரு வெள்ளிமலையையெடுத்த பெரிய புசபெலங்கொண்ட ராவணனுடைய கர்வத்தைக்கெடுத்தருளினை என்றவாறு.

புறவம்புரிந்தனை-என்றது. பிரசாபதியென்கின்ற பிரமவிருஷி-கவுதமரிஷியைநோக்கி நீ ஸ்திரிபோகத்தைக் கைவிடாமலிருக்கிறவனல்லோவென்று தூஷணிக்கையாலே, கவுதமரிஷியும் பிரசாபதிபகவானைப்பார்த்து, நீ புறுவெலனும ஒருபக்ஷியாய் நரமாமிசம் புசிப்பாயாகவென்று சபிக்கப், பிரசாபதியும ஒரு புறுவாய்ப்போய்ப் பலவிடத்திலும் நரமாமிசம் புசிகையிலே யொருநாள், மாமிசந்தேடிச் சோழவமிஸத்திலே யொருராசா தினசரிதனுயிருக்கிறவிடத்திலே யிதப்புறுவாகிய ரிஷியும்போய், ராசாவைப்பார்த்து எனக்கு அதிகதாகமாயிருக்கின்றது சற்று நரமாமிசம் இடவல்லையோவென்ன, ராசாவு முனக்கு எவ்வளவு மாமிசம் வேண்டுமென்னப், புறுவு முன் சரீரத்திலே ஒன்று பாதி தரவேண்டுமென்ன, ராசாவுந் தன் சரீரத்திலே யொனறுபாதியரிந்திடப், புறுவுக்கு நிறையப்போதாமல் சர்வமாமிசதையு மரிந்திட்டு ராசாவுஞ் சோர்ந்துவிழ, இந்தப் புறுவாகிய பக்ஷியும் நமக்குத் தன் சரீரத்தை யரிந்திட்டுப் பிழைப்பித்த ராசா சரீரமெறும்படி யெங்ஙனேயென்று விசாரிக்குமளவில், பரமேசுவரனெழிய வேறில்லையென்று சிரபுரத்திலேவந்து பரமேசுவரனைநோகாகி அாச்சிக்கப், பரமேசுவரனுந் திருவுளத்தடைத்தருளத், தம்பிரானே யடியேன் தாகத்தீரத் தன் சரீரதையரிந்திட்ட ராசாவுக்கு முன்புபோல வுடலும் பிரசாதித்து, அடியேனுக்கு மிந்தச்சாபதோஷம் நீக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, ராசாவுக்குச் சரீரமுங்கொடுத்துப் புறுவுக்கு வேண்டும் வரப்பிரசாதங்களையும் பிரசாதித்துச் சாபதோஷமுமாற்றியருளப் புறுவும் பூசிக்கையாலே புறவமென்கின்றதே திருப்பதியாக வெழுந்தருளி யிருந்தனை என்றவாறு.

ரென்றுணரூழியும்வாழுமெந்தைபெருமானடியேத்தி
நின்றுணர்வாரைநினையகில்லார்நீசர்நமன்றமரே. (ச)

வானிடைவான்மதிமாடந்தீண்டமருங்கேகடலோதந்
கானிடைமீழலிற்கண்டல்வாழுங்கழிசூழ்கலிக்காமூ
ரானிலடையைத்துகந்தாடுநினையமரர்தொழுதேத்த
நானடைவாம்வணமின்புதந்தாலமேநினைவோமே. (ரி)

துறைவளர்கேதகைமீதுவாசஞ்சூழ்வான்மலிதென்றல்
கறைவளருங்கடலோதமென்றுங்கலிக்குங்கலிக்காமூர்
மறைவளரும்பொருளாயினைநினைமனத்தானினைந்தேத்த
நிறைவளரும்புகழெய்துமும்வாதைநினையாவினைபோமே. (சு)

கோலநன்மேனியின்மாதர்மைந்தர்கொணர்மங்கியத்திற்
காலமும்பொய்க்கிலுந்தாம்வழுவாதியற்றுங்கலிக்காமூர்
ஞாலமுந்தீவளிஞாயிறுயனம்பன்கழலேத்தி
யோலமிடாதவரூழியென்றுமுணர்வைத்துறந்தாரே. (எ)

ஊரரவந்தலைதீண்முடியாளெனிலீருலகாண்டு
காரரவக்கடல்சூழவாழும்பதியாங்கலிக்காமூர்
தேரரவல்குலம்பேதையஞ்சத்திருந்துவராபோர்த்தா
ரீரரவம்படவைத்தபாதமுடையானிடமாமே. (அ)

அருவரையேந்தியமாலுமற்றையலர்மேலுறைவானு
மிருவருமஞ்சவெரியுருவாயெழுந்தான்கலிக்காமூ
ரொருவனையான்மகள்பாகன்றன்னையுணர்வாற்றொழுதேத்தத்
திருமருவுஞ்சிதைவில்லச்செம்மைத்தேசுண்டவர்பாலே. (கூ)

மாசுபிறக்கியமேனியாருமருவுந்துவராடை
மீசுபிறக்கியமெய்யினருமறியாரவர்தோற்றங்
காசினிசீர்த்திரண்மண்டியெங்கும்வளமார்கலிக்காமூ
ரீசனையெந்தைபிராணையேத்தினினைவார்வினைபோமே. (கo)

ஆழியுணஞ்சமுதாரவுண்டன்றமரர்க்கமுதுண்ண
வூழிதோறுமுணராவளித்தானுலகத்துயர்கின்ற
காழியுண்ஞானசம்பந்தன்சொன்னதமிழார்கலிக்காமூர்
வாழியெம்மானைவணங்கியேத்தமருவாபிணிதானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கற்பகேசுவரர், தேவியார் - அழகுவளமுலையம்மை.

நீடுவலஞ்கழி - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பள்ளமதாயபடர்சடைமேற்பயிலுந்திரைக்கங்கை
வெள்ளமதாரவிரும்பிவின்றவிர்தன்விடையேறும்

வள்ளல்வலஞ்சுழிவாணனென்றுமருவினீர்த்தேத்தி
யுள்ளமுருகவுணருமின்னுறுதுகோயடையாவே. (க)

காரணிவெள்ளமதிலஞ்சூடிக்கமழ்புன்சடைதன்மேற்
றூரணிகொன்றையுத்தண்ணெருக்குக்கழையத்தழைவித்து
வாரணிகொங்கைகல்லாடனெம்மவலஞ்சுழிமேவியவ
ரூரணிபெய்பலிகொண்டுகத்தவுவகையறியோமே. (உ)

பொன்னியலுத்திருமேனிதன்மேற்புரிநூல்பொலிவித்து
மின்னியலுஞ்சடைதாழவேழுரிபோர்த்தரவாட
மன்னியமாமறையோர்கள்போற்றுமவலஞ்சுழிவாணர்தம்மே
லுன்னியசிந்தையினீங்கலில்லார்க்குயர்வாம்பிணிபோமே. (ங)

விடையொருபாலொருபால்விரும்புமெல்லியல்புல்கியதோர்
சடையொருபாலொருபாலிடங்கொடாழ்குழல்போற்றிசைப்ப
கடையொருபாலொருபாற்சிலம்புஞாளும்வலஞ்சுழிசே
ரடையொருப்பாலடையாதசெய்யுஞ்செய்கையறியோமே. (ச)

கையமரும்மழுவாகம்வீணைகலைமான்மறியேந்தி
மெய்யமரும்பொடிப்பூசிவீசுகுழையார்தருதோடும்
பையமரும்மரவாடலாடுப்படர்சடையார்க்கிடமா
மையமரும்பொழில்சூழ்ம்வேலிவலஞ்சுழிமாநகரே. (ஞ)

தண்டொடுசூலந்தழையவேந்தித்தையலொருபாகங்
கண்டிடுபெய்பலிபேணிநாணர்கரியினுரிதோலர்
வண்டிடுமொய்பொழில்சூழ்ந்தமாடவலஞ்சுழிமன்னியவர்
தொண்டொடுகூடித்துதைந்துன்றதொடர்வைத்தொடர்வோமே. (சு)

கல்லியலும்மலையங்கைநீங்கவளைத்துவளையாதார்
சொல்லியலும்மதின்மூன்றுஞ்செற்றசுடரானிடர்நீங்க
மல்லியலுந்திரடோளெம்மாதிவலஞ்சுழிமாநகரே
புல்லியவேந்தனைப்புல்கியேத்தியிருப்பவர்புண்ணியரே. (எ)

வெஞ்சினவாளரக்கன்வரையெடுவிறலாலெடுத்தான்றோ
ளஞ்சுமோராறிருநான்குமொன்றுமடர்த்தாரழகாய
கஞ்சிருள்கண்டத்துநாதனென்றுங்கணுகுமிடம்போலு
மஞ்சுலவும்பொழில்வண்டினெம்மவலஞ்சுழிமாநகரே. (அ)

ஏடியனுன்முகன்சீர்தெடுமாலெனநின்றவர்காணா
கூடியகூரெரியாய்நிமிர்ந்தகுழகருலகேத்த
வாடலவெண்டலைகையிலேந்திவலஞ்சுழிமேயவெம்மான்
பாடியநான்மறையாளர்செய்யுஞ்சரிதைபலபலவே. (க)

குண்டருமுண்துகுங்கூறையின்றிக்குழுவாருரைசீத்துத்
தொண்டருந்தன்றொழில்பேணின்றவமுலராமுலாடி
வண்டமரும்பொழின்மல்குபொன்னிவலஞ்சுழிவாணனெம்மான்
பண்டொருவேள்விமுனிந்துசெற்றபரிசேபகர்வோமே. (கo)

வாழியெம்மானெனக்கெந்தையேயவலஞ்சுழிமாகர்மேற்
காழியுண்ஞானசம்பந்தன்சொன்னகருத்தின்றமிழ்மாலை
யாழியிவையகத்தேத்தவல்லாரவர்க்குந்தமருக்கு
மூழியொருபேருமின்பமோர்க்கும்முருவும்முயர்வாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாரையூர் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கடலிடைவெங்கடுநஞ்சமுண்டகடவுள்விடையேறி
யுடலிடையிற்பொடிப்பூசவல்லானுமையோடொருபாக
னடலிடையிற்சிலதாங்கியெய்தவம்மானடியார்மே
னடலிலவினைத்தொகைதீர்த்துகந்தானிடநாரையூர்தானே. (க)

விண்ணின்மின்னேர்மதிதுத்திநாகம்விரிபூமலர்க்கொன்றை
பெண்ணின்முன்னேமிகவைத்துகந்தபெருமானெரியாடி
ரண்ணியதன்னடியார்களோடுந்திருநாரையூரானென்
றெண்ணுமினும்வினைபோகும்வண்ணமிறைஞ்சுநின்றிறைவாமே. (உ)

தோடொருகாதொருநாதுசேர்ந்தகுழையானிலைதோன்றும்
பீடொருகால்பிரியாதுநின்றபிறையான்மறையோதி
நாடொருகாலமுஞ்சேரநின்றதிருநாரையூரானைப்
பாடுமினீர்பழிபோகும்வண்ணம்பயிலுமுயர்வாமே. (ஙு)

வெண்ணிலவஞ்சடைசேரவைத்துவிளங்குத்தலையேந்திப்
பெண்ணிலமர்தொருகூறதாயபெருமானருளார்த
வண்ணன்மன்னியுறைகோயிலாகுமணிநாரையூர்தன்னை
நண்ணலமர்ந்துறவாக்குமின்கண்ணுடலிகரிசறுமே. (ச)

வானமர்தீவளிநீர்நிலனெய்வழங்கும்பழியாகு
மூனமின்னுயிர்தீங்குகுற்றமுறைவாற்பிறிதின்றி
நானமனரும்பொருளாகிநின்றுன்றிருநாரையூரொக்கை
கோனவனைக்குறுகக்குறுகாகொடுவல்வினைதானே. (ஞ)

கொக்கிறகுங்குளிர்சென்னிமத்தங்குலாயமலர்சூடி
யக்கரவோடனையார்த்துகந்தவழகன்குழகாக
நக்கமருந்திருமேனியாளன்றிருநாரையூர்மேவிப்
புக்கமரும்மனத்தோர்கடம்மைப்புணருமுகருனே. (கூ)

ஊழியுமின்பமுங்காலமாகியுயருந்தவமாகி
யேழிசையின்பொருள்வாழும்வாழ்க்கையினீயின்புணர்ப்பாகி
காழிகையும்பலஞாயிறுகிளர்நாரையூர்தன்னில்
வாழியர்மேதகுமைந்தர்செய்யும்வகையின்வினைவாமே. (எ)

கூசமிலாதரக்கன்வரையைக்குலுங்கவெடுத்தான்முரு
ணாசமதாகியிறவடர்த்தவிரலான்தரவாதார்

பேசவியப்பொடுபேணின்றபெரியோனிடம்போலுந்
தேசமுறப்புகழ்செம்மைபெற்றதிருகாழூர்தானே. (அ)

பூமகனும்மவனேப்பயந்தபுயலார்கிறத்தானு
மாமனவுந்திரிந்தேத்தக்காண்டலுமிதற்கரியாளூர்
பாமருவுங்குண்டர்தோர்களீண்டிப்பலவும்பணிசெய்யுந்
தேமருவுந்திகழ்சோலைசூழ்ந்ததிருகாழியூர்தானே. (கூ)

வெற்றரையாகியவேடங்காட்டித்திரிவார்துவராடை
யுற்றரையோர்களுரைக்குஞ்சொல்லெயணராதெழுமின்கள்
குற்றமிலாததோர்கொள்கையெம்மான்குழகன்மெழிலாரப்
பெற்றரவாட்டிவரும்பெருமான்றிருகாழியூர்சேர்வே. (கo)

பாடியலுந்திரைசூழ்புகலித்திருஞானசம்பந்தன்
சேடியலும்புகழோங்குசெம்மைத்திருகாழியூரான்மேற்
பாடியதண்டமிழ்மாலைபத்தும்பரவித்திரிந்தாக
வாடியசிந்தையினர்க்குரைங்குமவலக்கடலுனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய் - சாடிமேல்வைப்பு.

திருச்சிற்றம்பலம்.

வேதவேள்வியைகேதனைசெய்துழ
லாதமில்லியமனெடுதேரரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
பாதிமாதுடனையபரமனே
ஞாலமின்புகழேமிகவேண்டுதென்-னாலவாயிலுறையுமெம்மாதியே. (க)

வைதிகத்தின்வழியொழுகாதவக்
கைதவமுடைக்காரமண்டேரரை
யெய்திவாதுசெயத்திருவுள்ளமே
மைதிகழ்தருமாமணிகண்டனே
ஞாலமின்புகழேமிகவேண்டுதென்-னாலவாயிலுறையுமெம்மாதியே. (உ)

மறைவழக்கமிலாதமாபாவிகள்
பறிதலைக்கைபற்பாயுடுப்பார்களை
முறியவாதுசெயத்திருவுள்ளமே
மறியுலாங்கையின்மாமழுவாளனே
ஞாலமின்புகழேமிகவேண்டுதென்-னாலவாயிலுறையுமெம்மாதியே. (ங)

அறுத்தவன்கமராயினசீர்மையைக்
கறுத்தவாழமண்கையர்கடம்மொடுஞ்
செறுத்துவாதுசெயத்திருவுள்ளமே
முறித்தவான்மதிக்கண்ணிமுதல்வனே
ஞாலமின்புகழேமிகவேண்டுதென்-னாலவாயிலுறையுமெம்மாதியே. (ச)

அந்தணுளர்புரியுமருமறை
சிந்தைசெய்யாவருகாதிறங்களோச்
சித்தவாதுசெயத்திருவுள்ளமே
வெந்தநீறதணியும்விகிர்தனே
ஞாலகின்புகழேமிகவேண்டுந்தென்-னலவாயிலுறையுமெம்மாதியே. (நு)

வேட்டுவேள்விசெயும்பொருளேவிளி
மூட்டுசிச்சிந்தைமுருட்டமண்குண்டரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே
காட்டிலானேயுரித்தவெங்கள்வனே
ஞாலகின்புகழேமிகவேண்டுந்தென்-னலவாயிலுறையுமெம்மாதியே. (சு)

அழலதோம்புமருமறையோர்திறம்
விழலதென்னுமருகர்திறத்திறங்
கழலவாதுசெயத்திருவுள்ளமே
தழலிலங்குதிருவுருச்சைவனே
ஞாலகின்புகழேமிகவேண்டுந்தென்-னலவாயிலுறையுமெம்மாதியே. (எ)

நீற்றுமேனியராயினர்மேலுற்ற
காற்றுக்கொள்ளவுகில்லாவமணரைத்
தேற்றிவாதுசெயத்திருவுள்ளமே
யாற்றவாளரக்கர்க்குமருளினாய்
ஞாலகின்புகழேமிகவேண்டுந்தென்-னலவாயிலுறையுமெம்மாதியே. (அ)

நீலமேனியமணர்திறத்துகின்
சீலம்வாதுசெயத்திருவுள்ளமே
மாலுநான்முகனுங்காணபரியதோர்
கோலமேனியதாகியகுன்றமே
ஞாலகின்புகழேமிகவேண்டுந்தென்-னலவாயிலுறையுமெம்மாதியே. (கூ)

அனறுமுப்புரஞ்செற்றவழகின்
றுன்றுபொற்கழலேபேணுவருகரைத்
தென்றவாதுசெயத்திருவுள்ளமே
கன்றுசாக்கியர்காணுத்தலைவனே
ஞாலகின்புகழேமிகவேண்டுந்தென்-னலவாயிலுறையுமெம்மாதியே. (கo)

கூடலாலவாய்க்கோனேவிடைகொண்டு
வாடன்மேனியமணைவாட்டிட
மாடக்காழிச்சம்பந்தன்மதித்தவிப்
பாடல்வல்லவர்பாக்கியவாளரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியன் - தென்னாலவாயிலான் - தோணோக்கம்
தேவாரதரு - கூடச்சதுக்கம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணதுவுண்டரிமலரோன்காணு
வெண்ணுவல்விரும்புமயேந்திரருங்
கண்ணதுவோங்கியகயிலையாரு
மண்ணலாரூராதியானைக்காவே. (க)

வந்துமாலயனவர்காண்பரியார்
வெந்தவெண்ணீறணிமயேந்திரரு
கந்தவார்சடையுடைக்கயிலையாரு
மந்தணரூராதியானைக்காவே. (உ)

மாலயன்றேடியமயேந்திரருங்
காலனையுயிர்கொண்டகயிலையாரும்
வேலையதோங்கும்வெண்ணவலாரு
மாலையாரூராதியானைக்காவே. (ங)

கருடனையேறியயனோர்காணர்
வெருள்விடையேறியமயேந்திரருங்
கருடருகண்டத்தெங்கயிலையாரு
மருளனரூராதியானைக்காவே. (ச)

மதிரூதனனன்முகன்வணங்கியார்
மதியதுசொல்லியமயேந்திரருங்
கதிர்முலைபுல்கியகயிலையாரு
மதியனரூராதியானைக்காவே. (ஞ)

சக்கரம்வேண்டுமால்பிரமன்காணு
மிக்கவர்கயிலைமயேந்திரருந்
தக்கனைத்தலையரிதழலுருவ
ரக்கணிபவராரூராதியானைக்காவே. (சு)

கண்ணனுகான்முகன்காண்பரியார்
வெண்ணுவல்விரும்புமயேந்திரருங்
கண்ணப்பர்க்கருள்செய்தகயிலையெங்க
ளண்ணலாரூராதியானைக்காவே. (எ)

கடல்வண்ணனன்முகன்காண்பரியார்
தடவரையாரக்கனைத்தலைகெரித்தார்
விடமதுவுண்டமெம்மயேந்திரரும்
மடல்விடையாரூராதியானைக்காவே. (அ)

ஆதிமாலயனவர்காண்பரியார்
வேதங்கடிசெயுமயேந்திரருங்

காதிலொருகுழையுடைக்கயிலையாரு
மாதியாரூரெந்தையாரைக்காவே. (க)

அறிவிலமண்புத்தரறிவுகொள்ளேல்
வெறியமான்கரத்தாரூர்மையேத்திரரு
மறிகடலோனயன்றேடத்தாரு
மறிவரியகயிலையோரூரைக்காவே. (க0)

ஏனமாலயனவர்காண்பரியார்
கானமார்கயிலைநன்மையேந்திரரு
மானவாரூராதியாரைக்காவை
ஞானசம்பந்தனதமிழ்சொல்லுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆக பதிகம் - ௧0அ.

திருப்பிரமபுரம் - ரூடி.

திருச்சிற்றம்பலம்.

வரமதேகொளாவுரமதேசெயும்புரமெரித்தவன்பிரமநற்புரத்
தரனனமமேபரவுவார்கள்சீர்விரவுநீள்புவியே. (க)

சேணுலாமதில்வேணுமண்ணுளோர்காணமன்றலார்வேணுநற்புரத்
தாணுவின்கழல்பேணுகின்றவராணியொத்தவரோ. (உ)

அகலமார்தரைப்புகலுநான்மறைக்கிகலியோர்கள்வாழ்புகலிமாநகர்ப்
பகல்செய்வோனெதிர்ச்சகலசேகரனகிலகாயகனே. (ரு)

துங்கமாகரிபங்கமாவடுஞ்செங்கையானிகழ்வெங்குருத்திக
முங்கணனடித்தங்கையாற்றொழுதத்தங்குமோவினையே. (சு)

காணியொண்பொருட்கற்றவர்க்கிகையுடைமையோரவர்காதல்செய்யுநற்
றோணிவண்புரத்தாணியென்பவர்தூமதியினரோ. (டு)

ஏந்தராவெதிர்வாய்ந்தவண்ணிடைப்பூந்தேனெதியாள்சேர்ந்தபங்கினன்
பூந்தராய்தொழுமாந்தர்மேனிமேற்சேர்ந்திராவினையே. (கூ)

சுரபுரத்தினைத்துயர்செய்தாருகன்றுஞ்சவெஞ்சினக்காளியைத்தருஞ்
சிரபுரத்துளானென்னவல்லவர்சித்திபெற்றவரோ. (எ)

உறவுமாகியற்றவர்களுக்குமாநிதிகொடுத்துநீள்புவியிலங்குசீர்ப்
புறவமாநகர்க்கிறைவனேயெனத்தெறகிலாவினையே. (அ)

பண்புசேரிலங்கைக்குராதனன்முடிகள்பத்தையுங்கெடவெரித்தவன்
சண்பையாதிலயத்தொழுமவர்களைச்சாதியாவினையே. (கூ)

ஆழியங்கையிற்கொண்டமாலயனறிவொணாததோர்வடிவுகொண்டவன்
காழிமாநகர்க்கடவுணமமேகற்றனற்றவமே. (க0)

விச்சையொன்றிலாச்சமணர்சாக்கியப்பிச்சர்தங்களைக்கரிசறுத்தவன்
கொச்சைமாநகர்க்கன்புசெய்பவர்குணங்களுமினே. (கக)

கழுமலத்திறைவட்கடவுள்பாதமேகருதுஞானசம்பந்தனின்றமிழ்
முழுதுமும்வல்லவர்க்கின்பமேதருமுக்கணெம்மிறையே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

தீநுவிழிமிழலை - ஈரடி.

திருச்சிற்றம்பலம்.

வேவினேர்தருகண்ணினளுமைபங்கனங்கணன்மிழலைமாநக
ராலநீழலின்மேவினனடிக்கன்பர்துன்பிலரே. (க)

விளங்குஞான்மறைவல்லவேதியர்மல்குசீர்வளர்மிழலையானடி
யுளங்கொள்வார்தமையுளங்கொள்வார்வினையொல்லையாசறுமே. (உ)

விசையினெடுமூபசையுஞ்சினையலசவுசெய்தவன்மிழலைமாநக
ரிசையுமீசனைநசையின்மேவினன்மிசைசெயாவினையே. (ரு)

வெண்றிசேர்கொடிமூமொமதின்மிழலைமாநகர்மேவிநாடொறு
நின்றவாதிதன்னடிநினைப்பவர்துன்பமொன்றிலரே. (சு)

போதகந்தனையுரிசெய்தோன்புயநேர்வரும்பொழின்மிழலைமாநக
ராதரஞ்செய்தவடிகள்பாதமலாலோர்பற்றிலமே. (டு)

தக்கன்வேள்வியைச்சாடினர்மணிதொக்கமாளிகைமிழலைமேவிய
கக்கனரடிதொழுவர்மேலவினைநாடொறுங்கெடுமே. (கூ)

போரணவுமுப்புரமெரித்தவன்பொழில்கள்சூழ்தருமிழலைமாநகர்ச்
சேருமீசனைச்சிந்தைசெய்பவர்தீவினைகெடுமே. (எ)

இரக்கமிற்குழிலரக்கனுருடனெருக்கினன்மிகுமிழலையானடி
சிரக்கொள்பூவெனவொருக்கினர்புகழ்பரக்குநீள்புவியே. (அ)

துன்றுபூமகன்பன்றியானவனென்றுமோர்கிலாமிழலையானடி
சென்றுபூம்புனனின்றுதூவிணைந்றுசேர்பவரே. (கூ)

புத்தர்கைச்சமண்பித்தர்பொய்க்குவைவைத்தவித்தகன்மிழலைமாநகர்
சித்தம்வைத்தவரித்தலத்திறுண்மெய்த்தவரே. (கo)

சந்தமார்பொழின்மிழலையீசனைச்சண்பைஞானசம்பந்தன்வாய்நவில்
பத்தமார்தமிழ்பத்தும்வல்லவர்பத்தராகுவரே. (கச)

திருச்சிற்றம்பலம்.

தீநுப்பல்லவனீச்சரம் - ஈரடி.

திருச்சிற்றம்பலம்.

பாசுபாணியர்பாடல்வீணையர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தாசுபேணினின்றூரிவர்தன்மையறிவாரார். (க)

பட்டகெற்றியர்நட்டமாடுவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திட்டமாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (உ)

பவளமேனியர்திகழ்நீற்றினர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தழகராயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (ரு)

பண்ணில்யாழினர்பயிலுமொல்லையர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தண்ணலாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (சு)

பல்லிலோட்டினர்பலிகொண்டுண்பவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தெல்லியாட்டுகந்தாரிவர்தன்மையறிவாரார். (டு)

பச்சைமேனியர்பிச்சைகொள்பவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திச்சையாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (கூ)

ஈபங்கணெற்றினர்திங்கள்சூடுவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தெங்குமாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (எ)

பாதங்கைதொழுவதற்கோதுவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தாதியாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (அ)

படிகொண்மேனியர்கடிகொள்கொன்றையர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தடிகளாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (கூ)

பறைகொள்பாணியர்பிறைகொள்சென்னியர்பட்டினத்துறைப்பல்லவனீச்சரத்,
திறைவராயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (கo)

வானமாள்வதற்கூனமொன்றிலாமதர்ப்பல்லவனீச்சரத்தானை
ஞானசம்பந்தனற்றமிழ்சொல்லவல்லவர்நல்லரோ. (கக)

திருச்சிற்றம்பலம்.

நிருக்கழுமலம் - நிருஇயமகம்.

திருச்சிற்றம்பலம்.

உற்றுமைசேர்வதுமெய்யினையேயுணர்வதுகின்னருண்மெய்யினையே
கற்றவர்காய்வதுகாமனையேகனல்விழிகாய்வதுகாமனையே
யற்றமறைப்பதுமுன்பணியேயமரர்கள்செய்வதுமுன்பணியே
பெற்றமுகந்ததுகந்தனையேபிரமபுரத்தையுகந்தனையே. (க)

சதிமிகவந்தசலந்தரனேதடிசிரநேர்கொள்சலந்தரனே
யதிரொளிசோதிகிரிப்படையாலமர்ந்தனரும்பர்துதிப்படையான்
மதிதவழ்வெற்பதுகைச்சிலையேமருவிடமேற்பதுகைச்சிலையே
விதியினினிட்டார்விரும்பரனேவெணுபுரத்தைவிரும்பரனே. (உ)

காதமரத்திகழ்தோடினனேகானவுனுய்க்கடிதோடினனே
பாதமதாற்கூற்றுதைத்தனனேபார்த்தனுடலம்புதைத்தனனே
தாதவிழ்கொன்றைதரித்தனனேசார்ந்தவினையதரித்தனனே
போதமமருமுளைப்பொருளேபுகலியமர்ந்தபரம்பொருளே. (ங)

மைத்திகழ்கஞ்சுமிழ்மாசுணமேமகிழ்ந்தசைசேர்வதுமாசுணமே
மெய்த்துடல்பூசுவர்மேன்மதியேவேதமதோதுவர்மேன்மதியே
பொய்த்தலையோடொருமத்தமதேபுரிசடைவைத்ததுமத்தமதே
வித்தகராயவெங்குருவேவிரும்பியமர்ந்தனர்வெங்குருவே. (ச)

உடன்பயில்கின்றனன்மாதவனேயுறுபொறிகாய்ந்திசையாதவனே
திடம்படமாமறைகண்டனனேதிரிகுணமேவியகண்டனனே
படங்கொளரவரைசெய்தனனேபகடிரிகொண்டாசைசெய்தனனே
தொடர்ந்தடியார்க்கொருநஞ்சிவனேதோணிபுரத்துறைநஞ்சிவனே. (ரு)

திகழ்கையதும்புகைதங்கழலேதேவர்தொழுவதுந்தங்கழலே
இகழ்பவர்தாமொருமானிடமேயிருந்தனுவோடெழின்மானிடமே
மிகவருசீர்கொளுமஞ்சடையேமின்னிகர்கின்றதுமஞ்சடையே
தகவிரதங்கொள்வர்சுந்தரோதக்கதராயுறைசுந்தரரோ. (சு)

ஓர்வருகண்களிணைக்கயலேயுமையவள்கண்களிணைக்கயலே
யேர்மருவுங்கழனகமேதெழில்கொளுதாசனனகமேத
நீர்வருகொந்தளகங்கையதேதெடுஞ்சடைமேவியகங்கையதே
சேர்வருயோகதியம்பகனேசிரபுரமேயதிகம்பகனே. (எ)

ஈண்டுதுயிலமரப்பினனேயிருங்கணிடந்தடியப்பினனே
தீண்டலரும்பரிசக்கரமேதிகழ்தொளிசேர்வதுசக்கரமே
வேண்டிவருந்தகைத்தலையேயமிகைத்தவரோடுகலகத்தலையே
பூண்டனர்சேரலுமாபதியேபுறவமமர்ந்ததுமாபதியே. (அ)

மின்மணிவாயதுழலையேசமதானவர்ழலையே
யுன்னமகத்தெழுசங்கமதெயொளியதனெறுசங்கமதே
கன்னிபசைக்கவருங்களனேகடல்விடமுண்டகருங்களனே
மன்னிவரைப்பதிசண்பையதேவாரிவயன்மலிசண்பையதே. (கூ)

இலங்கையரக்கர்தமக்கிறையேயிடந்துகயிலையெடுக்கிறையே
புலன்கள்கெடவுடன்பாடினனேபொறிகள்கெடவுடன்பாடினனே
இலங்கியமேனியிராவணனேயெய்துபெயருமிராவணனே
கலந்தருன்பெற்றதுமாவசியேகாழியானடிமாவசியே. (கo)

கண்ணிகள்புண்டரிகத்தினனேகலந்திருண்டரிகத்தினனே
மண்ணிகழும்பரிசேனமதேவானகமேய்வகைசேனமதே
கண்ணியடிமுடியெய்தலரோளிர்மலிசோலியிலெய்தலரோ
பண்ணியல்கொச்சைப்பசுபதியேபசுமிகவூர்வர்பசுபதியே. (கக)

பருமதின்மதுரைமன்னவையெதிரேபதிகமதெழுதிலேபவையெதிரே
வருநதியிடைமிசைவருகரனேவசையொடுமெலர்கெடவருகரனே
கருதலிலிசைமுரறருமருளேகழுமலமமரிறைதருமருளே
மருவியதமிழ்விரகன்மொழிவேவல்லவர்தம்மிடர்நிடமொழியே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

நீடூர்வேதம்பம் - நீடூர்யமகம்.

திருச்சிற்றம்பலம்.

பாயுமால்விடைமேலொருபாகனேபாவைதன்னருமேலொருபாகனே
தூயனானவர்வேதத்துவனியேசோதிமாலெரிவேதத்துவனியே

யாயுநன்பொருணுண்பொருளாதியேயாலநீழலவரும்பொருளாதியே
காயவின்மதன்பட்டதுகம்பமேகண்ணுதற்பரமற்கிடங்கம்பமே. (க)

சடையணிந்ததுவெண்டலைமாலையேதம்முடம்பிலும்வெண்டலைமாலையே
படையிலங்கயிற்சூலமதென்பதேபரந்திலங்கையிற்சூலமதென்பதே
புடைபரப்பனபூதகணங்களேபோற்றிசைப்பனபூதகணங்களே
கடைகடோறுமிரப்பதுமிச்சையேகம்பமேவியிருப்பதுமிச்சையே. (உ)

வெள்ளெருக்கொடுதும்பைமிலைச்சியேவேறுமுன்செலுத்தும்பைமிலைச்சியே
யள்ளூறுதுப்புசுவதாகமேயானமாசுணமூசுவதாகமே
புள்ளியாடையுடுப்பதுகத்துமேபோனவூழியுடுப்பதுகத்துமே
கள்ளுலாமலர்க்கம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. (ங)

முற்றலாமையணிந்தமுதல்வரோமூரியாமையணிந்தமுதல்வரோ
பற்றிவாளரவாட்டும்பரிசரோபாலுநெய்யுகந்தாட்டும்பரிசரோ
வற்றலோடுகலம்பலிதேர்வதேவானிலோடுகலம்பலிதேர்வதே
கற்றிலாமனங்கம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. (ச)

வேடனாகிவிசையற்கருளியேவேலனாஞ்சமிசையற்கருளியே
யாடுபாம்பரையார்த்ததுடையதேயஞ்சுபூதமுமார்த்ததுடையதே
கோடுவான்மதிக்கண்ணியழகிதேகுற்றமின்மதிக்கண்ணியழகிதே
காடுவாழ்பதியாவதும்மதேகமபமாபதியாவதும்மதே. (ஞ)

இரும்புகைக்கொடிதங்கழல்கையதேதியமயமாமகடங்கழல்கையதே . . [கியே
யரும்புமொய்த்தமலர்ப்பொறைதாங்கியேயாழியான்றன்மலர்ப்பொறைதாங்
பெரும்பகனடமாடுதல்செய்ததுமேபதைமார்மனம்வாடுதல்செய்ததுமே
கரும்புமொய்த்தெழுகம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. (ட)

முதிரமங்கைதவஞ்செய்தகாலமேமுன்புமங்கைதவஞ்செய்தகாலமே
வெதிர்களோடகில்சந்தமுருட்டியேவேழமோடகில்சந்தமுருட்டியே
யதிரவாறுவரத்தெழுவத்தொடேயானையாடுவரத்தெழிவத்தொடே
கதிர்கொள்பூண்முலைக்கம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. (எ)

பண்டரக்கனெடுத்தபலத்தையேபாய்தரக்கனெடுத்தபலத்தையே
கொண்டரக்கியதுங்கால்விரலேயேகோளரக்கியதுங்கால்விரலேயே
யுண்டுழன்றதுமுண்டத்தலையிலேயுடுபதிக்கிடமுண்டத்தலையிலே
கண்டநஞ்சமடக்கினகம்பமேகடவுணீயிடங்கொண்டதுகம்பமே. (அ)

தூணியானசுடர்விடுசோதியேசுத்தமானசுடர்விடுசோதியே
பேணியோடுபிரமப்பறவையேபித்தனைபிரடப்பறவையே
சேணிலேறுகிழுழிதிரிந்துமேசித்தமோடுகிழுழிதிரிந்துமே
காணகின்றனருற்றதுகம்பமேகடவுணீயிடமுற்றதுகமபமே. (கூ)

ஓருடம்பினையீருருவாகவேயுன்பொருட்டிறமீருருவாகவே
யாருமெய்தற்கரிதுபெரிதுமேயாற்றலெய்தற்கரிதுபெரிதுமே
தேரரும்மதியாதுதிகைப்பசெய்தமும்மதியாதுதிகைப்பரோ
காரிறத்தமணர்க்கொருகம்பமேகடவுணீயிடங்கொண்டதுகம்பமே. (கூ)

கந்தமார்பொழில்சூழ்தருகம்பமேகாதல்செய்பவர்தீர்த்திகம்பமே
புந்திசெய்துவிரும்பிப்புகவியேபூசுரன்றன்விரும்பிம்புகவியே
யந்தமில்பொருளாயினகொண்டேமெய்ண்ணவின்பொருளாயினகொண்டுமே
பந்தனின்னியல்பாடியபத்துமேபாடவல்லவராயினபத்துமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஏகாம்பரநாதர், தேவியார் - காமாக்ஷியம்மை.

திருவாலவாய் - திருஇயமகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆலநீழலுகந்திருக்கையேயானபாடலுகந்திருக்கையே
பாலினேர்மொழியாளொருபங்கனேபாதமோதலர்சேர்புரபங்கனே
கோலநீணிமேதகுபூதனேகோதிலார்மனமேவியபூதனே
யாலகஞ்சமுதுண்டகளத்தனேயாலவாயுறையண்டர்களத்தனே. (க)

பாதியாயுடன்கொண்டதுமாலையேபாம்புதார்மலர்க்கொன்றைதன்மாலையே
கோதினீரதுபூசிமோகனேகொண்டுநற்கையின்மானிடமாகனே
காதலொடுமாடுவதானேயோடியன்றுரிசெய்ததுமானேயே
வேதநூல்பயில்கின்றதுவாயிலேவிகிர்தனூர்திருவாலவல்வாயிலே. (உ)

காடுநீடுறப்பலகத்தனேகாதலானினைவார்தமக்கத்தனே
பாடுபேயொடுபூதமிக்கவேபல்பிணத்தசைகாடியசிக்கவே
நீமொடுமாடவிருப்பனேன்னடித்தொழாருமிருப்பனே
யாடனீள்சடைமேவியவப்பனேயாலவாயினின்மேவியவப்பனே. (ங)

பண்டயன்றலையொன்றுமறுத்தியேபாதமோதினர்பாவமறுத்தியே
தண்டவெண்பிறைசென்னியிருத்தியேதூயவெள்ளெருதேறியிருத்தியே
கண்டகாமனைவேவவிழித்தியேகாதலில்லவர்தம்மையிழித்தியே
யண்டகாயகனேமிகுகண்டனேயாலவாயினின்மேவியகண்டனே. (ச)

சென்றுதாதையுகுத்தனன்பாலையேசீரியன்புசெகுத்தனன்பாலையே
வென்றிசேர்மழுக்கொண்டுமுன்காலிபேரிடவெட்டிடக்கண்டுமுனகாலையே
நின்றமாணிபையோடினகங்கையானிலவமல்கியுதித்தனகங்கையா
லன்றுநின்னுருவாகத்தடவியேயாலவாயரனாகத்தடவியே. (ஞ)

நக்கமேகுவர்நாடுமோருருமோதன்மேனியின்மாசுணமூருமே
தக்கயாகமழிச்சுதக்கருளொடேதாரமுய்த்ததுபாணற்கருளொடே
மிக்கதென்னவன்றேவிக்கணியையேமெல்லநல்கியதொண்டர்க்கணியையே
யக்கினாமுதுண்கலனேடுமேயாலவாயரனருமையோடுமே. (ட)

வேய்பயன்பல்லுகுத்ததுகுட்டியேவெங்கண்மாசுணங்கையதுகுட்டியே
யையனேயனலாடியமெய்யனேயன்பினினைவார்க்கருண்மெய்யனே
வையமுய்யவன்றுண்டதுகாளமேவள்ளல்கையதுமேவுகங்காளமே
யையமேற்பதுகாப்பதுவீணையேயாலவாயான்கையதுவீணையே. (எ)

தேவாரப்பதிகங்கள்.

தோள்கள்பத்தொடுபத்துமையக்கியேதொக்கதேவர்செருக்கையக்கியே
வாளரக்கனிலத்துகளித்துமேவந்தமால்வரைகண்டெளித்துமே
நீள்பொருப்பையெடுத்தவுன்மத்தனேனின்விரற்றலையான்மதமத்தனே (அ)
யாளுமாதிமுமித்ததுமெய்கொலோவாலவாயரணுய்த்ததுமெய்கொலோ
பங்கயத்துளநான்முகன்மாலொடேபாதநீண்முடிதேடிமாலொடே
தங்கநற்றழலின்னுருவாயுமேதூயபாடல்பயின்றதுவாயுமே (கூ)
செங்கயற்கணினூரிடிபிச்சையேசென்றுதொண்டைசெய்வதுபிச்சையே
யங்கிலைத்திகழ்வில்பதிடக்கையேயாலவாயானரதிடக்கையே.
தேரோடமனர்க்குலகாளையேதேவர்நாடொறுஞ்சேர்வதுகாளையே
கோமாட்டதுபுன்டரிகத்தையேகொண்டநீள்கழல்புன்டரிகத்தையே (கo)
நேரிழாள்களிந்ததுமென்பதியாலவாயானரிடமென்பதே.
யாரமாகவுகந்ததுமென்பதியாலவாயினின்மேயசம்பந்தனே
ஈனனாகிடம்மொடுவிரகனேயறுபல்பொருண்முத்தமிழ்விரகனே (கக)
யானவாவர்வாயிலுனத்தனேயன்பராரனவர்வாயிலுனத்துமே.
காலுனைத்தனசெந்தமிழ்பத்துமேவலல்லவர்க்கிவைகற்றுமிழ்பத்துமே.

திருச்சிற்றம்பலம்.

ஆக பதிகம் - ககச.

திருவீழிமிழலை - திருநியமம்.

திருச்சிற்றம்பலம்.

நன்றுகொன்றைநறுஞ்சடையதே தனுபகண்டநஞ்சடையதே (க)
கன்றின்மாவிடக்கையதேலினமானினிடப்பகையதே
பென்றுமேறுவதிடவமேயென்னினிடப்பலியிடவமே
னன்றுமம்மிழலேபுள்ளுமேதோனேச்சிறி துமுள்ளுமே.
னேறதம்மிழலேபுள்ளுமேதோனேச்சிறி துமுள்ளுமே. (உ)
ஓதிவாயதுமாறைகளெயுரைப்பதுப்பலமாறைகளே
பாதிசொல்லடுதுர்மாதையேபயணிறேன்மிருமாலதேயே
காதுசேர்கனங்குழையதோகதலார்கனங்குழையரோ
வீதிவாயிமும்வேதியர்மிழலேமேவியவேதியா. (ங)
பாடுகின்றபண்டாரமேபத்தர்கள்பண்டாரமே
சூடுகின்றதுமம்தமேதொழுதவெண்ணெயுண்மத்தமே
நீடுசெய்வதுதக்கதிதென்னைநாத்திகம்பக்கதே
நாடுசோமிழலையுமோகநஞ்சழலையுமே. (ச)
கட்டுகின்றகழனகமேகாய்ததுமதனனகமே
பிட்டமாவதிசைபாடலெயிசைத்தநினைமர்பாடலே
கொட்டுவோன்முழவம்வாணனேகுலாயசிரிமுலைவாணனே
கட்டமாலுதசந்தியோனுய்த்தநிலைசந்தியே.

ஓவிலாதிங்காணமேயுன்னுமென்னுடைக்காணமே
யேவுசேர்வுன்னுணேயெயருளினின்றமொற்றுணேயே
பாவியாதுனைமெய்யிலேபயின்றுனின்னடிமெய்யிலே
மேவினுன்விறற்கண்ணனேமிழலைமேயமுக்கண்ணனே. (கூ)

வாய்த்தமேனியெரிவண்ணமேமகிழ்த்துபாடுவதுவண்ணமே
காய்த்துவீழ்ந்தவன்காலனேகடுடஞ்செயுங்காலனே
போக்குதெம்மிடையிரவிலேயும்மிலடக்கள்ளமிரவிலே
மேய்த்தும்மிழலையெனபதேவிரும்பியேயணிவதென்பதே. (சு)

அப்பியன்றகண்ணயனுமேயமரர்கோமகனுமயனுமே
பொப்பிலின்றமரர்தருவதேயொண்கையாலமரர்தருவதே
மெய்ப்பயின்றவிருக்கையேமிழலையூருமிருக்கையே
செப்புமினனிருதுமேயுமேசேர்வுமக்கெருதுமேயுமே. (எ)

தானவக்குலம்விளக்கியேதாரகைச்செலவிளக்கியே
வானடர்த்தகயிலாயமேவுதுமேவுகயிலாயமே
தானெடுத்தவல்லரக்கனேதடுமுடித்திரளரக்கனே
மேனடைச்செலவிருப்பனேமிழலைநற்பதிவிருப்பனே. (அ)

காயமிக்கதாருபன்றியேகலந்தின்னவுருபன்றியே
யேயவிப்புவிமயங்கவேயிருவர்தாமனமயங்கவே
தூயமெய்த்திரளுகண்டனேதோன்றின்றமணிகண்டனே
மேயவித்துயிலுலக்கணமிழலைமேவியவிலக்கணம். (கூ)

கஞ்சியைக்குலவுகையனேகலக்கமாரமணர்கையனே
யஞ்சவாதிலருள்செய்யவேயணைந்திடும்பரிசுசெய்யனே
வஞ்சனேவரவும்வல்லியேமதித்தனேச்சிறுதும்வல்லியே
வெஞ்சமின்றிவருவித்தகாமிழலைசேரும்விறல்வித்தகா. (கூ)

மேயசெஞ்சடையினப்பனேமிழலைமேவியவென்னப்பனே
யேயுமாசெயவிருப்பனேயிசைந்தவாசெயவிருப்பனே
காயவர்க்கருளுசெய்தனேகாழிஞானசம்பந்தனே
வாயுரைத்ததமிழ்பத்துமேவல்லவர்க்குமிவைபத்துமே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகாழி - நீநமாலைமாற்று.

திருச்சிற்றம்பலம்.

யாமாமாரீயாமாமாயாழீகாமாகாணுகா
காணுகாமாகாழீயாமாமாயாரீமாமாயா. (க)

யாகாயாழீகாயாகாதாயாராராதாயாயா
யாயாதாராராதாயாதாகாயாகாழீயாகாயா. (உ)

தாவாமூவாதாசாகாழீதாரீயாமாமா
மாமாயாரீதாராழீகாசாதாவாமூவாதா. (உ)

ரீவாவாயாகாயாழீகாவாவாளேவாராமே
மேராவாளேவாவாகாழீயாகாயாவாவாரீ. (ச)

யாகாலாமேயாகாழீயாமேதாவீதாயாவீ
வீயாதாவீதாமேயாழீகாயாமேலாகாயா. (ஞ)

மேலேலோகாமேதேதழீகாலாலேகாலாளுயே
யேளுலாகாலேலாகாழீதேமேகாபோலேமே. (ரு)

ரீயாமாரீயேயாமாதாவேழீகாரீதானே
ரேதாரீகாழீவேதாமாயாயேரீமாயாரீ. (எ)

ரேணவராவிழுயாசைழியேவேகதளேரியளாயுழிகா
காழியுளாயரிளேத்கவேயேழிசையாழவிராவணனே. (அ)

காலேமேலேகாணீகாழீகாலேமாலேமேபூ
பூமேலேமாலேகாழீகாணீகாலேமேலேகா. (கூ)

வேரியுமேணவகாழியொயேயேனேரிணேமடளோகரர்தே
தேரர்களோடமணேரினேயேயேயொழிகாவணமேயுரிவே. (க0)

ரேரகழாமிதயாசழிதாயேணனியேணனினாயுழிகா
காழியுளானினயேனினயேதாழிசயாதமிழாகரவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தீருக்கழுமலம்-பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மடமலிகொன்றைதுன்றுவாளெருக்கும்வன்னியுமத்தமுஞ்சடைமேற்
படலொலிதிவாகண்மோதியகங்கைத்தலைவனுர்தம்மிடம்பகரில்
விடலொலிபரந்தவெண்டலைமுத்தமிப்பிகள்கொணர்ந்துவெள்ளருவி
கடலொலியோதமோதவந்தலைக்குங்கழுமலமதுகொலாமே. (க)

மின்னிபவரவும்வெறிமலர்ப்பலவும்விரும்பியதிங்களுந்தங்கு
சென்னிபதுடையான்றேவர்தம்பெருமான்சேயிழையொடுமுறைவிடமாம்
பொன்னியன்மணியுமுரிகரிமருப்புஞ்சந்தமுமுந்துவன்றிரைகள்
கன்னியாடக்கடலொலிமலியுங்கழுமலமதுகொலாமே. (உ)

சிருறுதோண்டர்கொண்டடிபேற்றச்செழுமலர்புனலொடுதூபந்
தாருறுகொன்றைதம்முடிவைத்தசைவனுர்தங்கிடமெங்கு
மூருறுபதிகளுலகுடன்பொங்கியொலிபுனல்கொளவுடன்மிதந்த
காருறுசெம்மைசன்மையாள்மிக்கழுமலமதுகொலாமே. (ங)

மண்ணினுரேத்தவானுளார்பாசவர்தரத்தமர்கள்போற்றப்
பண்ணினுரொல்லாம்பலபுலவேடமுடையவர்பயில்விடமெங்கு

மெண்ணினுன்மிக்காரியல்பினினைத்தாநோக்திழையவரொடுமைத்தர்
கண்ணினுவின்பங்கண்டொளிபரக்குங்கழுமலமகொனலாமே. (சு)

சுருதியான்றலையுராமகண்மூக்குஞ்சுடரவன்கரமுமூன்னியங்கு
பருதியான்பல்லுமிறுத்தவர்க்கருளும்பரமனூர்பயின்றினிதிருக்கை
விருதிகான்மறையுமங்கமோராறும்வேள்வியும்வேட்டவர்ஞானங்
கருதினுருலகிற்கருத்துடையார்சேர்கழுமலமகொனலாமே. (டு)

புற்றில்வாளரவுமாமையும்பூண்டபுனிதனூர்பனிமலர்க்கொன்றை
பற்றிவான்மதியஞ்சடையிடைவைத்தபடிறனூர்பயின்றினிதிருக்கை [ங்
செற்றுவன்றினைகளொன்றுடொன்றுடிச்செயிர்த்துவண்சங்கொடுவங்க
கற்றுறைவனைகள்கைக்குவந்துரைக்குங்கழுமலமகொனலாமே. (சு)

அலைபுனற்கங்கைதங்கியசடையாரடனெமதிலொருமூன்றுங்
கொலையிடைச்செந்தீவெந்தறக்கண்டகுழகனூர்கோயிலதென்பர்
மலையின்மிக்குயர்ந்தமரக்கலஞ்சரக்குமற்றுமற்றிடையிடையெங்குங்
கலைகளித்தேதறிக்கானலில்வாழுங்கழுமலமகொனலாமே. (எ)

ஒருக்கமுன்னினையாத்தக்கன்றன்வேள்வியடைதரவுழறிப்படையா
ரரக்கனைவனையாலாற்றலன்றழித்தவழகனூரமர்ந்துறைகோயில்
பரக்குமண்புனார்பழியைவபார்த்துப்பலபலவறங்களேபயிற்றிக்
கரக்குமாறறியாவண்மையால்வாழுங்கழுமலமகொனலாமே. (அ)

அருவரைபொறுத்தவர்ற்றலினுமணிகிளர்தாமரையானு
மிருவருமேத்தவெரியுருவானவிறைவனூருறைவிடம்வினவி
லொருவரிவ்வுலகில்வாழ்கிலாவண்ணமொளிபுனலவெள்ளமுன்பரப்பக்
கருவரைசூழ்ந்தகடலிடைமிகக்குங்கழுமலமகொனலாமே. (கூ)

உரிந்துயருருவிலுடைதவிர்ந்தாருமத்துகில்போர்த்துழல்வாருந்
தெரிந்துபுன்மொழிகள்செப்பினகேளாச்செம்மையார்நன்மையாலுறைவாங்
குருந்துயர்கோங்குகொடிவிடுமுல்லைமல்லிகைசெண்பகம்வேங்கை [ங்
கருந்தடங்கண்ணினுங்கைகமார்கொய்யுங்கழுமலமகொனலாமே. (கo)

கானலங்கழனியோதம்வந்துலவுங்கழுமலமகருறைவார்மேல்
ஞானசம்பந்தனற்றமிழ்மாலைநன்மையாலுரைசெய்தூரில்வா
ரூனசம்பந்தத்துறுபிணிநீங்கியுள்ளமுமொருவழிக்கொண்டு
வானிடைவாழ்வர்மண்மிசைப்பிறவார்மற்றிதற்காணையுமதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நீருவிழிமிழலை-பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

புள்ளித்தேலாலடபூண்பதாகம்பூசுசாந்தம்பொடிநீறு [யோ
கொள்ளித்தீவிளக்குக்கூளிகள்கூட்டங்காளியைக்குணஞ்செய்கூத்துடை

னள்ளற்காராமையகுவோன்மதியமேய்க்கழட்டாழைகளானே
வெள்ளைக்கொம்பீனும்விரிபொழில்வீழிமிழலையானெனவினைகெடுமே. (க)

இசைந்தவாறடியாரிடுதுவல்வாளெரிமுகுசந்தனத்தினங்கமலப்
பசும்பொன்வாசிகைமேறபரப்புவாய்கரப்பாய்பத்திசெய்யாதவர்பக்க
லசும்புபாய்கழனியலர்கயன்முதலோட்டித்தரிந்தெடுத்தவான்சும்மை
விசும்புதூர்ப்பனபோல்விம்மியவீழிமிழலையானெனவினைகெடுமே. (உ)

கிருத்தனுறங்கனீற்றனன்மறையனீலமார்மிடற்றனெற்றிக்க
ணெருத்தன்மற்றெல்லாவுயிர்கட்குமுயிராயளனிலன்கேடிலியுமைகோன்
றிருத்தமாய்ஞாலமாடுநீர்ப்பொய்கைசிறியவரறிவினின்மிக்க
விருத்தனையடிவீழ்ந்திடம்புகும்வீழிமிழலையானெனவினைகெடுமே. (ங)

தாங்கருங்காலந்தவிரவந்திருவர்தம்மொடுங்கூடினரங்கம்
பாங்கினர்பிரித்துப்பண்டுபோலெல்லாம்பண்ணியகண்ணுதற்பரமர்
தேங்கொள்பூங்கமுகுதெங்கிளங்கொடிமாச்சென்பகம்வண்பலாவிலுப்பை
வேங்கைபூமகிழாலவெயிற்புகாவீழிமிழலையானெனவினைகெடுமே. (ச)

கூசுமாமயானங்கோயில்வாயிற்கட்குடவயிற்றனசிலபூதம்
பூசுமாசாந்தம்பூதிமெல்லோதிபாதிநற்பொங்கரவனையோன்
வாசமாம்புன்னைமௌவல்செங்கழுநீர்மலரணைந்தெழுந்தவான்றென்றல்
வீசுமாம்பொழிற்றேன்றுவலைசேர்வீழிமிழலையானெனவினைகெடுமே. (ஞ)

பாதியோர்மாதர்மாலுமோர்பாகர்பங்கயத்தபனுமோர்பால
ராதியாய்நடுவாயந்தமாய்நின்றவடிகளாரமரர்கட்கமரர்
போதுசேர்சென்னிப்புரூரவாப்பணிசெய்பூசுரர்பூமகனனைய
வேதியர்வேதத்தொலியருவீழிமிழலையானெனவினைகெடுமே. (ட)

தன்றவம்பெரியசலந்தரனுடலந்தடிந்தசக்கரமெனக்கருளென்
றன்றரிவழிபட்டிழிச்சியவிமானத்திறையவன்பிறையணிசலடைய
னின்றகாள்காலியிருந்தகாண்மாலிகிடந்தமண்மேல்வருகலியை
வென்றவேதியாகள்விழாவருவீழிமிழலையானெனவினைகெடுமே. (ண)

கடித்தவாளரக்கன்கைலையன்றெடுத்தகரமுரஞ்சிரநெரிந்தலற
வடர்த்ததோர்விரலாலஞ்செழுத்துரைக்கவருளினன்றடமிகுநெடுவாள்
படித்தகான்மறைகேட்டிருந்தபைங்கிளிகள்பதங்களோதப்பாடிருந்த
விடைக்குலம்புயிற்றும்விரிபொழில்வீழிமிழலையானெனவினைகெடுமே. (அ)

அளவிடலுற்றவயனெடுமாலுமண்டமண்கிண்டியுங்காணா
முளையெரியாயமூர்த்தியைத்தீர்த்தமுக்கணெம்முதல்வனைமுத்தைத்
தளையவிழ்கமலத்தவிசின்மேலன்னந்தன்னிளம்பெடையொடும்புல்கி
விளைகதிர்கவரிவீசவீற்றிருக்குமிழலையானெனவினைகெடுமே. (க)

கஞ்சிப்போதுடையார்கையிற்கோசாரக்கலதிகள்கட்டுரைவிட்டு
வஞ்சித்தேவியவெழுந்தருஞ்சதனையுண்டமரர்க்கமுதருளி

யிஞ்சிக்கேகதலிக்கனிவிழக்கமுகின்குலையொடெம்பழம்விழத்தெங்கின்
மிஞ்சுசுக்கேமஞ்சுசேர்பொழில்வீழிமிழலையானைவிணங்கெடுமே. (கo)

வேத்தர்வந்திறைஞ்சவேதியர்வீழிமிழலையுள்விண்ணிழிவிமானத்
தேய்த்ததன்றேவியோடுகேறகின்றவீசனையெம்பெருமானைத்
தோய்த்தநீர்த்தோணிபுரத்துறைமறையோன்றமொழிஞானசம்பந்தன்
வாய்த்தபாமாலைவாய்ந்தவில்வாளைவானவர்வழிபடுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நிருவாலவாய்-பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைமடமானி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனல்வேதமும்பொருள்களுமருளி
பங்கயற்கண்ணிதன்னெடுமைமர்ந்தவாலவாயாவதுமிதுவே. (க)

வெற்றவேயடியாரடிமைசைவீழும்விருப்பினன்வெள்ளநீறணியுங்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்து
மொற்றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினிலியற்கையையொழிந்திட்
டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. (உ)

செந்துவர்வாயாள்சேலனகண்ணாள்சிவன்றிருநீற்றினைவளர்க்கும்
பந்தணைவிரலாள்பாண்டிமாதேவிபணிசெயப்பாரிடைநிலவுஞ்
சந்தமார்தரளம்பரம்புநீர்மத்தநதண்ணெருக்கம்மலர்வன்னி
யந்திவான்மதிசேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (ங)

கணங்களாய்வரினுந்தமியராய்வரினுமடியவர்தங்களைக்கண்டாற்
குணங்கொடுபெணியுங்குலச்சிறைகுலாவுங்கோபுரஞ்சூழ்மணிக்கோயின்
மணங்கமழ்கொன்றைவாளராமதியம்வன்னிவண்கூவிளமாலை
யணங்குவீற்றிருந்தசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (ச)

செய்யதாமரைமேலன்னமேயனபசெயிழைதிருவுதற்செல்வி
பையரவல்குற்பாண்டிமாதேவிநாடொறும்பணிந்தினிதேத்த
வெய்யவேற்சூலம்பாசமங்குசமான்விரிகதிர்மழுவுடன்றரித்த
வையனருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (ஞ)

கலமிலராகுகலமதுண்டாகுநாடவர்நாடறிகின்ற
குலமிலராக்குலமதுண்டாகுத்தவம்பணிகுலச்சிறைபரவுங்
கலைமலிகரத்தன்மூவிலைவேலன்கரியுரிமூடியகண்ட
னிலைமலிபுரிசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (சு)

முத்தின்முழுவடமுஞ்சந்தனக்குழம்புநீறுந்தன்மார்பினின்முயங்கப்
பத்தியார்ந்தபாண்டிமாதேவிபாங்கெ:பேணிசெயநின்ற

சுத்தமார்பளிங்கின்பெருமலையுடனேசுடர்மரகதமமைத்தாற்போ
லத்தனருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (எ)

நாவணங்கியல்வாமஞ்செழுத்தோதிநல்லராய்கல்வியல்வாகுங்
கோவணப்பூதிசாதனங்கண்டாற்றொழுதெழுகுலச்சிறைபோற்ற
வேவணங்கியல்வாமிராவணன்றிண்டோளிருபதுகெரிதரவூன்றி
யாவணங்கொண்டசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (அ)

மண்ணெலாநிகழமன்னனுய்மன்னுமணிமுடிச்சோழன்றன்மகளாம்
பண்ணினேர்மொழியாள்டாண்டிமாதேவிபாங்கினுற்பணிசெய்துபரவ
விண்ணுளாரிருவர்தொழுதேமேலுமளப்பரிதாம்வகைநின்ற
வண்ணலாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (கூ)

தொண்டராயுள்ளார்திசைதிசைதோறுந்தொழுதுதன்குணத்தினைக்குலாவக்
கண்டுநாடோறுமின்புறுகின்றகுலச்சிறைகருதிநின்றேத்தக்
குலடராயுள்ளார்சாக்கியர்தங்கள்குறியின்கணெறியிடைவாரா
வண்டனாயகன்றனமர்ந்துவீற்றிருந்தவாலவாயாவதுமிதுவே. (கo)

பன்னலம்புணருமாண்டிமாதேவிகுலச்சிறையெனுமிவர்பணியு
மன்னலம்பெறுசீராலவாயீசன்றிருவடியாங்கவைபோற்றிக்
கன்னலம்பெரியகாழியுள்ஞானசம்பந்தன்செந்தமிழ்வைகொண்
டின்னலம்பாடவல்லவரிமையோரேத்தவீற்றிருப்பவரினிதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பந்தணைநல்லூர் - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

இடறினர்கூற்றைப்பொடிசெய்தார்மதிலெயிலைசொல்லியலெழுந்தேத்தக்
கடறினராவர்காற்றுளாராவர்காதலித்துறைதருகோயில்
கொடிறனர்யாதுங்குறைவிலார்தாம்போய்க்கோவணங்கொண்டுகூத்தாடும்
படிறினர்போலும்பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (க)

கழியுளாரெனவுங்கடலுளாரெனவுங்காட்டுளார்நாட்டுளாரெனவும்
வழியுளாரெனவுமலையுளாரெனவுமண்ணுளார்விண்ணுளாரெனவுஞ்
சுழியுளாரெனவுஞ்சுவடுதாமறியார்தொண்டர்வாய்வந்தனசொல்லும்
பழியுளார்போலும்பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (உ)

காட்டினுளெனவுங்காட்டினுளெனவுங்கடுகுதொழிற்காலனைக்காலால்
வீட்டினுளெனவுஞ்சாந்தவெண்ணீறுபூசியோர்வெண்மதிசடைமேற்
சூட்டினுளெனவுஞ்சுவடுதாமறியார்சொல்லுளசொல்லுநல்வேதப்
பாட்டினுர்போலும்பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (ங)

முருகினுர்பொழில்சூழ்லகினுரோத்தமொய்த்தபல்கணங்களின்றுயர்தண்
டுருகினுராகியுறுதிபோற்துள்ளமொண்மையாலொளிதிகழ்மேனி
கருதினுரெல்லாங்கைதொழுதேத்தக்கடலுணஞ்சமுதமாவாங்கிப்
பருகினுர்போலும்பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (ச)

பொன்னினர்கொன்றையிருவடங்கிடந்துபொறிகிளர்பூணநூல்புரள
மின்னினருருவின்மிளிர்வதோரரவமேவுவெண்ணீறுமெய்பூசித்
துன்னினர்கால்வர்க்கறமமர்ந்தருளிநீதொன்மையார்தோற்றமுங்கேடும்
பன்னினர்போலும்பந்தணர்கல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (ரு)

ஒண்டொனரணையவண்ணல்வாழ்கெனவுமுமையவள்கணவன்வாழ்கெனவு
மண்பினர்பிரியாரல்லுநண்பகலுமடியவரடியிணைதொழவே
கண்பினலொல்லாகல்லலொன்றேதத்தவல்லவர்தீயொன்றேத்தும்
பண்பினர்போலும்பந்தணர்கல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (சு)

எற்றினரோதுமிடைகொள்வாரில்லையிருநிலம்வானுலகெல்லை
தெற்றினர்தங்கள்காரணமாகச்செருமலர்தடியிணைசேர்வான்
முற்றினர்வாழுமும்மதில்வேவமூவிலைச்சூலமுமழுவும்
பற்றினர்போலும்பந்தணர்கல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (எ)

ஒலிசெய்தகுழலின்முழவமதியம்பவோசையாலாடலறுத
கலிசெய்தபூதங்கையினலிடவேகலினற்பாய்த லுமரக்கன்
வலிகொள்வர்புலியினுரிகொள்வரோனவாழ்வுகன்முனுமோர்தலையிற்
பலிகொள்வர்போலும்பந்தணர்கல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (அ)

சேற்றினர்பொய்கைத்தாமனாயானுஞ்செங்கண்மாலிவரிருகூறுத்
தோற்றினர்தோற்றத்தொன்மையையறியார்துணைமையும்பெருமையுந்தம்மி
சாற்றினர்சாற்றியாற்றலோமென்னச்சரண்கொடுத்தவர்செய்தபாவம்
பாற்றினர்போலும்பந்தணர்கல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (கூ-கo)

கல்லிசைபூணக்கலிபொலிபோவாக்கழுமலமுழுதுபதிந்நின்னி
னல்லிசையாளன்ஞானசம்பந்தன்
பல்லிசைபகுவாய்ப்படுதலையேந்திமேவியபந்தணர்கல்லூர்
சொல்லியபாடல்பத்தும்வல்லவர்மேற்றுன்னல்வினைசூழகிலாவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆக பதிகம் - கஉo.

திருஓமாம்புலியூர் - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

பூங்கொடிமடவாளுமையொருபாகம்புரிதருசடைமுடியடிகள்
வீங்கிருணட்டமாடுமெம்விகிர்தர்விருப்பொடுமுறைவிடம்வினவிற்
றேங்கமழ்பொழிலிற்செழுமலர்கோதிச்செறிதருவண்டிசைபாடு
மோங்கியபுகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (க)

சம்பரற்கருளிச்சலந்தான்வீயத்தழலுமிழ்சக்கரம்படைத்த
வெம்பெருமானரிமையவரோத்தவினிதினங்குறைவிடம்வினவி
லம்பரமாகியழலுமிழ்புகையிற்குதியான்மழைபொழியு
மும்பர்களேத்துமோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (உ)

முதற்றிருமுறையின்
பதிக அட்டவணை.

பதிகப்பெயர்.	பக்கம்
பண்-நட்டபாடை.	
திருப்பிரமபுரம்	க
திருப்புகலூர்	உ
திருவலிதாயம்	ச
ஸ்ரீபுகலியுக் - திருவீழிமிழலையும் விளுவுரை	ஞ
திருக்காட்டுப்பள்ளி	சு
திருமருகலுக்- திருச்செங்காட்டங்குடியும்- விளுவுரை	அ
திருஎள்ளாறுக் - திருஆலவாயும்- விளுவுரை	கூ
திருஆவூர்ப்பசுபதீச்சரம்	க0
திருவேளுபுரம்	கஉ
திருஅண்ணுமலை	கங
திருவீழிமிழலை	கச
திருமுதுகுன்றம்	ககூ
திருவியலூர்	கஎ
திருக்கொடுங்குன்றம்	கஅ
திருநெய்த்தானம்	உ0
திருப்புள்ளமங்கை-திருஆலக்துறை	உக
திருஇடும்பாவனம்	உங
திருநின்றியூர்	உச
திருக்கழுமலம்-திருவிராகம்	உஞ
திருவீழிமிழலை-திருவிராகம்	உஎ
திருச்சிவபுரம்-திருவிராகம்	உஅ
திருமறைக்காடு-திருவிராகம்	உக
பண்-தக்கராகம்.	
திருக்கோலக்கா	ஙக
சீகாழி	ஙஉ
திருச்செம்பொன்பள்ளி	ஙங
திருப்புத்தூர்	ஙஞ
திருப்பன்கூர்	ஙசு
திருச்சோற்றுத்துறை	ஙஎ
திருநறையூர்ச்சித்தீச்சரம்	ஙக
ஸ்ரீபுகலி	ச0
திருக்குரங்கணின்முட்டம்	சக

பதிகப்பெயர்.	பக்கம்.
திருஇடைமருது	சங
திருஅன்பிலாலக்துறை	சச
சீகாழி	சஞ
திருவீழிமிழலை	சசு
திருஐயாறு	சஎ
திருப்பனையூர்	சஎ
திருமயிலாடுதுறை	சஅ
திருவேட்களம்	சக
திருவாழ்கொளிபுத்தூர்	ஞ0
திருப்பாம்புரம்	ஞஉ
திருப்பேணுபெருக்துறை	ஞங
திருக்கற்குடி	ஞச
திருப்பாச்சிலாச்சிராமம்-முயலகன்நீர்த்தது	ஞசு
திருப்பழையனூர்-திருஆலங்காடு	ஞஎ
திருஅதிகைவீரட்டானம்	ஞக
பண்-பழந்தக்கராகம்.	
திருச்சிரபுரம்	சு0
திருச்சேய்ஞலூர்	சுக
திருஎள்ளாறு	சுங
திருவலிவலம்	சுச
திருச்சோபுரம்	சுஞ
திருநெடுங்களம்	சுஎ
திருமுதுகுன்றம்	சுஅ
திருமேவாத்துராண்பனை பெண்பனையானது	சுக
திருமாற்பேறு	எ0
திருப்பாற்றுறை	எக
திருவேற்காடு	எஉ
திருக்கரவீரம்	எங
திருத்தூங்காணைமாடம்	எச
திருத்தோணிபுரம்	எஞ
திருச்செங்காட்டங்குடி	எசு
திருக்கோளிலி	எஅ
பண்-தக்கேசி.	
திருப்பிரமபுரம்-பல்பெயர்ப்பத்து	எக
திருப்பூவணம்	அ0

பதிகப்பெயர்.	பக்கம்.
காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம்	அஉ
திருச்சண்பைநகர்	அங
திருப்பழனம்	அச
ஸ்ரீகயிலாயம்	அடு
திருஅண்ணாமலை	அள
திருசங்கோய்மலை	அஅ
திருகறையூர்ச்சித்தீச்சரம்	அக
திருக்குடந்தைக்காரோணம்	கo
திருக்காளூர்	கஉ
திருப்புறவம்	கங
பண்-குறிஞ்சி.	
திருவெங்குரு	கச
திருஇலம்பையங்கோட்டூர்	கசு
திருஅச்சிறுபாக்கம்	கள
திருஇடைச்சுரம்	கக
திருக்கழுமலம்	கoo
கோயில்	கoஉ
சீகாழி	கoங
திருவீழிமிழலை	கoச
திருஅம்பர்மாகாளம்	கoடு
திருக்கடவூரைக்காரோணம்	கoசு
திருநல்லம்	கoஅ
திருநல்லூர்	கoக
திருவதிகை	ககo
திருஆப்பனூர்	ககஉ
திருஎருக்கத்தம்புலியூர்	ககங
தேவிருக்குகதறன்.	
திருப்பிரமபுரம்	ககச
திருஆரூர்	ககடு
திருவீழிமிழலை	ககசு
திருஆலவாய்	ககள
திருஇடைமருது	ககஅ
திருஅன்னியூர்	ககக
திருப்புறவம்	கஉo
திருச்சிராப்பள்ளி	கஉக
திருக்குற்றாலம்	கஉஉ
திருப்பரங்குன்றம்	கஉங
திருக்கண்ணார்கோயில்	கஉடு
சோழி	கஉசு
திருக்கழுக்குன்றம்	கஉள

பதிகப்பெயர்.	பக்கம்.
பண்-வியாழக்குறிஞ்சி.	
ஸ்ரீபுகலி	கஉஅ
திருஆரூர்	கஙo
திருஊரல்	கஙக
திருக்கொடிமாடச்செங்குன்றூர்	கஙஉ
திருப்பாதாளேச்சரம்	கஙங
திருச்சிரபுரம்	கஙடு
திருவிடைமருதூர்	கஙடு
திருக்கடைமுடி	கஙள
திருச்சிவபுரம்	கஙள
திருவல்லம்	கஙசு
திருமாற்பேறு	கசo
திருஇராமனதீச்சரம்	கசக
திருநீலகண்டம்	கசஉ
திருப்பிரமபுரம்	கசச
திருப்பருப்பதம்	கசடு
திருக்கள்ளில்	கசசு
தேவிராகம்.	
திருவையாறு	கசஅ
திருவிடைமருதூர்	கசக
திருவிடைமருதூர்	கடுo
திருவலிவலம்	கடுஉ
திருவீழிமிழலை	கடுங
திருச்சிவபுரம்	கடுச
திருக்கழுமலம் - திருத்தாளச்சதி	கடுடு
சீகாழி-திருஞகபாதம்	கடுள
திருஞகபாதத் திருவுள்ளக்கருத்து	கடுசு
திருவெழுகூற்றிருக்கை	கசுள
ஷை திருவுள்ளக்கருத்து	கசுள
பண்-மேகராகக்குறிஞ்சி.	
திருக்கழுமலம்	களஉ
திருவையாறு	களங
திருமுதுகுன்றம்	களடு
திருவீழிமிழலை	களசு
திருவேகம்பம்	களள
திருப்பறியலூர்-வீரட்டம்	களஅ
திருப்பாசபத்துறை	கஅo
பண்-யாழ்முரி.	
திருத்தருமபுரம்	கஅo

பாங்குடைத்தவத்துப்பரேதற்கருளிப்படர்சடைக்கரத்தீர்க்கங்கை
தாங்குதறவிர்த்துத்தராதலத்திழித்ததத்துவனுறைவிடம்வினவி
லாங்கெரிமூன்றுமமர்த்துடனிருத்தவங்கையாலாகுதிவேட்கு
மோங்கியமறையோரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (கூ)

புற்றரவணிந்துநீறுமெய்பூசிப்பூதங்கள்சூழ்தரவூரூர்
பெற்றமொன்றேறிப்பெய்பலிகொள்ளும்பிரானவனுறைவிடம்வினவிற்
கற்றநான்வேதமங்கமோராறுங்கருத்தினாருத்தியாற்றெரியு
முற்றபல்புகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (சு)

நிலத்தவர்வானமாள்பவர்தேவர்துயர்கெடநெடியமாற்கருளா
லலைத்தவல்லசுரராசறவாழியளித்தவனுறைவிடம்வினவிற்
சலத்தினாற்பொருள்கள்வேண்டுதல்செய்யாத்தன்மையார்நன்மையான்மிக்க
வுலப்பில்பல்புகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (டு)

மணந்திகழ்திசைகளெட்டுமேழிசையுமலியுமாறங்கமைவேள்வி
யினைந்தாய்வேதமூன்றெரியிரண்டுபிறப்பெனவொருமையாலுணருங்
குணங்களுமவற்றின்கொள்பொருள்குற்றமற்றவையுற்றதுமெல்லா
முணர்ந்தவர்வாழ்மோரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (கூ-எ)

தலையொருபத்துந்தடக்கையதிரட்டிதானுடையரக்கனெண்கயிலை
யலைவதுசெய்தவலன்றிறல்கெடுத்தவாதியாருறைவிடம்வினவில்
மலையெனவோங்குமாளிகைநிலவுமாமதின்மாற்றலொன்று
முலவுபல்புகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (அ)

கள்ளவிழ்மலர்மேலிருந்தவன்கரியோனென்றிவர்காண்பரிதாய
வொள்ளெரியுருவருமையவளோடுமுகந்தினிதுறைவிடம்வினவிற்
பள்ளநீர்வாளைபாய்தருகழனிப்பனிமலர்ச்சோலைசூழாலை
யொள்ளியபுகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (கூ)

தெள்ளியபால்லாத்தேரரோடமணர்தடுக்கொடுசீவரமுடுக்குங்
கள்ளமாமனத்துக்கலதிகட்கருளாக்கடவுளாருறைவிடம்வினவி
னள்ளிருள்யாமநான்மறைதெரிந்துரலந்திகழ்மூன்றெரியோம்பு
மொள்ளியார்வாழ்மோரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (கூ)

வினைதருவயலுள்வெயில்செறிபவளமேதிகண்மேய்புலத்திடறி
யொளிதரமல்குமோரோமமாம்புலியூருடையவர்வடதளியரனைக்
களிதருசிவப்பிற்காண்டகுசெல்வக்காழியுண்ஞானசம்பந்த
னளிதருபாடல்பத்தும்வல்லார்களமரலோகத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நீருக்கோணமாமலை - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

வினைகழலரவஞ்சிலம்பொலியலம்புமலர்நீணிதிருமேனி
வனைகெழுமகளோர்பாகமாப்புணர்ந்தவடிவினர்கொடியணிவிடையர்

கலைகெழுசந்துங்காசிற்பிளவுமளப்பருங்கனமணிவரன்றிக்
குலைகடலோதநித்திலங்கொழிக்குங்கோணமாமலையமர்ந்தாரே. (க)

கடிதெனவந்தகரிதனீயுரித்துவவ்வுரிமேனிமேற்போர்ப்பர்
பிடியனகடையாள்பெய்வளைமடந்தைபிறைதலவளொடுமுடனுய்க்
கொடிதெனக்கதறுங்குரைகடல்சூழ்ந்துகொள்ளமுனித்திலஞ்சுமந்து
குடிதனைநெருக்கிப்பெருக்கமாய்த்தோன்றுங்கோணமாமலையமர்ந்தாரே. (உ)

பனித்தினக்திங்கட்பைத்தலைநாகம்படர்சடைமுடியிடைவைத்தார்
கனித்தினக்துவர்வாய்க்காரிகைபாகமாகமுன்கலந்தவர்மதின்மேற்
றனித்தபேருருவவிழுத்தழனகந்தாங்கியமேருவெஞ்சிலையாக்
குனித்ததோர்வில்லார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே. (ங)

பழித்தினங்கங்கைசடைமுடிவைத்துப்பாங்குடைமதனனைப்பொடியா
விழித்தவன்றேவிவேண்டமுன்கொடுத்தவிமலனர்கமலமார்பாதர்
தெழித்துமுன்னரற்றுஞ்செழுங்கடற்றரளஞ்செம்பொனுமிப்பியுஞ்சுமந்து
கொழித்துவன்றிரைகள்கரையிடைச்சேர்க்குங்கோணமாமலையமர்ந்தாரே.(ச)

தாயினுல்லதலிவனென்றடியார்தம்மடிபோற்றிசைப்பார்கள்
வாயினுமனத்துமருவினிறகலாமாண்பினர்காண்பலவேடர்
கோயினும்பிணியுந்தொழிலர்பானீங்கிதுழைதருநாவினாஞாலங்
கோயினுஞ்சுனையுங்கடலுடன்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே. (ஞ)

பரிந்துகன்மனத்தால்வழிபடுமாணிதன்னுயிர்மேல்வருங்கூற்றைத்
திரிந்திடாவண்ணமுதைத்தவற்கருளுஞ்செம்மையார்கம்மையாளுடையார
விரிந்துயர்மௌவன்மாதவிபுன்னைவேங்கைவண்செருந்திசெண்பகத்தின்
குருந்தொடுமுல்லைகொடிவிடும்பொழில்சூழ்கோணமாமலையமர்ந்தாரே.சு-எ

ஏடுத்தவன்றருக்கையிழித்தவர்விரலாலேத்திடவாத்தமாம்பேறு
தொடுத்தவர்செல்வந்தோன்றியபிறப்புமிறப்பறியாதவர்வேள்வி
தடுத்தவர்வனப்பால்வைத்ததோர்கருணைதன்னருட்பெருமையும்வாழ்வுங்
கொடுத்தவர்விரும்பும்பெரும்புகழாளர்கோணமாமலையமர்ந்தாரே. (அ)

அருவராதொருகைவெண்டலையேந்தியகந்தொறும்பலியுடன்புக்க
பெருவராயுறையுநீர்மையர்சீர்மைப்பெருங்கடல்வண்ணனும்பிரம
னிருவருமறியாவண்ணமொள்ளெரியாயுயர்ந்தவர்பியர்ந்தவன்மாற்குங்
குருவராய்நின்றுரைத்குரைகழல்வணங்கக்கோணமாமலையமர்ந்தாரே. (கூ)

நின்றுணுஞ்சமணுமிருந்துணுந்தேருநெறியலாதனபுறங்கூற
வென்றுநஞ்சுகண்ணும்பரிசினொருபான்மெல்லியலொடுமுடனுகந்
தன்றுமொரண்பவ்வமவ்வலுஞ்சூழ்ந்துதாழ்ந்துறுதிரைபலயோதிக்
குன்றுமொண்கானல்வாசம்வந்துலவுங்கோணமாமலையமர்ந்தாரே. (கo)

குற்றமிலாதார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரைக்
கற்றுணர்கேள்விக்காழியர்பெருமான்கருத்துடைஞானசம்பந்த

னுற்றசெந்தமிழார்மாலைபீரைத்துமுரைப்பவர்கேட்டவருயர்க்தோர்
சுற்றமுமாகித்தொல்வினையடையார்தோன்றுவர்வானிடைப்பொலிக்தே. கக

திருச்சிற்றம்பலம்.

ஈழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கோணீசர், தேவியார் - மாதுமையம்மை.

நீருவெள்ளடை - பண் - அந்தாளிதுறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கண்ணவெண்ணீறணிமார்பிற்றோல்புனைந்
தெண்ணரும்பல்கணமேத்தநின்றாடுவார்
விண்ணவர்பம்பொழில்வெள்ளடைமேவிய
பெண்ணமர்மேனியெம்பிஞ்ஞகனாரே. (க)

திரைபுல்குகங்கைதிகழ்சடைவைத்து
வரைமகளோடடனாடுதிர்மல்கு
விரைகமழ்தண்பொழில்வெள்ளடைமேவிய
வரைமல்குவாளரவாட்டுகக்தீரே. (உ)

அடையலர்தென்னகர்மூன்றெரித்தன்ன
நடைமடமங்கையோர்பாகமர்ந்து
விடையுகந்தேறுதிர்வெள்ளடைமேவிய
சடையமர்வெண்பிறைச்சங்கரனீரே. (ங)

வளங்கிளர்கங்கைமடவரலோடு
களம்படவாடுதிர்காடரங்காக
விளங்கியதண்பொழில்வெள்ளடைமேவிய
விளம்பிறைசேர்சடையெம்பெருமானே. (சு)

சுரிகுழனல்லதுடியிடையோடு
பொரிபுல்குகாட்டிடையாடுதிர்பொங்கு
விரிதருபைம்பொழில்வெள்ளடைமேவிய
வெரிமழுவாட்படையெந்தைபிரானே. (ரு)

காவியங்கண்மடவாளொடுங்காட்டிடைத்
தீயகலேந்திநின்றாடுதிர்தேன்மலர்
மேவியதண்பொழில்வெள்ளடைமேவிய
வாவினிலேந்துகொண்டாட்டுகக்தீரே. (சு-எ-அ-கூ-கo-கக)

திருச்சிற்றம்பலம்.

நீருநல்லூர்ப்பெருமணம் - பண் - அந்தாளிதுறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கல்லூர்ப்பெருமணத்தேவண்டாகழுமலம்
பல்லூர்ப்பெருமணம்பாட்டுமெய்யாய்த்திலை

சொல்லூர்ப்பெருமணஞ்சூடலோதொண்டர்
கல்லூர்ப்பெருமணமேயநம்பானே. (க)

தருமணலோதஞ்சேர்தண்கடனித்திலம்
பருமணலாக்கொண்டுபாவைகல்லார்கள்
வருமணங்கூட்டிமணஞ்செயுங்கல்லூர்ப்
பெருமணத்தான்பெண்ணேர்பாகங்கொண்டானே. (உ)

அன்புறுசிந்தையராகியடியவர்
நன்புறுகல்லூர்ப்பெருமணமேவினின்
றின்புறுமெந்தையிணையடியேத்துவார்
துன்புறுவாரல்லாதொண்டுசெய்வாரே. (ங)

வல்வியந்தோலுடையார்ப்பதுபோர்ப்பது
கொல்லியல்வேழத்துரிவிரிகோவண
கல்லியலார்தொழுங்கல்லூர்ப்பெருமணம்
புல்லியவாழ்க்கையெம்புண்ணியனூர்க்கே. (ச)

ஏறுகந்தீரிடுகாட்டெரியாடிவெண்
ணீறுகந்தீர்கையார்விரிதேன்கொன்றை
காறுகந்தீர்திருங்கல்லூர்ப்பெருமணம்
வேறுகந்தீருமைகூறுகந்தீரே. (ஞ)

சிட்டப்பட்டார்க்கெளிபான்செங்கண்வேட்டுவப்
பட்டங்கட்டுஞ்சென்னிபான்பதியாவது
கட்டக்கொட்டாட்டறுங்கல்லூர்ப்பெருமணத்
திட்டப்பட்டாலொத்தீராலெம்பிரானீரே. (கூ)

மேகத்தகண்டனெண்டோளன்வெண்ணீற்றுமை
பாகத்தன்பாய்புலித்தோலொடுபக்தித்த
நாகத்தனல்லூர்ப்பெருமணத்தானல்ல
போகத்தன்யோகத்தையேபுரிந்தானே. (எ)

தக்கிருந்தீரன்றுதாளாலரக்கனை
யுக்கிருந்தொல்கவுயர்வரைக்கீழிட்டு
நக்கிருந்தீரின்றுகல்லூர்ப்பெருமணம்
புக்கிருந்தீரெமைப்போக்கருளீரே. (அ)

ஏலுந்தண்டாமரையானுமியல்வுடை
மாலுந்தம்மாண்பறிகின்றிலர்மாமறை
நாலுந்தம்பாட்டென்பர்கல்லூர்ப்பெருமணம்
போலுந்தங்கோயில்புரிசடையார்க்கே. (கூ)

ஆதாரமெனுமசாக்கியர்தாஞ்சொல்லும்
பேதைமைகேட்டுப்பிணக்குறுவீர்வம்மி

ஞதனைநல்லூர்ப்பெருமணமேவிய
வேதனதாடொழவீடெளிதாமே. (கo)

நறும்பொழிற்காழியுண்ஞானசம்பந்தன்
பெறும்பதநல்லூர்ப்பெருமணத்தானை
யுறும்பொருளாற்சொன்னவொண்டமிழ்வல்லார்க்
கறும்பழிபாவமவலமிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சிவலோகத்தியாகேசர், தேவியார் - சுகந்தகுமாரியம்மை.

ஆசு பதிகம் - கடை.

மூன்றாந்திருமுறை

முற்றிற்று.

மூவர்முதலிகளுக்குள் முதன்மையாகிய

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

மூன்றாந்திருமுறையும்

முற்றுப்பெற்றன.



திருச்சிற்றம்பலம்.

பரமசிவத்திலுடைய

அட்டவீரட்டம்.

பூமன்சிரங்கண்டியந்தகன்கோவல்புரமதிகை ...*
மாமன்பறியல்சலந்தான்விற்குடிமாப்பழுவூர் ... *
காமன்கொறுக்கையமன்கடவூரிற்தக்காசினியிற்* ...*
றேமன்னுகொன்றையுந்திங்களுஞ்சூடிதனசேவகமே.*

(இதன்பொருள்.)

கொன்றைப்பூமாலையுடன்சூடிய இளந்திங்களுந் தரித்துங்கொண் டருளிய பரமசிவம் வீரஞ்செலுத்தியது.—திருக்கண்டியூரில்-பிரமதே வன் சிரங்கொய்ததும்.—திருக்கோவலூரில்-அந்தகாசுரனை யெரித்த தும்.—திருவதிகையில்-திரிபுரம் எரித்ததும்.—திருப்பறியலூரில்-தக் கன்முடி தடிந்ததும்.—திருவிற்குடியில்-சலந்தரனைத் தலைபரிந்ததும்.— திருப்பழுவூரில்-யானையையுரித்ததும்.—திருக்கொறுக்கையில்-மன் மதனைத் தகனஞ்செய்ததும்.—திருக்கடவூரில்-யமனை யுதைத்ததும்.